பாரத தேவி

நிர்வாக ஆசிரியர் வ. ரா. தனிப்பிரதி 2 அணா

மலர் 1 · ஞாயிறு 24-9-'39 இதழ் 12

பொருள் அடக்கம்

விஷயம்		பக்கம்
ஹிட்லர் இடிமுழக்கம்	... ...	2
என்ன செய்யப் போகிறது?	... ...	5
லோக சஞ்சாரம்	... ...	8
போர் முனையில்	... ...	10
மாஜிநாட்-சிஜ்பிரீட் அரண்கள்	... ...	14
வார்ஸா	... ...	17
உழைப்பின் உருவம்	... சி. சு. செல்லப்பா	19
நிமிஷக் கதைகள்	... ...	24
ஹிட்லரின் தலைவிதி	... அகத்தியன்	26
லால்பாக் நினைவு	... கரிச்சான்	47
ஞாபகச் சின்னம்	... "ரஞ்சனன்"	49
நீர்மூழ்கிகள்	... விகடானந்தன்	55
ஐயோ, யோசிக்காதே!	...சி. ரா. சேஷாத்திரி	59
வருத்தமும் வளர்ச்சியும்	... டெளன் ஷெண்டு	64
நல்ல குடித்தனம்!	அ. கி. ஜெயராமன்	65
அழகு மயக்கம்	... ...	70
கலைஞான வரலாறு	... ...	73
உப்பும்-புளிப்பும்	பொன்மலை வி. பாலாம்பாள்	80
பாடரூஸ்கி	... வெ. ம.	81
போலந்து தேசம்	... ...	84
நட்சத்திர பலா பலன்கள்	... ...	86
சில்லறைச் செலவுகள்	... மணி	97
திரை உலகம்	... ...	103

ஹிட்லரின் இடி முழக்கம்

போலந்தின் அரசாங்கம் எங்கேயிருக்கிறது என்பது பிரிட்டிஷ் அரசியலாருக்கே தெரியவில்லையாம்! ரொமேனியா நாட்டில் இருக்கிறது என்று ஒரு சேதி. போலிஷ் அரசாங்கம் கப்பல் வழியாக, பாரிஸ் நகரத்துக்குப் போய்க்கொண்டிருக்கிறது என்று மற்றொரு சேதி. போலிஷ் அரசாங்கம் என்பது அடியோடே ஒழிந்துபோனதால்தான், போலந்திலிருக்கும் ருஷ்ய மக்களைக் காப்பதற்காக ருஷ்யா போலந்தின்பேரில் படை எடுத்திருக்கிறது என்று ருஷ்ய மந்திரி மொலட்டாவ் சொல்லுகிறார்.

இதன் மத்தியில் ஹிட்லர் டான்சிக் நகரில் போய், அட்டகாசப் பிரசங்கம் ஒன்று செய்திருக்கிறார். உலக சமாதானத்தை நாடியே, அவர் உழைத்து வந்தாராம். போலந்தோடு ஜர்மனி தனியாக ஒப்பந்தம் செய்துகொண்டு, தற்போதைய தகராறைத் தீர்த்துக்கொண்டிருக்கும் என்றும், ஆனால் அதை பிரிட்டனும் பிரான்சும் சேர்ந்துகொண்டு, தடுத்துவிட்டது என்றும் ஹிட்லர் சொல்லுகிறார். பிரான்ஸ்கூட ஹிட்லரின் யோசனைக்கு இணங்கி வந்ததாம்! ஆனால், அதை, பிரிட்டன் கெடுத்துவிட்டதாம்!

ஆகவே, உலக சமாதானத்தைக் கெடுத்த பொறுப்பும் பாபமும் பிரிட்டனைத்தான் சேர்ந்தது என்று ஹிட்லர் குற்றம் சாட்டுகிறார். யுத்தம் எத்தனை வருஷம் நடந்தாலும், ஜர்மனிக்கு அதைப்பற்றிக் கவலை இல்லை என்றும், ஜர்மனியை முந்திச் செய்தது போல, ஏமாற்றி அழிக்க முடியாதென்றும் ஹிட்லர் உறுமுகிறார். இதுமட்டுமல்ல. பிரிட்டனும் பிரான்சும் ஜர்மனியை அடியோடு அழிக்கவேண்டுமென்ற எண்ணங்கொண்டு, ஜர்மனிக்கு உணவுப் பொருள் வசதிகள் இல்லாமல் அடித்து, ஜர்மனியை முற்றுகைபோட்டுக் கவிழ்க்க எண்ணங் கொண்டிருக்குமாகில், அந்த எண்ணம் பலிக்காது என்று ஹிட்லர் சொல்லுகிறார்.

ஜர்மனியில், புதிதாக ஏதோ ஒன்றைக் கண்டு பிடித்திருக்கிறார்களாம். அது விஷக் காற்றோ, என்னமோ தெரியாது. அந்தப் புதிய சரக்கைக் கொண்டு, உலகத்தையே நாசம் செய்து

விட முடியும் என்றும், அந்த நிலைமைக்கு ஜர்மனியைக் கொண்டு போய் விடக்கூடாது என்றும் ஹிட்லர், பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் எச்சரிக்கை செய்து பயமுறுத்துகிறார்.

போலந்தைக் கெடுத்தது பிரிட்டன் என்று மீண்டும் ஹிட்லர் பிரிட்டன் பேரில் பழி சுமத்துகிறார்.

ஹிட்லர் சொல்லுவது உண்மையாக இருக்கட்டும் அல்லது பொய்யாக இருக்கட்டும். ருஷ்யா செய்ததை மட்டும் உலகம் ஒரு நாளும் மறக்கவும் முடியாது, மன்னிக்கவும் முடியாது. தற்போதைய போருக்கு யார் காரணம் என்றும் ஆராய்ச்சி செய்யத் தேவையில்லை. ஹிட்லரின் செயல் முறையையும் அவரது தத்துவ உபதேசத்தையும் உலகம் ஒருநாளும் ஏற்கப் போவதில்லை.

இரண்டு முரட்டுப் பேர்வழிகள் சேர்ந்துகொண்டு, போலந்தை தாற்காலிகமாகக் குழியைத் தோண்டிப் புதைத்து விட்டார்கள். என்றைக்கு அந்த நாடு, உருவெடுத்து, உலக படத்தில் மீண்டும் தோன்றப் போகிறதோ, அந்த சங்கதி ஈசன் ஒருவனுக்கே தெரியும். போலந்தின் அரசாங்கம் அலங்கோலமாகக் குலைந்து போய், அதன் மக்கள் இரக்கமின்றி சுட்டு வீழ்த்தப்படும் கோரக் காட்சியை, கற்பனை செய்து பார்த்தால், உடல் நடுங்குகிறது, உள்ளம் பதறுகிறது.

வெள்ளைக்கார நாகரிகமும் ஆலைத்தொழில் நாகரிகத்தின் தத்துவமும் முடிவும் இதுவானால், அந்த நாகரிகம் இந்தியாவுக்கு என் மனித வர்க்கத்துக்கே தேவையில்லை என்று தவக்கமன்னியில் சொல்லிவிடலாம். குழந்தைகளையும் பெண்களையும் இரக்கமின்றிக் கொல்லத் துணியும் நாகரிகம் மனித நாகரிகமல்ல, அதை அரக்க நாகரிகம் என்று சொல்லலாம். வேறு எந்தப் பெயர் வைத்து வேண்டுமானாலும் அதை அழைக்கலாம்.

ஹிட்லர் மார்தட்டிப் பேசுகிறாரே, அதற்கு என்ன அர்த்தம்? போரிலே, உண்மையிலே, ஜர்மனி வெற்றி அடைந்துவிடும் என்ற இறுமாப்பினால், அவர் இவ்வாறு பேசுகிறாரா? அல்லது, ஜெர்மனி, இந்தப் போரில் தோற்றுப்போகும் என்று நிச்சயமாகத் தெரிந்துகொண்டு, பயந்து போய், இந்த மாதிரி கண்டபடியெல்லாம் உளறுகிறாரா?. எந்த மனப்பான்மையோடு பேசுகிறார் என்று திட்டமாக இப்பொழுது சொல்ல முடியவில்லை.

ஹிட்லர் இவ்வாறு அட்டகாசப் பேச்சுப் பேசுகையில், பிரிட்டிஷ் கப்பல்கள் நாசமாகிக்கொண்டு வரும் சேதிகளைப் பார்த்தால், சென்ற யுத்தத்தைக் காட்டிலும், நீர்மூழ்கிக் கப்பல்களின் கொடுமைகள் அதிகமாயிருக்கும் என்று தோன்றுகிறது. இந்த ஸப்மரீன்களின் தங்குமிடம் எங்கே, அவைகள் எங்கே பெட்

ரோல் போட்டுக் கொள்கின்றன என்ற தகவலும் சரிவரத் தெரிய வில்லை. சென்னைக் கருகாமையில்கூட, இவைகளின் அட்டூழியங் கள் நடைபெற்று வருகின்றன என்று கடைத் தெரு வதந்தி உல விக்கொண்டு வருகிறது.

இந்த மாதிரி தவறான வதந்திகள் உலவுவதற்குக் காரணம் என்ன? தணிக்கை செய்யும் அதிகாரிகள், செய்திகளை சின்னா பின்னப்படுத்தி, இதை வெளியிடலாம், இதை வெளியிடப் படாது என்று நிமிஷத்துக்கு நிமிஷம் மனதை மாற்றிக்கொண்டு, உத்தரவு போடுவதுதான்.

என்றைக்கு பிரிட்டனுக்கும் ஜெர்மனிக்கும் போர் ஏற்பட்டு விட்டதோ, எந்த நாடும் தனது மானத்தைப் பறி கொடுத்து விட்டு, மற்ற நாட்டுக்குச் சரணாகதி செய்யப் போவதில்லை. ஜன நாயகம் அரசு செலுத்துவதாகச் சொல்லப்படும் பிரிட்டனில், யுத்தத்தின் உண்மையான போக்கை வெளியிட்டால், ஜனங்கள் மனக்கலக்கம் அடைந்து விடுவார்கள் என்று யுத்த நிர்வாகிகள் நினைப்பார்களாகில், அது பெரும் தவறாகும்.

ஜனநாயகத்தின் மூலமாக, ஜனங்களுக்கு கிலி உண்டாகு மானால், அந்த ஜனநாயக முறையால், ஜனங்களுக்கு என்ன லாபம் என்று தெரியவில்லை. உண்மையான செய்திகளை மறைப்பதால் தான், ஜனங்களுக்கு மனக்கலக்கமும் மனக்கிலேசமும் கிலியும் ஏற்படுகின்றன. ஜனங்களை, நீடித்த போருக்குத் தயார் செய்து, அவர்களுடைய மனப்பான்மையை கெட்டிப்படுத்த வேண்டு மானால், உண்மையை மறைக்கவே கூடாது.

தணிக்கை செய்யும் வேலை அவசியம் என்பதை யாரும் மறுக்க முடியாது. கத்திரிக்கோலை உபயோகப்படுத்தும் முறை இல்லையா? உடையைத் தயார் செய்வதற்கு, கத்தரிக்கோலை உபயோகப்படுத்தலாம். தயார் செய்த பக்குவமான உடையைக் கத்தரிக்க, கத்தரிக்கோலை உபயோகப்படுத்தலாமோ? அந்தக் கத்தரி வேலை, சுத்தப் பைத்தியக்கார வேலையாகும்.

தணிக்கை அதிகாரிகள், போர் நிர்வாகிகள், பத்திரிகைகள் எல்லோரும் சேர்ந்து பக்குவமாக ஒத்துழைத்தால், ஹிட்லரின் அட்டஹாசத்தை செல்லுபடி இல்லாமல் செய்துவிட முடியும். மூட்டத்தில் வைக்கும் சேதிகள்; ஆபத்துகளை உண்டாக்கிவிடும்.

என்ன செய்யப் போகிறது?

காங்கிரஸ் காரிய கமிட்டி கூடிக் கலைந்து விட்டது. முதலிலே வந்த சேதிப்படி, காந்திஜீயை, சர்வாதி காரியாகச் செய்யவில்லை. பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் இடையே, தூதர் போல ஆகிவிட்டார் மகாத்மா. மனிதவர்க்கம் உய்ய வேண்டும் என்பதற்கான வாழ்க்கையையும் தத்துவத்தையும் இடைவிடாமல் உபதேசம் செய்து வரும் காந்திக்கு, தூதர் போன்ற ஒரு நிலைமை ஏற்பட்டது மிகவும் பொருத்தமாகும்.

கூடின காரிய கமிட்டி, மூன்று பேர்கள் கொண்ட ஒரு சிறு கமிட்டியை நியமித்து, அவர்களுக்குப் பூரண அதிகாரம் கொடுத்து, நிலைமைக்குத் தக்கபடி யோசனை செய்து, காங்கிரசை நடத்த வேண்டும் என்று முடிவுக்கு வந்திருக்கிறது.

இந்த யுத்தத்தில் இந்தியா பிரிட்டனுக்கு ஒத்தாசை செய்வதா இல்லையா என்ற பிரச்னை இன்னும் முடிவுக்கு வரவில்லை. ஜனநாயகத்தைக் காப்பாற்றும் பொருட்டு, ஜர்மனியோடு யுத்தத்துக்குப் போயிருப்பதாகச் சொல்லும் பிரிட்டனிடம் இந்தியாவுக்கு அனுதாபம் இருக்கிறதென்றும் ஆனால் ஜனநாயகத்தை இந்தியாவில், எப்படி பிரிட்டன் ஏற்படுத்தப் போகிறது என்பதைக் குறித்து, பிரிட்டிஷ் பிரதம மந்திரியோ அல்லது வைஸ்ராயோ, உறுதி கொடுத்து, விளக்கம் செய்த பிறகு, காங்கிரஸ், இன்னது செய்யவேண்டுமென்ற முடிவுக்கு வரும் என்றும் காரிய கமிட்டியின் தீர்மானம் சொல்லுகிறது.

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூடி, முடிவுக்கு வரு முன்னர், தனிப்பட்ட எந்த காங்கிரஸ் வாதியும் (அவருடைய பதவி எவ்வளவு உயர்ந்ததாக இருந்தபோதிலும் சரி) தமது இஷ்டப்படி, எவ்வித அபிப்பிராயத்தையும் வெளியிட்டு, நெருக்கடியை உண்டாக்கக் கூடாது என்றும் காரிய கமிட்டியின் தீர்மானத்தில் அடங்கியிருக்கிறது

காங்கிரஸ் சம்பந்தப்பட்ட வரையில், எவ்வித முடிவுக்கும் வந்துவிட வில்லை. இந்தியாவைப் பற்றி பிரிட்டனுடைய நோக்கம் இன்னதென்றும் அந்த நோக்கத்தை அமுலுக்குக் கொண்டுவர, பிரிட்டன் எவ்வித நடவடிக்கையை எடுத்துக் கொள்ளப் போகிறதென்றும் வைஸ்ராய் சொல்லுவார் என்று காங்கிரஸ் எதிர்பார்க்கிறது.

வைஸ்ராய், பெடரேஷன் திட்டம் இப்பொழுது அமுலுக்கு வராது என்று தெரிவித்து விட்டார். ஆனால், இன்னொரு சங்கடம் இருக்கிறது. மாகாணங்களில், இப்பொழுது சுய ஆட்சி

நடைபெறுவதாக பாவனை. அதாவது, மாகாணங்களில், ஜனங்கள் கூடி, பொறுப்பாட்சி நடத்துவதாகச் சொல்லப்படுகிறது. மாகாணத்தில், பொறுப்பாட்சி இருக்குமாயின், அதைக் காட்டிலும் முறை தவறிய நிலைமை வேறொன்றும் இருக்க முடியாது.

பொறுப்பில்லாத ஆட்சி முறையின் மகத்துவத்தால், டில்லிமாநகரிலிருந்து, 'ஆர்டினன்ஸ்கள்' (அவசர உத்தரவுகள்) பிறந்து கொண்டேயிருக்கின்றன. இவ்வாறு, பொதுஜன சம்பந்தத்தைப் பெறாமல், அவசர உத்தரவுகள் வெளிவந்தால், அவைகள் ஜனநாயகத்துக்கு எவ்வாறு பொருத்தமாயிருக்க முடியும்? இந்தப் பிரச்னைக்கு, சரியான ஜவாப்பு, வைஸ்ராய் கொடுத்தால், காங்கிரசுக்கும் பிரிட்டனுக்கும் நட்பு என்பதில் சந்தேகமில்லை.

சுயநிர்ணயக் கொள்கைக்காகப் பரிந்து, போருக்குப் போய், தியாகம் செய்ததாக, பிரிட்டன், சென்ற யுத்த காலத்தில் சொல்லிக் கொண்டு வந்தது. அதன் முடிவு என்ன? வார்ஸேல்ஸ் ஒப்பந்தம். இந்தியாவுக்கு சுதந்திரமும் சுய நிர்ணய உரிமையும் கொடுக்கப்படவில்லை. சுய நிர்ணயம், சுதந்திரம் போன்ற அரசியல் உரிமைகள், வெள்ளை நிறங்கொண்டவர்களுக்கு மட்டும்தான் போலிருக்கிறது. ஆரிய ஜர்மனி என்று பெருமையாகப் பேசிக் கொள்ளும் ஹிட்லருக்கும் பிரிட்டிஷ் ராஜ தந்திரிகளுக்கும், இது சம்பந்தப்பட்டவரையில், என்ன வித்தியாசம் இருக்கிறது என்று தெரியவில்லை.

கையகலமுள்ள பெல்ஜிய நாட்டின் சுதந்திரத்தைக் காப்பாற்ற கச்சைகட்டிக் கொண்டு போருக்குச் சென்ற பிரிட்டன், இந்தியாவுக்குச் சுதந்திரம் கொடுக்க வேண்டும் என்ற சிந்தனையையே கொள்ளவில்லை.

காரணம் என்ன? வெள்ளை நிறங்கொண்டவர்களுக்குத்தான், சில பிரத்தியேகமான உரிமைகள் உலகத்தில் உண்டு என்று பிரிட்டிஷ் ராஜ தந்திரிகள் எண்ணங்கொண்டிருக்க வேண்டும். அல்லது ஜர்மனியை ஒழிப்பதற்காக, பெல்ஜியத்தின் சுதந்திரத்தை ஒரு சாக்காகச் சொல்லியிருக்கவேண்டும். இந்தமாதிரி, இப்பொழுதும் க்ஷேமமிருப்பதற்காகவே, காங்கிரஸ், பிரிட்டனிடமிருந்து, உறுதியையும் விளக்கத்தையும் வேண்டுகிறது.

வைஸ்ராய் பின் வருமாறு சொன்னால், எவ்வளவு அழகாக இருக்கும்! "சகோதர இந்திய மக்களே! இந்தியாவை ஏய்ப்பதாக, பிரிட்டனுக்கு எண்ணமே கிடையாது. பிரிட்டன், உண்மையாகவே, ஜனநாயக ஆட்சி முறையைக் காப்பாற்றும் பொருட்டே, ஹிட்லரோடு போருக்கு ஆரம்பித்திருக்கிறது. இந்திய அரசாங்கத்தில் (அதாவது டில்லி அரசாங்கத்தில்) இந்தந்த மாறுதல்களை தற்காலிகமாகச் செய்ய உத்தேசம். டில்லியில், அரசியல் நிர்ணய சபையைக் கூட்டுவதற்கு, விரைவில் ஏற்பாடு செய்யப்படும்" என்று ஒரு தேதியைக் குறிப்பிட்டு, இந்தியாவுக்கு உறுதி கூறினால், காங்கிரஸ் ஒருக்கால் திருப்தி அடையலாம்.

1939-ம் ஆண்டு 1914-ம் வருஷம் அல்ல. 1914-ம் வருஷத்தில் இருந்த இந்தியா அடிமை இந்தியா; அது சக்தியும் லட்சியமும் இல்லாத இந்தியாவாக இருந்தது. 1939-ம் வருஷ இந்தியா, வலிமையற்ற இந்தியா அல்ல. சென்ற இருபது வருஷத்துக்குள், இந்தியா, பிரிட்டனோடு, இரண்டு தடவை போராட்டம் செய்து, ஒரு போராட்டத்தில் வெற்றி பெற்று, சம அந்தஸ்துடன், பிரிட்டனோடு ராஜி செய்து கொண்டது. அந்த ராஜிக்குத்தான், காந்தி-இர்வின் ஒப்பந்தம் என்று பெயர்.

1939-ம் வருஷத்தில், பிரிட்டனை எதிர்த்துப் போராட காங்கிரசுக்கு வலிமை உண்டு என்பதை பிரிட்டன் மனதில் வைத்துக் கொண்டால், இரண்டு நாடு
களுக்கும் க்ஷேமம் என்பதில்
சந்தேகமில்லை.

ஆனால், இந்தியாவில், ஹிந்து
முஸ்லீம் பிளவுபோன்ற ப
பலவீனங்கள் இருக்கின்றன
என்று எண்ணிக்கொண்டு, பிரிட்
டிஷ் ராஜதந்திரிகள், காலங்கடத்தி
பழைய குருடியைப்போல நடக்
கத் தீர்மானங் கொண்டார்களா
னால், அவர்கள் இந்தத் தடவை
கண்டிப்பாய் ஏமார்ந்து போவார்
கள் என்பது நிச்சயம்.

இதற்கு இடையே, நிகழ்ச்சி
கள் எவ்வாறு நேருகின்றனவென்
றும் அகில இந்திய காங்கிரஸ்
கமிட்டி என்ன முடிவுக்கு வரு
கின்றது என்பதையும் எதிர்
பார்ப்போம்.

லோக சஞ்சாரம்

முஸ்லிம் லீக்—பேசுகிறது

முஸ்லீம் லீக்கின் போக்கை முழுவதும் தெரிந்துகொண்ட எவனும் அதிசயப்படத்தகாத முறையில், முஸ்லீம் லீக் தீர்மானங் அமைந்திருப்பது கவனிக்கத்தக்கதாகும். உலகம் புரண்டோடும் போதும் கூட, சாவகாசமாக, முஸ்லிம்களின் பிரதிநிதி என்று சொல்லிக்கொள்ளும் ஸ்தாபனம், காங்கிரஸ் ஆட்சியின் அடியில் அகப்பட்டுத் தவிப்பதாகச் சொல்லிக்கொள்ளும் பழைய புரட்டுக் கந்தப் புராணத்தையே படிப்பதைக் கண்டு நாம் ஆச்சரியப்படவில்லை. தங்கள் பிரதிநிதி சபை இது என்று முஸ்லிம் லீகை ஒப்புக்கொள்ள ஒவ்வொரு முஸ்லிமும் வெட்கப்படும்படியாக தீர்மானங்களின் அழகு அமைந்திருக்கிறது.

கட்சிக் கலகமும், சமரஸமும்

பிரிட்டனுக்குப் பூரண ஆதரவு கொடுக்கவேண்டும் என்று சர் சிக்கந்தர் ஹயத்கான் நடுவில் சொன்னார். பஸ்லுல் ஹக்கும் அதற்குச் சரியாக தாளம் போட்டார். அதற்குப் பிறகு ஜின்னாவுக்கும் அவர்களுக்கும் சச்சரவு உண்டாகலாம் என்று கூட பலர் பயந்தனர். நடுவில் சர் சிக்கந்தர் ஹயத்கான் அவர்களின்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது என்ற பேச்சுகள் மிகவும் பலமாக இருந்தன.

எல்லோரையும் திருப்தி செய்யும் முறையில், ஸ்ரீ ஜின்னா, சர் சிக்கந்தர், ஹக் முதலிய எல்லோரையும் ஒன்று சேர்க்கும் முறையில், லீக் தீர்மானங்கள் அமைந்திருப்பது பாராட்டத்தக்கது. உதாரணமாக, காங்கிரஸை தூஷிக்கும் கைங்கர்யத்தில் லீக் பிரமுகர்கள் எவருக்கும் அபிப்பிராய பேதம் ஏற்படாதாகையால், அந்தத் தீர்மானத்தை அது செய்திருக்கிறது. மாகாண சுய ஆட்சி ஆரம்பத்திலிருந்து ஹிந்து மெஜாரிட்டி, முஸ்லிம் மைனாரிட்டியின் மேல் கொடுங்

கோல் செலுத்தி வருகிறது என்பதை வைசிராய் அவர்களின் கவனத்துக்கு லீக் கொண்டு வந்திருக்கிறது.

வாழைப்பழம் வேண்டுமா?

'முஸ்லிம் லீகின் ஒத்துழைப்பு உங்களுக்கு வேண்டுமா?' என்று பிரிட்டனைப் பார்த்து கேட்கிறது லீக். அப்படி வேண்டுமானால் முஸ்லிம்களின் சொத்து, சுதந்திரம், கௌரவம், ஜீவாதார உரிமை இவைகளை எல்லாம் காங்கிரஸ்காரர்களிடமிருந்து காப்பாற்ற வேண்டும் என்றும் சொல்லுகிறது. சமயம் நேர்ந்தால் கவர்னர்கள் விசேஷ அதிகாரத்தை உபயோகம் செய்யவேண்டுமாம்!

முஸ்லிம்களின் பூரணமான ஒத்துழைப்பை வேண்டினால் இவ்வளவையும் பிரிட்டன் செய்யவேண்டும். இல்லாவிட்டால்—? இல்லாவிட்டால் ஒன்றுமில்லை. இஷ்டப்பட்டவர்கள் பிரிட்டனுடன் ஒத்துழைப்பார்கள். சர் சிக்கந்தர் ஒத்துழைப்பார்; ஸ்ரீ பஸ்லுல் ஹக்கும் செய்வார்—ஜின்னாவும் கூட ஒருக்கால் ஒத்துழைக்கலாம்—அவரவர்களுடைய சிஷ்யர்களோடு கூட. முஸ்லிம் லீகின் பெயரால் வேண்டுமானால், ஒத்துழைப்பு நடக்காமலிருக்கலாம்.

அனுதாபம்

பிரிட்டனுக்கும், அதன் கூட்டாளிகளுக்கும் தனது மனமார்ந்த அனுதாபத்தை முஸ்லீம் லீக் அனுப்புகிறது. இந்த நெருக்கடியான சமயத்தில் ஜின்னாவை அழைத்து முஸ்லிம்கள் விஷயமாக வைஸ்ராய் யோசனை கேட்டதைப்பற்றி அந்த லீக் சந்தோஷப்படுகிறது. இந்திய அரசியல் திட்டங்கள் ஏதேனும் பிரிட்டனின் மனதில் இருந்தால், அந்த விஷயமாக முஸ்லிம் லீகைக் கேட்டுக்கொண்டு காரியங்களைச் செய்யவேண்டுமென்று பிரிட்டனுக்கு லீக் புத்தி சொல்லுகிறது.



போர் முனையில்

செப்டம்பர் 12உ

மகா யுத்தத்தின் பயங்கரத்தை, போலந்தில் மாத்திரம் 12000 ஜெர்மனியருக்கு மேல் கொல்லப்பட்டார்கள் என்ற செய்தி ஒன்றே ஒருவாறு எடுத்துக் காட்டுகிறது. ஸ்லோவேகிய துருப்புகள், ஜெர்மனியோடு சேர்ந்துகொண்டு போலந்தைத் தாக்க மறுத்துவிட்டு, துப்பாக்கிகளைக் கீழே வைத்து விட்டார்கள், என்ற செய்தி வேறு ஜெர்மனியைக் கலக்கி இருக்க வேண்டும். அவர்களிடமிருந்த ஆயுதங்களைப் பிடுங்கிக் கொண்டு, அவர்களை ஜெர்மானியர் சிறை செய்து விட்டதாக ஒரு செய்தி கூறுகிறது.

இழந்த லோட்ஸ் பிரதேசத்தைத் திரும்ப போலந்து பிடித்துக்கொண்டு விட்டது. போலந்தில் பலத்த மழையின் காரணமாக ஜெர்மன் முன்னேற்றம் மிகவும் தடைப்பட்டு விட்டது.

பிரிட்டிஷ் துருப்புகள் தயார் செய்துகொண்டிருக்கும் விதத்தையும், பிரெஞ்சு சேனையோடு அடுத்து அடுத்து நின்றுகொண்டு ஜெர்மனியோடு சண்டை செய்வதையும் சிலாகித்து பிரஞ்சு ஆசிரியர் ஒருவர் புகழ்ந்திருக்கிறார்.

லண்டன் காலி செய்யப்படுகிறது. சிறுவர்களும், வேலைக்கு பாதகமில்லாமல், வெளி ஊர்களிலிருந்து வேலை செய்யக்கூடிய ஆபீசுகளெல்லாம் லண்டனிலிருந்து வெளியேற்றப்பட்டு விட்டன. பாரிஸில் நடந்த முக்கியமான யுத்த சபைக் கூட்டம் ஒன்றில் சேம்பர்லேன், டலாடியர், சாட்பீல்ட் பிரபு, ஜெனரல் காமலின் முதலியோர் பிரசன்னமாகி இருந்தனர்.

செப்டம்பர் 13உ

இரண்டு பிரிட்டிஷ் கப்பல்கள் மூழ்க அடிக்கப்பட்டிருக்கின்றன. பிரஞ்சுக்காரர்கள் மேற்கு முன்னணியில் அதி தீவிரமாகச் சண்டை செய்து வருகின்றனர். முக்யமான கண்காணிப்பு ஸ்தலங்கள் ஒன்றிரண்டைக் கூடப் பிடித்துக்கொண்டனர் என்று ஒரு பாரிஸ் செய்தி கூறுகிறது.

போலந்து—ருமேனியா எல்லையில் கூட ஜெர்மன் குண்டு வீச்சு நடக்கிறது என்பதிலிருந்து, ருமேனியாவிலிருந்து போலந்துக்கு வரும் செய்தித் தொடர்களையும், போக்கு வரத்து சாதனங்களையும், நிறுத்திவிட ஜெர்மனி முயற்சிக்கிறது என்பது தெரிகிறது.

போலந்திலிருக்கும் யூத ஸ்தலங்களின் ஒன்றின்மேல் ஜர்மன் ஆகாய விமானங்கள் குண்டுகளை வீசியதில் இருநூறு பேர் இறந்துவிட்டார்கள். இதைத்

தவிர, ரயில்வே ஜங்ஷன்கள், ரயில் வண்டிகள் முதலியவைகளின் மேலும் பலத்த குண்டு வீச்சுகள் நடக்கின்றன.

ஜெர்மானியர் லெவெளவ் என்ற மிகப் பெரிய நகரமொன்றைப் பிடித்துக்கொண்டதாக ஒரு ஜெர்மன் செய்தி கூறுகிறது. 'ஜெர்மனி ஜனநாயக நாடுகளிடம் அகப்பட்டு விழிப்பதைக் காட்டிலும், அதை நான் சோவியத் ரஷ்யாவோடு சேர்த்து விடுவேன்' என்று ஹிட்லர் கூறியதாக மதாம் தபூவா அறிவிக்கிறார்.

ஜெர்மனிக்குக் கொண்டு போகப்படும் எவ்விதப் பொருளேயும் தடுத்துவிடுவதென்று பிரிட்டன் ஆரம்பித்தப் பொருளாதார யுத்தத்திற்கு ஜெர்மனி பதிலளிக்கையில், ஜெர்மனி அந்த மறியலால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிற தென்று தெரிகிறது. அது தொடர்ந்து செய்யப்பட்டால் 3000 ஜெர்மன் விமானங்களை அனுப்பி, பிரிட்டிஷ் துறைமுகப் பட்டினங்களை எல்லாம் தகர்த்து எறிவதுதான் வழி என்றும் அறிவிக்கிறது.

ஸார்பிரக்கன் பிரதேசத்தின் இரு பக்கங்களிலும் பிரஞ்சுத் துருப்புகள் முன்னேறி விட்டன என்று, மேற்குப் போர் முனையின் ராணுவ நிலைமையைப்பற்றி பிரெஞ்சு சர்க்கார் வட்டாரங்கள் கூறுகின்றன.

செப்டம்பர் 14௳

ஆஸ்ட்ரியாவை ஜெர்மனிக்கு சாதகமாக போர் செய்யச்சொல்லி எழுதி இருந்த அறிக்கை ஒன்றில் கையெழுத்துப் போடாததற்காக ஆஸ்டிரிய தலைவர் ஷூஸ்னிக் சுடப்பட்டார் என்று செய்தி.

இரண்டு பிரிட்டிஷ் கப்பல்கள் மூழ்க அடிக்கப்பட்டன. அரேபியா, பிரிட்டனை ஆதரிக்கிறது என்று பிரிட்டனின் விளம்பர மந்திரி அறிவிக்கிறார்.

இழந்த லோட்ஸ் பிரதேசத்தை போலந்து திரும்பிப் பிடித்துக் கொண்டது. அதோடு மட்டுமில்லாமல் லெவெளவ் பிரதேசத்தைப் பிடித்ததாகச் சொன்ன ஜெர்மன் அறிக்கைக்கு மாறாக, 'ஜெர்மனி அதைப் பிடிக்க முயன்றும் முடியவில்லை' என்று ஒரு போலிஷ் ரேடியோச் செய்தி கூறுகிறது.

"எவ்வளவு ஜெர்மன் கைதிகளை போலந்துக்காரர்கள் விடுதலை செய்கிறார்களோ, அவ்வளவு போலிஷ் கைதிகளை விடுவித்து, போலந்தினிடம் திரும்பிக் கொடுத்து, 'கைதிமாற்றம்' செய்துகொள்வோமா" என்ற ஒரு யோசனையை ஜெர்மனியர் ஸ்வீடிஷ் ஸ்தானிகரிடம் சமர்ப்பித்ததாகத் தெரிகிறது.

செப்டம்பர் 15௳

பிரஞ்சு காலாட் படையின் முன்னேற்றம் மிகவும் புகழத்தக்கதாக இருக்கிறது. பல முக்கியமான, அடிப்படையான, யுத்த ரகசியங்கள் நிறைந்த அநேக இடங்களை அவர்கள் பிடித்துக் கொண்டு விட்டார்கள். ஜெர்மன் விமானப்படை போலந்திலிருந்து வாபஸ் பெறப்படுகிறதாம். இன்றும் இரண்டொரு பிரிட்டிஷ் கப்பல்கள் நாசமாயின.

உலக யுத்தம் இந்த ஸ்திதியிலிருக்கும்போது ரஷ்யா மெள்ள தகாராறுக்கு ஆரம்பிக்கிறது. போலந்து சர்க்கார்மீது ரஷ்யா கூறும் குற்றச் சாட்டுகள் இந்த சமயத்தில் அவ்வளவு சரியாகப் படவில்லை என்று பலர் அபிப்பிராயப் படுகிறார்கள். போலந்தில் தலையிடுவதற்கு ரஷ்யா ஆரம்பிக்கிறது. போலந்தில் உள்ள ரஷ்யர்களைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறதென்று ரஷ்யா நினைக்கிறதாம்.

'சண்டித்தனம் செய்யும் எதையும் சுட்டுத்தள்ளி விடு' என்ற ஹிட்லர் உத்தரவு பக்தியுடன் ஏற்றுக் கொள்ளப்பட்டு, கொஞ்சம் கூடத் தவறாமல் நிறைவேற்றப் படுகிறதென்று ஒரு பாரிஸ் செய்தி கூறுகிறது. ராணுவத்தில்லாத பொது மக்கள் இருக்கும் இடங்களில் கூட குண்டுகள் வீசப்படுகின்றன.

சோவியத்திற்கும் ஜப்பானுக்கும் மங்கோலிய எல்லையில் நடந்த ஒரு சின்னச் சண்டை நிச்சயம் முடிவடைந்துவிடும் என்று பாரிஸிலிருந்து வந்த ஒரு அறிக்கையிலிருந்து தெரிகிறது.

செப்டம்பர் 16உ

ரஷ்யாவுக்கும் ஜப்பானுக்குமிடையே சமாதானமேற்பட்டுவிட்டதென்று தெரிகிறது. ஹிட்லர் கிழக்கத்தி முனை வழியாகப் பறந்துசென்று அந்த இடங்களைப் பார்வையிட்டார். சிக்பிரட் அரணில் பிரஞ்சுக்காரர்கள் நெருக்கடியை அதிகரிக்கின்றனர்.

லிதுவேனியா நடுநிலைமை வகிக்கும் என்று அதனுடைய பிரதம மந்திரி அறிவிக்கிறார். பல்கேரியாவும் நடுநிலைமை வகிக்கும்.

வார்ஸாவை ஜெர்மனி வசம் ஒப்புவித்துவிடும்படி ஒரு இறுதி எச்சரிக்கையை அச்சடித்து, ஜெர்மன் விமானங்கள் வார்ஸாவில் போட்டன. அதற்கு இஷ்டமில்லாவிடில் வார்ஸாமீது குண்டு வீச்சு நடக்குமாதலால் பொது ஜனங்கள் வார்ஸாவைவிட்டு வெளியேறிவிட வேண்டும் என்றும், அந்த எச்சரிக்கையில் காணப்பட்டது. இந்த எச்சரிக்கையைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லையாம் போலிஷ் பிரதம தளபதி.

இன்னொரு பிரிட்டிஷ் கப்பல் மூழ்கடிக்கப்பட்டிருக்கிறது.

செப்டம்பர் 17உ

போலந்து எல்லைக்குள் சோவியத் துருப்புகள் புகுந்து விட்டன. நேற்றை இரவு போலிஷ் ஸ்தானாதிபதியிடம் ரஷ்ய கவர்ன்மெண்டார் அவர்களது அறிக்கையைக் கொடுத்தார்கள். தங்களுடைய நன்மைக்காகவும், கிழக்கத்திப் போலந்திலிருக்கும் வெள்ளை ரஷ்யர்கள், யுக்ரேன் பிரதேசத்திலிருக்கும் ரஷ்யச் சிறுபான்மையோர், இவர்களுடைய நன்மையைப் பாதுகாக்கவும் சோவியத் அரசாங்கம் போலந்திற்குள் வந்திருப்பதாக அந்த அறிக்கையில் கண்டிருக்கிறது. ரஷ்யாவின் விஷயங்களே புரியாமல் குழம்பிக்கொண்டிருப்பவர்களுக்கு, இந்தச் செய்தி இன்னும் குழப்பத்தை அதிகரிக்கும்.

போலந்து ரஷ்யாவின் தலையீட்டை எதிர்த்துச் சண்டை

செய்வதாகவும் தெரிகிறது. போலந்துக்குள் நாற்பது மைல் ரஷியா ஆக்ரமித்து விட்டதாக ஒரு செய்தி கூறுகிறது.

செப்டம்பர் 18உ

பல விதத்திலும் நெருக்கடி ஏற்படுவதால் போலிஷ் அரசாங்கம் சரியாக நடக்கவில்லை என்பதனால் ருமேனியா எல்லைக்குள்ளிருந்து போலந்து கவர்ண்மெண்ட் நடக்கும் என்று போலிஷ் குடியரசுத் தலைவர் மொஸிக்கி ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

ரஷ்யாவின் முன்னணிப் படைகள் லுவாவையும், வில்னவையும் நெருங்கி விட்டன என்று ரஷ்ய செஞ்சேனை அறிக்கை கூறுகிறது. போலந்திலிருந்து ஏராளமான ஜெர்மன் துருப்புக்கள் மேற்குப் போர்முனைக்கு மாற்றப்படுகின்றன. போலந்தின் மிக முக்கிய எண்ணெய்ச் சுரங்கங்கள் ஜெர்மன் கைக்கு வந்து விட்டன என்ற செய்தி இன்னும் ஊர்ஜிதப் படவில்லை.

விண்சர் கோமகன் யுத்தத்தில் ஒரு வேலையில் அமருவார். பிரிட்டிஷ் சேனைத் தலைவராக அவர் நியமிக்கப்படலாம்.

ஏராளமான போலிஷ் மக்கள் லாட்வியாவுக்குள் வந்து இறங்குகிறார்கள்.

செப்டம்பர் 19உ

யுத்தம் ஆரம்பித்த பிறகு முதல் தடவையாக ஹிட்லர் பேசியிருக்கிறார். ஜெர்மனி வாழ வேண்டுமென்றும், அதற்காக சமாதான முறையில் அவர் செய்த முயற்சிகளெல்லாம் பயனில்லாமல் போய்விட்டன வென்றும் வார்செயில்ஸ் உடன்படிக்கையின் பயனாக எழும்பிய அந்த போலந்து—அந்த உருவத்தில்—இனிமேல் இருக்காதென்றும் அவர் சொன்னார்.

மேலும் சொல்லுகையில் அவர், "இந்த யுத்தம் இப்படிப் போய்க் கொண்டே இருக்குமானால், ஒரு சமயத்தில், எல்லோரையும் அழிக்கக் கூடிய, ஆனால் எங்களை அதைப் போன்ற முறைகளைக் கொண்டு தாக்க முடியாத, ஒரு விதமான போரில் நாங்கள் இறங்கி விடுவோம்" என்று கர்ஜனை செய்தார்.

'கோபெல்ஸ் இறந்து விட்டாரா?' இந்தக் கேள்விதான் இன்று பல இடங்களில் பயந்த முகத்துடன் கேட்கப்படுகிறது. யுத்தம் ஆரம்பித்த பிறகு அவரிடமிருந்து சத்தமே கிளம்பவில்லையே என்ற சந்தேகம் பலருக்கு. ரஷ்ய—ஜெர்மன் புது உறவினால் டாக்டர் கோபெல்ஸ்க்கு ஆபத்து வந்து விட்டதோ என்று பலர் எண்ணுகிறார்கள்.

—

மாஜிநாட்—ஸீஜ்ப்ரீட் அரண்கள்

பிரான்ஸ் தேசத்துப் படையைப் போல வெகு நாளைய அனுபவம் வாய்ந்த சேனை உலகத்திலேயே கிடையாது. மற்ற நாட்டுப் படைகளுக்கே இவர்கள் தான் ஒரு எடுத்துக் காட்டு. கொஞ்ச காலமாக நாட்டின் பொருளாதார நிலைமையும் அவர்களுக்கு ரொம்ப சாதகமாக இருந்து வருகிறது. ஆகையால்தான் பிரான்ஸ் 35 கோடி பிராங்குகள் யுத்த முஸ்தீப்புகளுக்காக செலவிட முடிந்தது.

யுத்த சாமான்கள் எல்லாம் தயாராய் சேகரித்து வைத்திருக்கிறார்கள். எந்த நிமிஷம் வேண்டுமென்றாலும் தங்கள் சேமிப்பிலிருந்து எத்தகைய உதவியையும் பெற முடியும்படி அவர்கள் திட்டம் போட்டிருக்கிறார்கள்.

அவர்களுடைய நிலப்படையில் 60 லக்ஷம் பேர் இருக்கிறார்கள். பிரான்சுக்கு, உணவுப் பொருட்களுக்கும், ஆட்களுக்கும் பஞ்சமே கிடையாது. தங்களுடைய குடியேற்ற நாடுகளிலிருந்து எல்லாவித உதவியையும் அவர்கள் எதிர்பார்க்க முடியும்.

டலாடியர் பதவிக்கு வந்த பிறகு ஆகாயப்படை தீவிரமாக முன்னேற்றமடைந்து விட்டது. ஏறக்குறைய இங்கிலாந்துக்கு சமானமாகவே வளர்ந்துவிட்டது.

ஐரோப்பிய நாடுகளில் சக்தி வாய்ந்த கப்பற்படை பிரஞ்சுக்காரர்களுடையதுதான். இத்தாலியோடு சண்டை நேர்ந்தால் உடனே மத்தியதரைக் கடலின் இரண்டு பக்கத்தையும் அடைத்து விட முடியும் எனக் கப்பல் படை மந்திரி கூறுகிறார். ஜெர்மனி ஒரு நீர்மூழ்கியைக் கூட மத்திய தரைக் கடலுக்கு அனுப்ப முடியாது. அபிசீனியாவுக்கும் இத்தாலிக்குமுள்ள போக்கு வரத்துச் சாதனங்கள் எல்லாம் தடைப்பட்டுவிடும்.

1939-ம் வருஷ ஆரம்பத்தில், பிரான்சுக்காரர்களிடம் 5 யுத்தக் கப்பல்களும், 76 நீர்மூழ்கிகளுமிருந்தன.

எல்லாவற்றையும் விட அவர்களுக்குப்பெரிய உதவியாய் இருப்பது மாஜினட் அரண் என்று சொல்லப்படும் பாதுகாப்புச் சுவர் தான் இது டன் கர்க் என்ற இடத்தில் ஆரம்பித்து அறுநூறு மைலுக்கு அப்புறமுள்ள ஸ்விட்ஜர்லந்து எல்லையில் முடிகிறது. ஆல்ப்ஸ் மலையும் இதில் ஒரு பாகமாக உபயோகப்படுகிறது. இந்த சுவருக்கு ஓரமாகவுள்ள ஆழ

மான அகழிகள் அவர்களுடைய பெரிய பலம், ஒவ்வொரு இடத்தில் இந்த அகழி 325 அடி ஆழமாயிருக்கிறதாம்.

சாதாரண ஜனங்களுக்கு இங்கு பலமான பாதுகாப்புச் சுவர் இருக்கிறது என்று தோன்றவே தோன்றாது. ஏதோ! அங்கும் இங்கும் ஒரு பீரங்கி வைத்திருப்பதுதான் தெரியும். ஆனால் அன்னியப் படையின் ஒரு துரும்பு கூட தீக்கு இரையாகாமல் அந்த வட்டாரத்தில் நிற்க முடியாது. இங்கு வைக்கப்பட்டிருக்கும் பீரங்கிகளைச் சுடுவதற்கு ஆள் தேவையில்லை. எல்லாம் மின்சாரம் விசை மூலமாய் நடக்கும்.

இந்த சுவற்றைப் பாதுகாப்பதற்காக லக்ஷம் வீரர்கள் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். ஆங்காங்கு 14 ஆயிரம் பீரங்கிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆள்களெல்லாம் சுரங்கங்களில் இருப்பதால், ஒருவனுக்காவது உயிர்ச்சேதம் நேராது. 40 அங்குல கனமுள்ள சிமிண்டுத் தளத்தைத் துளைத்துக் கொண்டு எந்த வெடிகுண்டு இவர்களை அழிக்க முடியும்? ஓயாமல் குண்டு மாரி பொழிந்து விஷப் புகையைச் செலுத்தினாலும், சுரங்கத்தி லிருக்கும் ஆட்களை இவை ஒன்றும் பாதிக்காதாம். விஷ மூடிகள் கூடத் தேவையில்லையாம்.

பல இடங்களில் ரகசிய பீரங்கிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அவை எந்த திக்கிலும், லகுவாக சுழன்று சுடக்கூடியவைகள். மருந்து வெடிப்பதற்கு பீரங்கி பண்டை ஆள் போக வேண்டியதில்லை. அவைகளே இறங்கி சுரங்கத்திற்கு வரும்.

தப்பித் தவறி சில பாகங்களை எதிரிகள் ஆக்கிரமித்து விட்டால் இருபது மைலுக்கு அப்பாலுள்ள ஒரு பித்தானை அமுக்கினால் போதும்; ஆக்கிரமித்த பாகம் தூள் தூளாக எல்லாரையும் கரியாக்கிவிடும்.

எதிர்பாராதபடி திடீரென்று ஒன்றும் நேர வழியில்லை. பகைவன் பல மைல் தூரத்திற்கு அப்பால் வரும்போதே — பகலானாலும் சரி, இரவானாலும் சரி — கண்காணிப்புக் கண்ணாடிகளில் பிரதி பிம்பம் ஏற்பட்டு அது, எச்சரிக்கை மணியை அடிக்கும். அப்பொழுது எல்லாரும் தயாராய் விடுவார்கள்.

இதுமட்டுமல்ல. முப்பது மைல்களுக்கு அப்பால் சில ரகசிய இடங்கள் இருக்கின்றன. அங்கு எதிரிகளுடைய டாங்குகள் வர முடியாதபடி தடுப்பதற்காக சில ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். இருந்தாற்போல் இருந்து சில வேலிகள் திடீரென்று மேலே கிளம்பும். டாங்குகள் அவைகளை மோதினால் அவைகள் வெடித்து டாங்கை நாசம் செய்துவிடும்.

மனிதன் தன் முழு சாமர்த்தியத்தையும் உபயோகித்து அமைத்திருக்கும் கடக்கமுடியாத இந்தப் பாதுகாப்புச் சுவருக்கு பெயர்தான் மாஜினட் அரண்.

இதற்கு எதிர்த்தாற்போல் ஜெர்மனியர்களுடைய சீஜ்பிரிட் அரண் என்னும் பாதுகாப்புச்சுவர் இருக்கிறது. இது கட்டி முடித்து

18 மாதந்தான் ஆகிறது. இதை நிர்மாணித்தவர் டாட் என்னும் பிரசித்தி பெற்ற ஜெர்மன் எஞ்ஜினியர்.

இதில் சிமிண்டாலும் இரும்பாலும் ஆகிய பன்னீராயிரம் கோட்டைகள் இருக்கின்றனவாம். இப்பொழுது பிரஞ்சுக்காரர்கள் எதிர்க்கும்படியான மாஜிலீ என்னும் இடத்தில் மலைக் கோட்டைகளும் கூட இருக்கின்றன.

இதைக் காப்பவர்களுக்கும் எல்லா சௌகரியங்களும் இருக்கின்றன. சுரங்கங்களின் வழியாக உள்நாட்டிலிருந்து உணவுப் பொருள்கள் வரவழைத்துக் கொள்ளமுடியும். பகைவர் நுழைய முடியாதபடி வேலிகளும் சுவர்களும் எழுப்பியிருக்கிறார்கள். இதன் பூரா விவரங்களையும் வெளியுலகம் அறியாது.

ஏன் என்றால் ஆரம்ப முதலே, ரகசியமாகத்தான் காரியங்கள் நடக்கின்றன. இருந்தாலும், சமீபத்தில் பிரஞ்சு ஆகாயப் படை எடுத்த சில போட்டோக்களிலிருந்து ஜெர்மனியின் பாதுகாப்புச்சுவர் பல இடங்களில் பலமற்றிருக்கிறதெனத் தெரியவருகிறது.

இதுவரையில் நடந்த யுத்தத்தின் காரணமாக போலந்தின் பெரும்பாகம் ஜெர்மனியால் பிடிக்கப்பட்டுவிட்டது. ஆகையால் இனிமேல் யுத்தம் மும்முரமாக நடக்கவேண்டிய இடம் இந்த இரண்டுபாதுகாப்புச்சுவர்களுக்கு மத்தியிலுள்ள இடத்தில் தான். ஒருவருடைய தேசத்திற்குள் இன்னொரு தேசத்தின் படை புகுந்து முன்னேற வேண்டுமானால் இந்த அரண்களை பிளந்து எறிந்து விட்டுத்தான் போக வேண்டும். அது லேசான காரியமல்ல. ஆகவே நீண்டகால போராட்டம் நடைபெறும். தங்கள் எல்லைபுறத்திலிருந்து பிரஞ்சுக்காரர்கள் முழுபலத்தையும் திரட்டி ஜெர்மனியை எதிர்க்க ஆரம்பித்து விட்டார்கள்.

வார்ஸா - சரித்திர நகரம்

இப்போது ஜெர்மனி வெடி குண்டுகளை வீசி சாம்பலாக்கிக் கொண்டு வருகிறதே — போலந்தின் தலைநகரான வார்ஸா—அது வெகு அழகான சரித்திரப் பிரசித்தி பெற்ற நகரம். போலந்தில் ஓடும் விஸ்டுலா நதியின் இடது கரையில் அமைக்கப்பட்டிருக்கிறது. பெர்லினிலிருந்து ரயில் மூலம் 387 மைல்; ரஷ்ய நகரமான லெனின்கிராடிலிருந்து 695 மைல். 46 சதுர மைல் விஸ்தீரணம்.

ஆற்றுக்கு மேலே 130 அடி உயரத்திலிருந்து படிப்படியாக இறங்கி வருகிறது. விஸ்டுலா நதி வியாபாரப் போக்கு வரத்துக்கு ரொம்ப சிறந்த சாதனம். வார்ஸா வளப்பமான பிரதேசத்தில் கட்டப்பட்டிருக்கிறது.

இந்த நகரம் ஏற்பட்ட காலம் திட்டமாகத் தெரியவில்லை. ஒன்பதாம் நூற்றாண்டில் தற்போதைய வார்ஸா இருக்கும் இடத்தில் ஒரு மாளிகை மாஜோவியா இளவரசன் கட்டினதாக ஊகிக்கப்படுகிறது. ஆனால் வார்ஸாவைப் பற்றிய பிரஸ்தாபம் 1224-ம் வருஷத்துக்கு முன் இல்லை. 1526 முடிய முன்னூறு வருஷங்களுக்கு மாஜோவியா பிரபுக்களின் இடமாக இருந்து வந்தது.

அவர்கள் வம்சம் அழியவும், போலந்தில் சேர்க்கப்பட்டது. போலந்தும், அதை அடுத்து இருக்கும் லிதுவேனியாவும் ஒன்று சேர்ந்தபோது ராஜாங்க இடமாக ஆனது வார்ஸா. 1550-ல் போலந்தின் தலைநகரமாக மாறிற்று. 1655-ல் ஸ்வீடன் தேச அரசர் வசம் ஒரு வருஷம் இருந்தது. எப்படியும், பிரம்மாதமான நஷ்டத்தோடு போலந்தினர்கள் அதை மீட்டுக் கொண்டனர். 1705-ல் மறுபடியும் ஸ்வீடன் வசமாயிற்று. மறு வருஷம் ராஜி ஆகி மறுபடியும் விடுதலை பெற்றது.

1764-ல் ரஷ்யர்கள் இந்த நகரைப் பிடித்துக் கொண்டார்கள். அதன்பிறகு 1773-ல் தான் முதல் போலந்து பிரிவினை ஏற்பட்டது.

1794-ல் மறுபடியும் ரஷ்யர்கள் அதைப்பிடித்துக் கொண்டார்கள். ஆனால், அடுத்த வருஷம் மூன்றாம் தடவை போலந்து பாகமிடப்பட்டு, வார்ஸா, புருஷ்யாவுக்குத் தரப்பட்டது.

1806-ல் நெப்போலியனுடைய துருப்புகள் அதைப் பிடித்துக் கொண்டன. அடுத்த வருஷ சமாதானத்தில் வார்ஸா என்ற சுதந்திர மாகாணத்துக்கு தலைநகராயிற்று.

அதைப்பிடித்த பிடை அதோடு விடவில்லை. 1909-ல் ஆஸ்டிரியர்கள் மறுபடியும் அதைப் பிடித்துக்கொண்டார்கள். பிறகு மறுபடியும் சுதந்திரம் பெற்றது.

ரஷ்யர்கள் முடிவாக 1813-ம் வருஷம் கைப்பற்றிக் கொண்டார்கள். 1830-ல் வார்ஸா விடுதலை பெற ஒரு வருஷம் முயற்சி பெற்றது. ஒரே ரத்த வெள்ளம். பிரயோசனப்படவில்லை. அதிலிருந்து 1856 வரையில் கொடூரமான ராணுவ ஆட்சியில் அவதிப்பட்டுக் கொண்டிருந்தது.

1862-ல் மறுபடியும் போலந்தின் சுதந்திரத்துக்கு வார்ஸாவில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. 1863 வரையிலும் ரஷ்யர்கள் கைதான் ஏறினது. நரகவேதனைப்பட்டது வார்ஸா அப்போதும். 1905, 1906-ல் மறுபடியும் வார்ஸா நகரில் கலகமும், ரத்தக்களறியும் நடைபெற்றன.

1914-ல் ரஷ்யப் படைகள் சேகரித்து அனுப்புவதற்கு வார்ஸா ஒரு முக்கிய இடமாக விளங்கிற்று. 1915-ல் போன மகா யுத்தத்தில் ஜெர்மானியர்கள் அதை ஆக்ரமித்துக்கொண்டு ஒரு பொம்மை போலந்து தேசத்தின் தலைநகராக்கினார்கள்.

ஆனால் 1918-ல் ஜெர்மன்படை நிலை குலைந்து போனபோது போலந்தினர்கள் மறுபடியும் அதைத் தலைநகராக்கிக் கொண்டு ஒரு சர்க்காரை ஸ்தாபித்தார்கள்.

வார்ஸா தெருக்கள், அழகான அரண்மனைகள், சர்ச்சுகள், பொதுத் தோட்டங்கள் எங்கும் நிரம்பினவை. 5 லக்ஷம் புஸ்தகங்கள் அடங்கின புத்தகசாலை உண்டு. சரித்திரச் சின்னங்கள் ஏராளமாக பொறிக்கப்பட்ட இடங்கள் அதைச் சுற்றி பல இருக்கின்றன. மாஸ்கோ, பெர்லின், டான்சிக், வியன்னா, லெனின்கிராட் முதலிய முக்கியமான சுற்று நகரங்களுடன் அதற்கு நீண்ட ரயில் தொடர்பு உண்டு. ரொம்பவும் வியாபாரத்தில் முன்னேறி இருக்கும் நகரம், நவீன சாதனங்களுடன், மிகவும் நவீன நகரமாகி விட்டது வார்ஸா இப்போது.

இவ்வளவு தூரம் ஏழு நூற்றுண்டுகளாக சரித்திரப் பிரசித்திப்பெற்று, பல முறைகள் தன் இழந்த சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்ள முயன்று, வெற்றி அடைந்திருக்கிற வார்ஸாவுக்கு இன்று மறுபடியும் ஒரு சோதனை வாய்த்திருக்கிறது. ஜெர்மனி கையில் அழிந்து கொண்டிருக்கிறது. எத்தனையோ தரம் அழிந்து புத்துயிர் பெற்றதுபோல இந்தத் தடவையும் அது வெற்றியடையத்தான் போகிறது.

Coffee

Ours for Quality

Raw, Roast or Ground
Available in several
grades to suit all.

GANESH & CO.

MADRAS.

Retail Branch:

285, CHINA BAZAR ROAD.

உழைப்பின் உருவம்

சி. சு. செல்லப்பா

கண்ட்ராக்டர் கண்ணாயிரம் பிள்ளையைத் தெரியாதவர்கள் எங்கள் ஜில்லாவிலேயே கிடையாது. அவரால் இதுவரை கை வைத்துக் கட்டப்பட்ட அத்தனை குழாய் திட்டங்களும், வாய்க்கால் வெட்டுகளும், குள மராமத்துக்களும், கட்டிடங்களும் அவரைப் பற்றியேதான் பேசிக்கொண்டிருக்கும். சென்னை சர்க்காரின் அங்கீகாரம் பெற்ற கண்ட்ராக்டர்களுள் எங்கள் ஜில்லாவில் முதன்மையானவர் அவர். அவருக்கு விட வேண்டிய கண்டிராக்டு விகிதத்தைக் கொடுத்த பிறகுதான், மற்றவர்களுக்கு கண்ட்ராக்ட்.

கண்ணாயிரம் பிள்ளையின் தற்கால வாழ்க்கையும், நிலைமையும் ஒருபுறம் இருக்கட்டும். கொஞ்சம் பூர்வீகத்தைத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். யாராவது என்னிடம் வந்து முஸோலினி ஒரு காலத்தில் சிப்பாயாக இருந்தவன், ராம்ஸே மாக்டொனால்டு யந்திரத்துக்கு எண்ணெய் போட்டவன், ஹிட்லர் அரை ரொட்டிக்கு யூதரிடம் வேலை செய்தவன் என்று அளக்க ஆரம்பித்தால் அவர்களுக்கு நான் கண்ணாயிரம் பிள்ளையைத்தான் சுட்டிக் காட்டுவேன்.

பல லகாரத்தில் சம்பாதித்து இருக்கும் அவர், ஒரு காலத்தில் தகப்பனாரால் ஒன்றுக்கும் உதவாக்கரை என்று கருதி, மண் தூக்கி வேலையில் நுழைக்கப்பட்டவராக்கும் என்றால், அப்புறம் மற்றவர்களைப்பற்றி பேசவே மாட்டார்கள். கண்ணாயிரம் உழைப்பு உருவம் ஊக்கத்தின் குழந்தை. முயற்சி திருவினையாக்கும் என்ற பழமொழிக்கு இலக்கு.

கண்ணாயிரம் பூர்வீகத்தைப் பற்றி எனக்குத் தெரியாது. என் தந்தை முப்பது வருஷங்களாக என்சினீயர் இலாகாவில் வேலை பார்த்து வந்தவர், கூறினதைச் சொல்கிறேன்.

அவர் வேலைக்குவந்த புதிசு. ஒரு கிழவன் ஒரு உதவாக்கரைப் பிள்ளையை இழுத்துக் கொண்டு வந்து சேர்ந்தான். அவர் முன்பு 'எஜமான், பள்ளிக் கூடத்திலே போட்டால் படிப்பும் வரல்லே. அப்பன், பாட்டன் மாதிரி மண் தூக்கியாச்சும் வயத்தைக் கழுவட்டும், கஞ்சித் தண்ணிக்கு வழி செய்யுங்க' என்று காலில் விழுந்து விட்டானாம். அவரும் தொலைந்துப் போகிறதென்று ஒரு நாளைக்கு இரண்டணா சம்பளம் போட்டுக் கொடுத்தாராம் அந்தப் பையன் கண்ணுவுக்கு.

அந்த உதவாக்கரை கண்ணு தான் இன்று கண்ட்ராக்டர் கண்ணுயிரம் பிள்ளையாக விளங்குகிருர் என்ருல் ஆச்சரியம்தானே!

பையன் என்றைக்குமே மண் சுமந்து கொண்டிருப்பானு என்ன? அப்பன் கூறியபடி அவனுக்கு படிப்பு வாசனையில்லை என்பது வாஸ்தவம்தான். அவர் போடும் கையெழுத்து நீலகிரிமலை மீது போகும் ரஸ்தாவைப்போல இருக்கும். ஆனல் அவனிடம் தொழில் வாசனை இருந்தது. அதுவே அவன் வாழ்க்கை நாடியாக அமைந்தது.

இந்தப் பெரிய கண்ட்ராக்டர்கள் இருக்கிருர்களே! ஆயிரக் கணக்கில் பெரிய பெரிய திட்டங்களைக் கண்ட்ராக்ட் எடுத்து விடுவார்கள். தங்கள் பெயருக்கு வேலை ஆரம்பமாகும்போது அதைத் துண்டுதுண்டாகப் பிறித்து தங்களுக்குக் கீழாக உப கண்ட்ராக்டர்களுக்கு விட்டு விடுவார்கள். சட்டப்படி உப கண்ட்ராக்டர்கள் வருவது தடுக்கப்பட்டதுதான். ஆனுலும் இந்த ஏற்பாடே இல்லாதது போலேயேத்தான் வெளிக்குத் தெரியும். இதை அவ்வளவு ரகசியமாக வைத்துக் கொள்ள முடியும் என்பதில்லை. அதிகாரிகளுக்குத் தெரிந்து அதைச் சாதுரியமாக சமாளிப்பதுதான் ஆச்சரியம்.

மண் தூக்கிய கண்ணு, சில மண் வெட்டுகள் கண்ட்ராக்டுகள் எடுக்க ஆரம்பித்தார் முதலில்.

மண்வெட்டு வேலை, கண்ட்ராக்டர்களுக்கு அல்வா சாப்பிடுவது மாதிரி என்று ஒரு அதிகாரி சொல்வதுண்டு. அது எனக்கு முதலில் புரியவில்லை. அதென்ன கடன் வேலையா என்ற சந்தேகம் யதார்த்தமாகக் கிளம்பினது. அப்புறம் அதைக் கேட்டு விளக்கிக் கொண்டேன். வெள்ளக்கரை மராமத்து திட்டம் என்ருல் பல ஆயிரம் ரூபாய்க்கும் மண்ணைக் கொண்டு வந்துதான் நிரப்ப வேண்டி இருக்கும். இதற்காகவே அடிக்கடி வெள்ளம் வரவேண்டுமென்று அவர்கள் பிரார்த்தனை செய்து, கடவுளோடுகூட கண்டிராக்ட் செய்துகொள்வார்களோ என்னமோ? அதை நான் நிச்சயமாகச் சொல்ல முடியாது. யூகம் தான். இல்லாவிட்டால் வெள்ளம் தான் இப்படி வயற்றெரிச்சலைக் கொட்டிக்கொள்ளுமா என்ன?

கட்டிட வேலைகள் முதலியன போல் இது கடினமானதல்ல. சுளுவாக மண் எடுக்கும் இடம் அருகில் இருந்தால் ரொம்ப சௌகரியமாகப் போய்விடும். இல்லை, கொஞ்சம் தொலைவில் இருந்தால் அந்த தூரத்துக்குத் தக்கபடியுள்ள விகிதத்தைக் கொண்டு சௌகரியப்படுத்திக் கொள்வார்கள் இந்த மண் வெட்டில் 'கள்ளக்குழி' வைப்பது என்ற வார்த்தை அடிக்கடி அடிபடும். அதென்ன கள்ளக்குழி என்று கேட்பீர்கள். அதுதான் கண்டிராக்டர் இனத்தின் வெற்றி ரகசியங்களில் ஒன்று. தெரிந்து கொள்ள ரொம்ப ஆசையானல் அவரையே கேட்டுக்கொள்ளுங்கள். நான் சொல்லப் போவதில்லை.

நாளடைவில் அவனிடம் வேலை வாங்கிய கண்டிராக்டர்களுக்குச் சமமாக, அவனும் டெண்டர் போட ஆரம்பித்துவிட்டான் கண்

ணுயிரம். மற்றவர்களுக்கு இது திடுக்கிடக்கூடியதாக இருந்தது. இந்த கண்டிராக்ட் திட்டம் இழுத்துப் பிடித்துக்கொண்டு போகும் படியாக இருக்கும். கண்டிராக்டர், அதற்குக் குறைவாக வேலை செய்யவும் முடியாது. அந்த சர்க்கார் திட்டப்படி வேலை செய்தாலோ ஒரு பைசா லாபமும் காண முடியாது. சிறுவன் கையில் எட்டணா கொடுத்து, அதற்கு ஏற்ற சாமான்களையும் சொல்லி மீதிக்கு மிட்டாய் வாங்கிக்கொள் என்று சொல்வதுபோல், கண்டிராக்டர்களுக்கு லாபம் ஒதுக்கிவிட்டு ஒரு திட்டம் போடுவதுண்டா என்ன?

கண்ணுயிரம் எப்படி இதில் வெற்றி பெற்றார் என்றால், மிட்டாய் பையன் செய்யவேண்டியபடிதான். அதில் கொஞ்சம் இதில் கொஞ்சம் பிடித்து காலணா மிட்டாய்க்குச் சேர்த்தால்தானே வழி. உங்களுக்கு புரிந்திருக்கும். புரியாவிட்டாலும் விளக்கமாகச் சொல்லி உங்கள் கண்களில் அவர் மதிப்பைக் குறைக்கப் போவதில்லை.

ஆரம்பத்தில் கண்ணுயிரத்தின் இடுப்பில் ஒரு கச்சையைத் தவிர வேறு ஒன்றும் கிடையாது. கண்ணுயிரம் பிள்ளையான பிறகு தோள்பட்டைமீது ஒரு துண்டு ஏறினது. எஜமான் வீட்டுக்கு வரும்போது துண்டு இடுப்புக்கு வந்து விடும். அது ஒரு மரியாதை ரகமல்லவா? அப்புறம் வேஷ்டி முழங்காலுக்குக் கீழே இறங்கினது. அப்புறம் ஒரு ஜிப்பா உடலை மறைக்க ஆரம்பித்தது. யாராவது இதற்கு கேலி செய்தால், 'குளிருக்கு அடக்கமாஇருக்குதுங்க' என்பார் பிள்ளை.

குளிர்காலம் போய்விட்ட போதும், ஜிப்பா அவரோடு தங்கிவிட்டது. இப்போதெல்லாம் எஜமானைக் கண்டவுடன் ஜிப்பா மேலே உள்ள துண்டு கைக்கு வந்துவிடுமே தவிர இடுப்புக்குப் போகாது. அதுவும் ஒரு மரியாதை தினுசுதானே!

'பிள்ளைவாள்! சிமிண்டு போட்டுக்கட்டினால் இப்படித்தான் உதிருமோ' என்று எஜமான் கோபமாக வேலைத் தளத்தில் கேட்கும்போது, கண்ணுயிரம் பிள்ளை பதில்சொல்வதைப் பார்க்க வேண்டுமே!

'இல்லீங்க எஜமான், போன வாட்டிமாதிரி சிமிண்ட் சுத்தமாக இல்லீங்க' என்ற அடிப்படையிலேயே தாக்க ஆரம்பித்து விடுவார். அதை சப்ளை செய்த எஜமானை விட இவருக்கு ரொம்ப அதிகம் தெரியும் என்ற எண்ணம். ஆனால், எஜமானனுக்குத் தெரியாதா என்ன? சிமிண்டைச் சலித்து, குழைத்து, அழுத்தமாகப் பூசாமல் வெறுமனே மேலுக்குத் தூவிக்கட்டினதால்தான் இப்படி உதிருகிறது என்று தெரியாதா? பேசாமல் அந்தப் பக்கத்தை இடித்துவிட்டுப் போய்விடுவார்.

பிள்ளைவாள் பாவம், அந்த சந்தர்ப்பத்தை வேறு வழியின்றி விட்டு விடுவார். மற்றொரு சமயம் வெள்ளக்கரைக்கு மண் போடுவதில் ஐம்பதடி தூரத்தை, நூறு என்று கணக்குக் காட்டி விடுவார். அந்த சாமர்த்தியம் எல்லாம் அவருக்கு உண்டு.

சப்டிவிஷன், சர்க்கிள், டிவிஷன் இலாகாக்களில் அவருக்குத் தெரியாத அதிகாரிகளோ, சிப்பந்திகளோ கிடையாது. எல்லோரையும் தெரிந்து வைத்துக் கொண்டால் சமயத்திற்கு பிரயோஜனப்படும் என்பது அவருடைய கருத்து. இந்தச் சமயம் அவர் டெண்டர் போடும் போதுதான் ஏற்படும்.

மற்ற கண்டிராக்டர்கள் எல்லாம் டெண்டர் போட்டு விட்டார்களா, என்பதையே ஆராய்ந்து கொண்டிருப்பார். அந்த கடைசித் தேதி வந்துவிடும். இவரைப் போலத்தானே மற்ற கண்டிராக்டர்களும்! கடைசி தினம் வரை காத்துக் கொண்டிருப்பார்கள். அப்போதுதான், ஒருவர் என்ன திட்ட விகிதம் போட்டு டெண்டர் போட்டிருக்கிறது என்பது மற்றவருக்குத் தெரியாது. யார் குறைத்துப் போட்டிருக்கிறார்களோ அவர்கள் டெண்டர்தான் ஒப்புக்கொள்ளப்படுவது யதார்த்தம்.

தன்னைவிட மற்றவர் அதிகமாகக்கேட்டிருப்பதாக ஒவ்வொருவருக்கும் ஞாபகம். அந்தக்கடைசி மணிவுரை தேர்தலுக்கு நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்வதில் எவ்வளவு ரகஸ்யம், உஷார் எடுத்துக்கொள்வார்களோ. ஒளிந்து மறைந்தெல்லாம்—அந்த மாதிரி கண்காணித்துக் கொண்டே இருப்பார்கள்.

பிள்ளைவாள் எப்படியாவது அந்தக் கடைசி நிமிஷத்திலும், மற்றவர்கள் போட்ட விகிதத் திட்டத்தை எல்லாம் உளவு விசாரித்துக்கொண்டு, அதற்கெல்லாம் குறைவாகப் போட்டுவிட்டு வந்து விடுவார். அவருக்கு டெண்டர் கிடைத்துவிடும். பிறகு வேலை முடிந்தபோதும், இதே மாதிரி சௌகரியங்கள் பில்களுக்கு பணம் வாங்கும்போது அவருக்கு ரொம்ப உதவியாக இருக்கும்.

எல்லாரும் 'பிள்ளைவாள் அதிஷ்டம்! பில் உடனே பாஸாகி வந்து விடுகிறது' என்பார்கள். அவர்களுக்கு உள்குட்டு எப்படித் தெரியும்?'

புது வருஷப்பிறப்பு வந்துவிட வேண்டியதுதான். அந்த ஒரு வாரத்துக்கு, பிள்ளைவாளையும், அவருடைய சிப்பந்திகளையும் காணவே முடியாது. சர்க்கிள் முதல், டிவிஷன், சப் டிவிஷன், செக்ஷன் அதிகாரிகள் வரை கண்டு கொண்டுவர வேண்டாமா?

இன்னொரு விஷயம். கண்ணையிரம் பிள்ளை சென்ற மூன்று தடவைகளாக எங்களூர் பிர்க்காவுக்கு ஜில்லா போர்டு அங்கத்தினர். இது ஒரு முக்கியமான விஷயம் அல்லவா? அதற்கு அவர் செலவழித்தது, பட்ட சிரமம் எல்லாம் இங்கே தேவையில்லை.

ஜில்லா வெங்கும் இதே பேச்சாகத்தான் இருக்கும். 'என்னையா, எந்த கண்டிராக்டும் இவருக்கே தானு, அவர் ஜில்லா போர்டு மெம்பராச்சே, கண்டிராக்ட் எடுக்கக்கூடாதே' என்றெல்லாம் பேச்சு. அதற்கென்ன, அவர் பெயரால், இல்லாவிட்டால் மாமன் மச்சான் பெயரில் எடுத்து விடுகிறார். இவ்வளவுதானே!

இந்த மாதிரி, நமது பிள்ளைவாள், பெரிய புழு சின்னப் புழுவைத் தின்பதுபோல, மற்ற

கண்டிராக்டர்களை எல்லாம் தன் னுள் அடக்கிக்கொண்டு விட்டார். முன்பு அவர்கூட போட்டி போட் டவர்கள் இப்பொழுது அவரிடம் உபகண்டிராக்ட் எடுத்துக்கொண் டிருக்கிறார்கள்!

இப்படி இருக்க திடீரென பிள்ளைவாள் சுகவாழ்க்கைக்கு ஒரு பெரிய சோதனை வந்து விட் டது. ஜில்லா போர்டை காங்கி ரஸ்காரர் கைப்பற்றப்போவதாக ஒரு கிளர்ச்சி ஏற்பட்டதோ இல்லை யோ, அவருக்குப் பகீர் என்றது. இவ்வளவு காலம் எடுத்து வந்த கண்டிராக்டுகள், செல்வாக்குகள், இதெல்லாம் பற்றின கவலை அதிக மாகிவிட்டது. நடைபெறும் காங் கிரஸ் பிரசாரத்தைப் பார்த்து, தான் எதிர்த்து நின்றால் ஜாமீன் தொகையாவது தப்புமோ என்ற சந்தேகமும், பயமும் ஊர்ஜித மாகிவிட்டது. 'சரி, பத்தாயிரம் ரூபாய் ஒதுக்கிவைத்து விடு வோம்' என்று தீர்மானித்தார்.

அதுவும் நம்பிக்கைப்பட வில்லை.

கொஞ்ச நாட்கள் ஆயின. ஊரெல்லாம் ஒரே வதந்தி. எழு நூற்றி மூன்று மல்லும் பீஜி சில் க்கும் போட்டுக் கொண்டிருந்த பிள்ளைவாள் நாலுமுழக் கதர் வேஷ்டியும், பூப்போட்ட அங்க வஸ்திரமும் போட்டுக்கொண்டு போகிறார்! அவர் காங்கிரசில் நாலணா மெம்பராகக்கூட ஆகிவிட் டார்!

இன்னும் விசேஷம், பிறகு அவரே அந்தப் பிர்க்காவுக்கு காங் கிரஸ் அபேக்ஷகர் என்று ஊரெல் லாம் அடிபட்டது. ஒருவரும் இதை எல்லாம் எதிர்பார்க்கவே இல்லை. 'இனிமேல் அவர் எங்கே கண்டிராக்ட் எடுப்பது' என்று எல்லோரும் பேசிக்கொண்டார் கள்.

தேர்தலும் நடைபெற்று, கண் ணாயிரம் பிள்ளையும் வெற்றி அடைந்துவிட்டார். ஊரெல்லாம் கொண்டாட்டம்; தலைவர்களிட மிருந்து பாராட்டுச் செய்திகள். அடேயப்பா! பிள்ளைவாள் ஒரு பெரிய பொதுஜன ஊழியராக ஆகிவிட்டார். எப்படியிருந்த பிள்ளைவாள் எப்படி ஆகிவிட் டார் என்று திகைப்பு!

ஆனல் இதை யெல்லாம்விட மேற்போய்விட்ட திடுக்கிடக் கூடிய விஷயம்! ஒரு நாள் பத் திரிகையில், தலைவர் தேர்தலின் பேர்து கண்ணாயிரம் பிள்ளை காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகி எதிர்க்கட்சி அபேக்ஷகருக்கு ஓட் டுக் கொடுத்ததாகச் செய்தி வந் தது! அவ்வளவுதான் ஊரில் ஒரே அமர்க்களம். கட்சி துரோ கம் செய்த பிள்ளைவாளை கண் டிக்கப் பொதுக்கூட்டங்கள். அவர் ராஜீனமாச் செய்ய வேண்டும் என்று ஏகமாகக் கூக்குரல்!

ஆனல் பிள்ளைவாள் ஊரி லிருந்து நேரே குற்றாலத்துக்குப் போய்விட்டதாகவும், ஒரு மாதம் கழித்துதான் திரும்பப் போவ தாகவும் தகவல் கிடைத்தது.

'மெம்பராகவோ ஆகிவிட்டது. இன்னும் மூன்று வருஷங்களுக்கு யார் எப்படி அசைக்க முடியும்? அதற்குஅப்புறம் பார்த்துக்கொள் வது' என்று கம்மென்று இருந்து விட்டார் எங்களூர் கண்டிராக்டர் கண்ணாயிரம் பிள்ளைவாள்!

நிமிஷக் கதைகள்

இயற்கைக்கு விரோதம்

படமுதலாளி:—படம் எப்படி?

பத்திரிகாசிரியர் :—எல்லாம் சரிதான். ஆனால் வாழ்க்கையைப் போல் தத்ரூபம் குறைவு.

படமுதலாளி :—எப்படி!

பத்திரிகாசிரியர் :—மனைவி புருஷனை அடிக்கடி பணம் கேட்கின்றாளே, அதுதான்.

படமுதலாளி :—ஏன்? அது எல்லார் வீட்டிலும் சகஜமாக நடக்கிறதுதானே?

பத்திரிகாசிரியர் :—அது சகஜந்தான்; ஆனால் கேட்டவுடனே புருஷன் பணம் கொடுத்து விடுகிறானே அதுதான் இயற்கைக்கு விரோதம்!

* * *

கருமி

பையன் :—அப்பா எனக்கு நேற்று சொப்பனத்திலே அரையணா கிடைச்சுதப்பா.

தகப்பனார் :—(கருமி) எலே, அதைப் பத்திரமா வைத்துக் கொள்ளுடா, செலவழிச்சுடாதே.

* * *

சரியான சூடு

மோட்டார் சொந்தக்காரர் :—நாங்கள் இந்த மாடல் மோட்டார்களை டஜன் கணக்கில் விற்று வருகிறோம்.

வாங்க வந்தவர் :—(அலக்ஷியமாக) சரிதான்; டஜன் என்ன விலையாகிறது?

உபத்திரவம்

"ரொம்ப மோசமாயிருக்கு ஸார், என் மனைவி இப்போதெல்லாம் தினத்திற்கு இரண்டுதரம் பணம் கேட்க ஆரம்பிச்சுட்டாள்."

"அவ்வளவு பணத்தையும் என்ன செய்கிறாள்!"

"என்னவோ தெரியவில்லை; இதுவரைக்கும் நான் பைசாக் கொடுக்கவில்லை."

* * *

காரணம்?

வரி வசூலிப்பவர் :—அப்படியானால் இந்த வீட்டின் வரி ரூ 14-8-0யைக் கொடுக்க முடியாது என்று சொல்கிறீர்?

"ஆமாம்".

"ஏன்?"

"இது என்னுடைய வீடல்ல; வாடகை வீடு".

* * *

கேள்விக்கு பதில்

"ஏண்டா வேணு! அஞ்சு ரூபாய் கடன் கொடுத்தேனே! அதை இப்போதாவது கொடுக்கப் போறயா இல்லையா?"

"இல்லை".

"எப்பவும் இதே பதில் சொல்றயே?"

"நீ எப்பவும் இதே கேள்வியைக் கேட்கிறாயே?"

அவ்வளவு தான்

"அந்த டிராம் கண்டக்டர்—அயோக்யன்—என்னை, நான் காசு கொடுக்காதவன்போல் விழித்துப் பார்த்தான்".

"நீ என்ன செய்தாய்?"

நான் காசு கொடுத்தவன்போல் பாவித்துக்கொண்டு அந்த ரீதியில் அவனைத் திருப்பி முழித்துப் பார்த்துவிட்டேன்".

* * *

ஐயோ பாவம்!

"என்ன ஸார், உங்க பக்கத்து வீட்டுக்காரருக்கு நூறு ரூபாய் கடன் கொடுத்தீரே, அதைக் கேட்டுண்டு இருக்கயளா?"

"ஓ! தினமும் கேட்டுண்டு தான் இருக்கேன். அவர் அந்த ரூபாய்க்கு வாங்கியிருக்கும் கிராமபோன் பாட்டுக்களை."

* * *

நாள் கணக்கிலா?

பிரசங்கி பேசினார் பேசினார் அப்படிப் பேசினார். எல்லோரும் கொட்டாவி விட்டனர். பிரசங்கம் ரொம்ப நீளமாகப் போனதால் ஒருவராவது அக்கரையாகக் கேட்கவில்லை. கடைசியாக பிரசங்கி "நான் நெடுநேரம் பேசி விட்டேன்" என்று சொல்லிக் கொண்டே தனது கைக்கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டார்.

கூட்டத்தில் ஒருவர்:—ஸார், கடிகாரத்தைப் பார்ப்பதைவிட பக்கத்திலிருக்கும் தேதிக் காலண்டரைப் பாருங்கள்.

கை நீளம்

சிடுமூஞ்சி ஆசாமி:—(தையற்காரனை நோக்கி) ஏனப்பா இந்தச் சட்டைக்கு ஒரு மைல் நீளம் கை வைச்சூட்டே?

தையற்காரன்:— கோவிச்சுக் காதீங்கோ ஸார்; எவ்வளவு குறைக்கணும்னு சொல்லுங்கோ நான் குறைத்துவிடுகிறேன்.

சிடுமூஞ்சி:—சரி; அரை அங்குலம் குறைத்துக் கொடு.

* * *

போக்கிரி

சோமு வீட்டுக்கு ஒரு நாள் ஒரு விருந்தாளி வந்திருந்தார். சோமு அப்பா அவரைச் சாப்பிடச் சொன்னார். விருந்தும் பலமாகவே இருந்தது. "இந்த மாதிரி சாப்பிட்டு எத்தனையோ மாசம் ஆச்சு" என்றார் விருந்தாளி.

கூட உட்கார்ந்து சாப்பிட்ட சோமு, "ஆமாம், மாமா! எங்க வீட்டிலும் அப்படித்தான். நல்ல வேளையாக நீங்கள் வந்தீர்கள்!" என்றான்.

* * *

தெரியுமே!

"நம்ம மோட்டார்களைப் பற்றி யோசிக்கவே வேண்டியதில்லை. மலை மேல் வேண்டுமானாலும் ஏறும்."

வாங்கவந்தவர்:—எனக்குத் தெரியும். முன்பு உங்களிடம் வாங்கின ஒரு மோட்டார்கூட மரத்தின்மேல் ஏறப் பார்த்தது.

ஹிட்லரின் தலைவிதி:

*

அகத்தியன் விளக்கம்

*

	சூரியன் செவ்வாய் புதன் சுக்கிரன்		இராகு
			சனி
குரு சந்திரன் கேது		லக்கினம்	

வியன்னாவுக்கு அருகில் பிரனா என்னுமிடத்தில் 1889ம் ஆண்டு எப்ரல் மாதம் 20-ம் தேதி சனிக்கிழமை மாலை 6-30க்கு ஹிட்லர் ஜனனம். நட்சத்திரம் பூராடம் முதற்பாகம், ஜெனன காலத்தில் செல் நீக்கி சுக்கிர திசை இருப்பு வருஷம் 18 மாதம் 7 நாள் 15.

தசாபுக்தி விபரம்.

பிறந்த தேதி	1889—4—20
சுக்கிர திசை இருப்பு	18—7—15
சூரியன்	6—0—0
சந்திரன்	10—0—0
செவ்வாய்	7—0—0
இராகு திசை	1930—12—5
இராகு புத்தி	2—8—12
	1933—12—17
குரு புத்தி	2—4—24
	1936—5—11
சனி புத்தி	2—10—6
	1939—3—17
புதன் புத்தி	2—6—18
	1941—10—5
கேது புத்தி	1—0—13
	1942—10—23
சுக்கிரன் புத்தி	3—0—0
	1945—10—23

இராகு திசை, புதன் புக்தி சித்திர விபரம்.

	1939—3—17
புதன் சித்திரம்	4—10
	1939—7—27
கேது ,,	1—23
	1939—9—20
சுக்கிர ,,	5—3
	1940—2—23
சூரியன் ,,	1—15
	1940—4—8
சந்திரன் ,,	2—16

	1940—6—24
செவ்வாய்	1—23
	1940—8—17
இராகு ,,	4—17
	1941—1—4
குரு ,,	4—2
	1941—5—6
சனி ,,	4—29
	1941–10—5

வகை மிகுத்த துலையதி லுதித்தவனின்
வளமி சத்த பல நல மதுவும்
தகை மிகுத்த பரலளவு பெற்றததில்
தகுதியுற்ற தச மூன்றதாம்
பகையு முற்றுயரு பருவ வாக்கியமும்
பத்தெனும் பகுதி வந்துளான்
துகையு முற்ற பரலதிக முற்றாசர்
துய்ய மூல திரிகோண மேல் (1)

(கருத்து) சகல லட்சணங்களும் பொருந்திய துலா லக்கினத்தில் உதித்தவனின் வல்லபம் மிகுந்த பலாபலன்களைச் சொல்லுவோம். துலா லக்கினத்தில் பதிமூன்றாவது பரலில் உதித்ததினாலும் அந்தத் துலாத்தில் பருவ வாக்கியம் என்னும் தேவதா அம்சத்தில் பத்தாம் பாகத்தில் பிறந்ததினாலும், துலா லக்கினத்திற்கு மூன்றாமிடத்தில் குரு அஷ்டவர்க்க முறையில் அதிக பலம் பொருந்தி மூலத்திரிகோணமான தனுசு ராசியில் நின்றதுடன்,

கோணமுற்று மதி சிகியு முற்றதனில்
கூடி னின்றுலவ வாடிலே
காணு மிப்புவியி னதிபனுன குசன்
கனமிகுத் தலரி சுங்க னேழ்
வேண யோகமுரவே நவத்தாவு
விச்சையுற்று கவி தசமதாய்
வீணை யோகமுடனே யுதித்த திவன்
வீரியத் தெதென சொல்லுவோம். (2)

(க - து) ராச்சியாதிபதியான பத்தாம் வீட்டுக்கு உடையவன் சந்திரன், கேதுவுடன் துலா லக்கினத்திற்கு மூன்றிலிருந்த குருவுடன் சேர்ந்திருப்பதினாலும், மேற்படி லக்கினத்திற்கு எழில் அந்த மேஷாதிபதியான செவ்வாய் மூலத்திரிகோணம் பெற்று, லாபாதிபதியான சூரியனும் லக்கினாதிபதியான சுக்கிரனும் சேர்ந்து சப்தம கேந்திரத்தில் இருந்ததினாலும் (7-ம் இடத்தில்) அநேக யோகங்களைச் செய்ய வேணும் என்பதாக, லக்கி[illegible]திற்கு 9-ம் இடத்தில் இராகு இருந்ததினாலும், சுக பஞ்சமாதிபதியாகிய [illegible]பதியான) சனி தசம கேந்திரத்தில் வலுவு பெற்று இருந்தி

ளுலும் (தசமகேந்திரம்...10ம் இடம்) வீரை யோகமென்னும் ஓர் அழகான காலத்தில் இச்சாதகன் ஜெனித்ததினால் இவனுடைய வீரம் பொருந்திய செய்கைகளை என்ன சொல்லுவோம்?

சொல்லு வாக்கி னதிகாரி யேளிதிரை
குழுஞ் சூரர்குல காலனர்
நல்லதான திரிமூவ கோணமிசை
நாடியுற்ற செயதிலகமே
வில்லதான பதியோனு மங்கவனே
வீரியத்துட னிருந்துதான்
மல்லினுக் கிரையை கண்டிருந்த தனை
மாமுனிப் புகல லாகுமோ. (3)

(க - து) வாக்கு ஸ்தானதிபதியும், சப்தமாதிபதியுமான (2, 7க்கு உடையவனை) செவ்வாய் மூலத்திரிகோணம் பெற்று சூரியன், சுக்கிரன் இவர்களுடன் கூடி மேஷ ராசியில் இருந்த அதிசயமான யோகத்தை என்னவென்று சொல்ல முடியும்? இது மகா ராஜ யோகங்களை தரும். இத்துடன் மூன்றாமிடமான தனூர் ராசிக்கு அதிபனான குரு மூலத்திரிகோணம் பெற்று இருந்த அங்காரகனைப் பார்த்துக் கொண்டிருப்பது மகா விசேஷமாகும்.

ஆகு வாகனனி னருளதா லிவனின்
ஐந்தினுக்குரிய வதிபனும்
பாகு பெற்று தசபதியிருந்த தொரு
பக்குவத் தெதெனப் பேசுவோம்
வாகு பெற்றிவ னனேக சீரதனை
வலிய பெற்றிலகு மதிபனாய்
சாகுமட்டு மிவன் சத்துருக்களினை
சங்கரித்துயர வெண்ணுவான். (4)

(க - து.) கடவுளின் கிருபையால் பஞ்சமாதிபதியான (5-க்குடையவனை) சனி பத்தாம் இடத்தில் இருந்தது அதனினும் விசேஷமாம். பக்குவசாலியாகி இவன் அநேக சீர்களை வலிய அனுபவித்து ஓர் ராச்சியத்துக்கும் அதிபனாவான். இவன் சாகுங் காலம் வரை சத்துருக்களை சங்காரம் செய்யவே எண்ணுவான்.

எண்ணமேதரினும் உன்னியே யரிவன்
எத்தனித்த ததை விட்டிடான்
மண்ணிலே யிவன் அரிந்திடாததுமிலை
விண்ணுளோ ரிவனை போற்றுவார்
வெண்ணிலே வல தெழுத்திலேனு மிவன்
வெற்றி பெற்றுயர் விவேகியாம்
உண்ணிலே யுடை யுடுத்தலாமதிலும்
உற்றிடா னதிகப்பற்றெதும். (5)

(க - து.) எந்த விஷயங்களையும் மனதில் ஆய்ந்தோய்ந்து பார்த்துப் பக்குவமாய்ச் செய்து முடிப்பான். எப்படியும் தான் எடுத்த காரியத்தை

டான். உலகத்தில் இவன் அறிந்திடாதது ஒன்றுமிராது. தேவர்களும் கூட இவன் சாமார்த்தியத்தைப் போற்றுவார்கள். எண் எழுத்துக்களில் விசேஷ ஆராய்ச்சி இல்லையாயினும் விவேகத்தால் படித்த வித்வான்களுக்கும் மேலாக விளங்குவான். போஜனத்திலேனும், உயர்ந்த ஆடையாபரணம் அணிந்து கொள்வதிலேனும் ஆசையில்லாதவனு மாவான்.

பற்றுலற்ற வுயர் பக்குவங்க ளுளன்
பாவை பாவலர் பலனற்றவன்
வெற்பை யொற்ற தனமுற்ற நங்கையுர
வுண்டு வுண்டு மணமற்றவார்
துற்ற நங்கையுட னொற்று தான் சில
துரைத்து காரியமு மேற்பனும்
சற்று கேளினமு முற்ற நங்கையவள்
சாரும் சத்துருவி னினமதாய் (6)

(க - து.) எதிலும் தனக்கு வேணுமென்ற பற்றில்லாதவனும், பக்குவசாலியாயும். களத்திர புத்திர சுகமில்லாதவனும், மணஞ் செய்து கொள்ளாமல் வேறொருத்தியின் நேசமுள்ளவனும், அவள் உடன் சில நாள் ஒற்றிருந்து சில காரியங்களையும் அவளுடன் கலந்தாலோசித்துச் செய்து வருபவனும், சத்துருவின் இனத்தைச் சேர்ந்தவளாயுமுள்ள அப்பெண்ணின் நேசம் சிலநாள் உள்ளவனுமாவான்.

இனசனத்தாவு மிவனுதித்த புவி
இதனைக் காத்தருளு மிதமுளான்
கனமிகுந்த புவியிரைவனுகி சில
குண மிகுத்த குரிகுடை யுளான்
சனமிகுத்த தனதரிய பூமி மிசை
சத்துருக்க ளிடு மடிமையை
மனமறிந்து விட மகிழ்வு முற்றதனை
மறியல் செய்து மன மகிழ்வான். (7)

(க - து.) தான் உதித்த தேசத்தின் மீதும் தேச மக்களின் மீதும் மிகுந்த உறவு பாராட்டுபவன் தேசத்தையும் மக்களையும் காத்து ஆளுபவன். குண மிகுந்த குடை உள்ளவனும் ஜனம் அதிகமாயுள்ள தன் ராச்சியத்தில் சத்துருக்களால் இடப்பட்ட அடிமைத்தனத்தைத் தெரிந்தும் விட்டுக்கொடுக்க மனமில்லாதவனாய் அடிமைத்தனங்களை மீறி மன சந்தோஷமடைபவனுமாவான்.

மகிழும் யோக கனசுக மிகுத்திவனும்
மன்ன மன்னவர்களஞ்சிட
புகழுங் கொண்டுலக மெங்கினும் பெரிய
புனித னென்று பலர் பேசுவார்
இகழும் வாழ்வு சிலதின மிருந்திடினும்
இச்சையுற்றதனை கொள்ளுவான்
நிமழு காலமுட னேரு காலமதை
நினைவில் வைத்துன மரிகுவான் (8)

(க-து.) இவன் அடிமைத்தனங்களை மீறி கன சுகங்களை அனுபவித்துப் பெரும் அரசர்களும் அஞ்ச, உலகமெங்கும் இவன் புகழைப் பேசி வல்லவ வென்றுஞ் சொல்லவும், இழிவான வாழ்வு சில நாள் இருந்திருந்த போதிலும் அக்காலத்தில் நினைத்ததுகளை எல்லாம் பூர்த்தியாய் அடைபவன். நடக்கும் காலத்தையும் இனி நடக்கப் போகும் காலங்களையும் மனதில் ஆராய்ந்து அதற்குத் தகுதியான உளவுகளை அறிந்து கொள்ளுபவனுமாவான்.

உளவறிந்து தொழிலதனை செய்திடுவன்
ஊக்க மேதினி னுமிக்கவான்
வள மிகுத் துயரு முடல முற்றிடுவன்
வஞ்சகற்கு மிக வஞ்சகன்
இளமைதன்னில் சுக மெதுவு மற்றிடுவன்
ஈசனின் கிருபை தன்னினால்
மிளமையான வயததனின் பின்னிவனும்
மிகு சினப்படையில் சேருவான். (9)

(க - து) காலத்துக் கேற்றபடி உளவறிந்து காரியங்களைச் செய்வான். வளப்பம் பொருந்திய அழகிய உயர்ந்த சரீரமுள்ளவன். எதையும் ஊக்கமோடு செய்பவன். வஞ்சகற்கு மிக வஞ்சகன். சிறு வயதில் சுகமில்லாதவன். கடவுள் கிருபையால் குமார வயதின் பிறகு சினமிகுந்து போர்த் தொழிலில் சேருவான்.

சேரு மின்னவனி னரிய யோகமது
செப்புவோம் தசமூன்றிடை
நேருமங்கு தமதரிய பூமியிசை
நின்று காவல் செயு நெறியினால்
பேரு மற்று சிறு வடிமையாக தொழில்
புரிகுவா னதனினிடையிலே
சீரு முற்ற புவியரசு செல்தவனும்
சின மிகுத்த சிறு முறையிலே. (10)

(க-து) அப்படிப் போர் செய்யும் சேவகத் தொழிலில் அமைந்த பிறகு பெரிய யோகம் ஒன்று இவனுக்கு உண்டாகும். அது முப்பது வயதுக்கு மேல். இவன் சிப்பாய்த் தொழில் செய்து வந்த நெறியிலிருந்து பேரில்லாமல் சிறு சிப்பாய்த் தொழில் செய்து வந்த காலத்தில் அப்பொழுது இவன் ராச்சியத்தை ஆண்ட அரசன் சிறு முறையில் மிகக் கோபமுண்டாகி அதனால்,

சிரிதெனச் செயமு மெளிதி லுள்ளதென
சிந்தை யின்னி தடர் பகையிலே
அரய ராசருட னெதி ரெதிர்த்தவர
அவ னெதிர்த்துமதை சிலதினம்
பெரிய போரதனை புவியிலேற்றிடினும்
புயமிகுந்த படை சிதறலும்
உரிய பாக்கியமு முணவு மற்றுவர
உதவு வோரு மிலாதிடையிலே. (11)

(க - து) இது சிறிய போர், சீக்கிரத்தில் ஜெயமடைவோ மென்று நினைத்துப் போர் தொடர எதிர் பாராதபடி ஒரு பெரிய அரசன் அவனை எதிர்க்க அவர்களையும் இவன் பல நாள் எதிர்த்து பெரிய போர் உலகத்தில் செய்தும் புஜ வலியுள்ள அவனுடைய சேனைகள் சிதரவும் பாக்கியமும், உணவுப் பொருள்களும் இல்லாமற் போக உதவுவோர்களும் இல்லாததினால்

இடையிலே பகையை விடவு மங்கெதிரி
இட்ட சட்டமதின் திட்டமால்
படை குறைந்து னிதினிலே யழிந்து பல
பகுதியாதி களில் அடிமையாய்
குடைமிகுத் தரசர் நடையிலிட்டபடி
குவிய நேசமொரு முறையதாய்
நடை யெடுக்க படைமுத லெடுத்தவனும்
நங்கை வாழரசு நாடியே. (12)

(க - து) இடையிலே போரை நிறுத்த, ஜெயித்த எதிரிகள், இவன் ராச்சியத்திற்கு, இட்ட சட்டத் திட்டங்களால், அரசு குறைந்தும், நிதிகார் குறைந்தும் நிலை அழிந்தும், சில முறைகளில் அடிமையாகவும், பெரிய உலகத்தையாளும் ஜெயித்த அரசர் செய்து வைத்து ஒருவாறு சமாதானம் ஏற்பட, முதல் பகைதொடுத்த அரசன் அவ்வூரை விட்டோடி ஓர் பெண்ணரசின் ராச்சியத்தையடைய

நாடியே பெரிய நாட்டை யாண்டிவனும்
நன்மையற்றகலு நாள் முனே
தேடி வந்து துலையதி லுதித்தவனும்
திறமிகுந் தரிவை செயலதால்
வாடி முன்னிவனும் வளமுராப் படையில்
வந்திருந்து சிறு வழியனுய்
கூடி னின்று மிவன் னுடழிந்துபல
குறை மிகுந்த தென குன்றியே. (13)

(க - து) துலா லக்கினத்தில், பிறந்த இவனுடைய ராச்சியத்தை, அக்காலத்தில், ஆண்டவன் மறைய, அதன் முன் பின் இவன் தேசம் படை குறைந்தும் நிலையழிந்து பல பாகங்கள் பல தேசத்தைச் சேரவும் சில அடிமைத்தனங்கள் நேரவும் கண்ட துலையில் பிறந்த இவன் திறமிகுந்த ஒரு பெண்ணின் உதவியுடன் தான் சிப்பாயாய் இருக்கும்பொழுது தன் தேசம் அழிந்ததை நினைந்து வருந்தி உடல் பதைக்க

குன்று மவ்வகை குணங்க ளூற்றுவா
குணமிகுந் தரிவை சிலரினல்
நின்று மங்கு சில தேசமக்கள் தனை
னிதமுங்கண்டு னிலனெறி சொல
நன்று நன்று என னவின்று மங்குபலர்
நல்லவ னுரவு கொள்ளலும்
சென்று மங்கு பலரோ டொரந்திவனும்
செய்ய கட்சி கலகங்களே. (14)

(க - து.) அப்படிக் கவலைப்படும்போது இவனுக்கு சில பெரிய எண்ணங்கள் தோன்ற இன்னும் சிலருதவியினுல் தேசத்தில் உள்ளவரைச் சிலரை தன் வசஞ் சேர்த்து சில நெறிகளைச் சொல்லிவா இவன் சொல்வது சரி யென்று சிலர் சேர, பிறகு சில கட்சிகளையும் கலகங்களையும் உண்டாக்க,

கலக மங்கு சிலருடனிருந்து செய
மனமிகுந்த புவியதனை யாள்
பெல மிகுந்த வதிபதிகளின்னவனை
பிசகு செய்த னெனப் பற்றியே
சலன மிக்க கொள சிறையடைத்திவனை
சிரம முற்றிடினுஞ் சிறையிலே
நலமெனச் சிலதுதின மிருந்திவனும்
நவிலுவோ மரிவை நாட்டியே, (15)

(க - து.) கலகம் சிலருடன் செய்து வர அப்போது ராச்சியத்தில் அதிபதியாயிருந்தவன் இவன் தப்பிதங்கள் செய்து வருகிருன் என்று பிடித்துச் சிறையில் அடைக்க, சிறையில் இருந்தும் நல்லதென நினைத்து சில நாள் அதிலிருந்தும் அறிவை ஆராய்ச்சி செய்தும்,

அரிவை கொண்டு மனமதினுல் ஆனபடியிலுன்
அழகு கொண்ட செயலதிக்மே
நெரியை கொண்டு மனமவுன ஞானமதை
நிலையி லடைந்த தின மிடையே
விரிவு கொண்ட யிவனரிய பூமியதை
வீரய மூட பல விதிகளால்
பரிவு மற்று பல பகைவ ரிட்டடிமை
பதி பரித்த வகை முனே. (16)

(க - து.) அறிவை மனத்தில் நிலைக்கச்செய்து இவன் அழகாய்ச் செய்யும் காரியங்கள் சில. நெறியுடன் மவுன ஞானத்தைக் கொண்டு தக்க பக்குவம் பெற்ற நாளில் விரிவான இவன் பூமியை விரயங்கள் மூடி வர, சத்துருக்கள் முன்னுல் அடக்கி வைத்த,

முன்பழிந்த பல பூமியோ டினமும்
முரையடக்கு பல தடையதும்
நின்று ஞஅ அரசினேர்மை கொண்டுவரின்
நிலைகுலைந்த நமதடிமையை
வென்று சத்துருவு மிட்ட கட்டளையை
விதியறிந்து வித வகையினுல்
வன்று வென்றவர்கள் இன்று அடங்கிவர
வகை யமைத் தவ்னி தன்னிலே (17)

(க - து.) முன் அப்படி அழிக்கப்பட்ட தேசத்தையும் சில அடக்கு முறைகளையும் நான் அதிகாரியாய் வருவேனேயானுல் நமக்கிடப்பட்ட அடிமைத்தனங்களை அழித்து சத்துருக்களால் நம் தேசத்திற்கு நேர்ந்த அடிமைகளை யெல்லாம் வென்று இரு வழிகளால் கண்டித்து அன்று செயித்தவர்கள் இன்று அப செயமடைய அநேக வழிகளைச் செய்வேன்.

அவனி தன்னி லெவரவர் மகிழ்ந்திடவும்
வரிய பூமி முன மளவுமேல்
தவமிருந்து நமதரிய சோதிரரின்
தக்க வாயு ளழியாதவார்
கவனமோடு கவைதனை முடித்திடுவன்
கடவுளின் கிருபையளவினால்
எவரறிந்திடுவ ரிதனை யென்றவனும்
இசைய வங்கெழுதி வருருவான் (18)

(க-து) உலகத்தில் எல்லோரும் ஆச்சரியப்பட நமது பூமியை முன்னிருந்ததை விடப் பெரிதாக்குவேன் யென்றும், தவமிருந்தும் நமது தேசமக்களின் ஆயுளழியாமலே கவனமாய் இருந்து காரியங்களையும் முடித்துக் கொள்ளுவேன், கடவுளின் கிருபையால் எல்லாம் முடிப்பேன், இதை யார் அறிவார் என்னும் கருத்துடன் சுயமாய்ச் சில நூல்களும் எழுதுபவனு மாவான்.

எழுது நூலதனை பழுதிலாது செய
லிச்சை யுற்றவனை பற்பலர்
பழுதரா திவனை விடுதல் செய்வதென
பக்கமான பல மிகுதியால்
வழுவரா திவனு மெழுது வாரரிய
வகைமிகுத்தவர்க ளுதவியால்
மிழிவுராது புவியதனை கார்த்தருள்
மிகு சனத் ததிபனாவனே. (19)

(க-து) தான் எழுதியதின்படி எல்லாம் செய்ய நினைத்த அவனின் வாசகங்களைச் சிலர் ஒற்றுக் கொண்டு குற்றமில்லாத இவனை விடுதலை செய்ய வேண்டுமென பக்கபலமாய்ச் சிலர் வர சிறையிலிருந்து வந்த பிறகு சில நாளில் அத்தேசத்திற்கு அதிபதியுமாக்கி வைப்பார்கள்.

அதிபனாகி யிவ னன்றமைத்தபடி
வழக்குச் செய்ய புவியதனையே
பதிவிலங்கு சிலறடைய வுற்றதனை
படை யெடா ததனை பெருகுவான்
விதிவித்த பல தடையை விட்டிவனும்
வினையரிந்து பல விதி செய
மதி மிகுந்த யிவ னதிசயங்கள் தனை
மகிழு வாருலகி லதிகமே (20)

(க-து) அதிபனான பிறகு அவன் அன்று எழுதியபடி முன்னே பிரிந்து போன சில ஊர்களைப் படையெடுக்காமலே ஜெயித்து முன்னிருந்த கட்டுப்பாடுகளை மீறியும் காலந் தெரிந்து காரியத்தை முடிப்பான். இதைப் பலரும் பார்த்து ஆச்சரியப்படுவார்கள்.

உலகி லுள்ளவர்கள் பலருமின்னவனை
உரிய காவலரி லொருவனாய்
சிலர் நினைந்திடுவர் பலர் பயந்திடுவர்
சின மிகுந்தவனு மிவனென

பலர் முனிந்திவனை பழுது செய்திடுவர்
பத மறிந்திவனு னயமதாய்
விலகி னின்று வடனுளவரிந்தவரை
வெற்றி செய்திடு விவேகியே (21)

(க-து) உலகிலுள்ளவர்கள் இவனை தனியான போர் வீரனென்றும சொல்வார்கள், பலர் இவனை நினைத்தாலும் பயப்படுவார்கள், பலர் இவனுக்கு விரோதமாகவும் செய்வார்கள், பதமறிந்து நயமாய் அவர்களை அழித்து வெற்றியடையும் விவேகியாம்.

செய்யுங் காரிய மறிந்து காலமதில்
செய மரிந்திடுவன் இதுவெலாம்
அய்யமல்ற புவியா ரலானவனும்
அரிய சென்ம மதற் கேழிலே
பைய்ய வுற்று பாலதிக முற்றுயர்
பகரு மூல திரிகோணமாய்
வைய்யகத்திலுர வந்துதித்த துடன்
வரிய வந்தணனு மூன்றிலே (22)

(க - து) தான் செய்யும் காரியங்களைக் காலமறிந்து செய்து முடித்துக் கொள்வான். பூமிக் கதிபதியான அங்காரகன் ஜென்ம லக்கினத்திற்கு ஏழாயிடத்தில் மிகுந்த பாலக்ளின் பலங்கொண்டு மூலத்திரிகோணம் பெற்றதாலும் குரு மூன்றுமிடத்தில் இருப்பதாலும்

மூன்றி லுற்றிடினு மூலகோணமுற
உதய வாதிபனு மேழிலே
தேன்றி ஸின்றலரி மால் கவிந்துமுற
தொல்லை யற்றறிவினுதிகன்
ஊன்றியுற்று தச கேந்திரத் ததனில்
உதய முற்றதிவ னுயிரதால்
ஈன்றெடுத்தவ ரழிந்த பின்னிவனும்
இயலிலா தலையு மிடையிலே (23)

(க - து) மூன்றுமிடத்தில் குருவும் மூலத்திரிகோணம் பெற்றதாலும் லக்கினுதிபதியான சுக்கிரனுடன் சூரியன் புதன் சேர்ந்திருந்ததாலும் தச மகேந்திரமான பத்தாமிடத்தில் சனி நின்ற காலத்தில் இவன் ஜனன மெடுத்ததால் இவனைப் பெற்றவர்கள் அழிந்த பிறகு இவன் வழியில்லாது அலையுங் காலத்தில்,

இடையில் யோக மிகவடைய வந்தவிதி
யியலுமுன் சொல் கிரகத்தினுல்
படையிலுற் றிவனின் னடையினுலுயர
பலமிகுந்த புவி யிரைவனய்
தடையிலாது பலரிவனை தேர்ந்தாசு
தக்கவார் தரினுர் தகுதியோ
குடை விரித்து குண முடி தரித்து வருங்
குண மிலாதரசை யடைகுவான் (24)

(க - து) இடை வயதில் இவன் அதிக யோகங்களை அடைய வேண்டிய் விதியுடன் கிரக அமைப்பும் இருந்ததால் சிறு படைத் தொழிலில் சேர்ந்து தான் நடந்து கொண்ட நடையினுல் பலமிகுந்து அரசன் போலாகி மகிழ்வான். பலர் தேர்ந்தெடுத்து இவனை தேசத்திற்கு அதிபனுக்கியும் பலன். என்ன? கடைசி வரை சற்குணங்களுடன் தருமப்படி நடந்து அரசைப் பெறமாட்டான்.

அரசுமற்று பலாதிப னுகுமிவன்
அளவுமே தன வங்கரியிலோ
வரசு மீந்தசபதியான மதி
வகையிலாது மறை விடமதாய்
திரமிகுந்த மதிக் கிருபுரங்க ளதில்
திகளுங் கோளுமிலாத் தீதலால்
உரமிகுந் திவணினரிய தேசமதில்
யுயரி வாழ்வு செயமதிகமே. (25)

(க - து) தகுதியான அரசைச் செலுத்காத பலருக்கும் அதிபதியாகிய இவன் முடிவு என்னவென்று பார்க்கின் அரசைக் கொடுத்த பத்தாம் வீட்டுக்கு அதிபதியாகிய சந்திரன் வகையில்லாமல் மூன்ருமிடத்தில் மறைந்தும் இரண்டு பக்கங்களிலும் கிரகமில்லாது காலியாய் இருப்பதினுலும் ஆசையுள்ள தனது தேசத்தை உயர்வுடன் பல ஜெயம் பெற்று வாழினும்,

அதிக யோகமதை யண்டுவான் அரவின்
ஆசியாந் திசையின் பாதி நாள்
சதியகற்றி சில விதிவிலக்கி பெரு
சயமடைந்திடினு மூனையிலே
கதிமிகுத் தரவை கனமிகுத்தரசன்
கண்டு மாரின் அதிகாரியாய்
விதி விதித்தபடி விவனிருந்து சிரை
விடவிருந்து சய மடைகுவனே. (26)

(க - து.) முன் கூறிய அநேக யோகத்தையும் ஜெயங்களையும் அடைகுவான். இராகு திசை முதற் பாகம் வரையிலும் (50 வயதும் 7 மாதமும் 15 நாள் வரைக்கும் இராகு திசை முதற் பாகம்.) தேசத்திற்குள்ள சில குறைகளை விலக்கி ஜெயமடைந்தாலும் இராகு திசை பிற்பாகத்தில், இராகுவுக்கு ஆரும் வீட்டு அதிபதியாகிய குரு பார்வை இருந்ததினுல்தான் முன்னுள் இவன் சிறையில் இருந்ததும் ஆனுல் சிறையிலிருந்து விலகிய பின்தான் பேரும், யோகமும் ஜெயமும்.

செயமிகுத்து வருமரவின் முன்னளவும்
சலனமற்றுரினும் பணி பினுல்
பகை மிகுத்த முனம் பகைவர் மிஞ்சிடுவர்
பக்குவங்கள் பல னற்றுபோம்
நயமிகுத்திடினும் நன்மை யில்லையென
நன்கறிந்து மனம் நாணுவன்
தயவு பெற்றதமதரிய தேச தனம்
தக்க போரிடு வகைக்குமே. (27)

(க - து.) இராகு திசை முற்பாகம் வரை ஜெயமுண்டு. கவலையில்லாமல் காரியம் நடக்கினும் முன்னே போரிட்டு ஜெயித்தவர்கள் பின்னும் இவன்மீது போரிட முனைவார்கள். இவனின் தந்திரமெல்லாம் பலிக்காது. இவன் அவர்களுடன் சமாதானம் செய்து கொள்ளுவதில் நன்மை யில்லையென்று எண்ணி மனதில் நாணமடைந்தும் தனது தேசத்தின் செல்வாக்கெல்லாம் போர் சாதனங்களாய்ச் செய்து வைத்துவிட்டோம் என்றும்,

வகையதான பெருமரிய போர் புரிய
வகை வகைக் கருவி செய்தனம்
துகையு மங்கு பலரிடமிருந்து பரி
தயவுமற்று பல கொண்டனம்
தகைமையான சிலபுவி யகன்றதை
தக்கவாறுளவில் வென்றனம்
பகை மிகுத்தவர்களிலே யிதன் வரையால்
பகாவூரை கொளும்படியிலே (28)

(க - து.) பெரிய போர் செய்யும் வரைக்கும் நூதனமான பல கருவிகளையும் செய்து வைத்திருக்கிறோம். பலரைக் கொள்ளையடித்து பொருள் கொண்டும் சில பலந்தேடினோம். முன் பிரிந்துபோன சில ஊர்களை உளவாய் வென்றோம். இதுவரையில் யாரும் எதிர்த்து வரவில்லை. பகா ஊரை யடையும் இக்காலத்தில் (பகாவூர்...போலந்து என்னலாம்.)

படியிலே முனமும் பழுது செய்தவர்கள்
பலரினோடுறவு பெரியதாய்
இடியிலே யினியு மஞ்சிடார்களென
இனி புரிந்திடுவ தெதென தன்
அடியிலே மனமரிந்து வந்திடினும்
அரிவதொன்றுமிலை யழகென
முடிவிலே யிவனடுத்து போராதும்
முரையிலே துடா மதியிலே (29)

(க-து) இப்பாவூரைப் பெறுவதற்கு எத்தனிக்கும்போது முன பகைத்து வென்றவர்கள் முயற்சியோடு எதிர்த்து வர இதற்கு என்ன செய்வதென்று சிந்திப்பான். ஆதியில் இதை கவனிக்காமல் போய் விட்டோமே, சரி இனி ஆவது ஒன்றுமில்லை, போர் தொடருவதே சரியென்று முடிவு செய்து கொள்வான்.

மதிபிலே யிவனரிந்து சேருபகை
மகிழ்விலே சயமு மடைகுவனே
கதியிலே யிவனின் மதிபுரங்களதில்
கனமிகுங் கிரகமிலை பார்
விதியிலே முன மமைத்தவாரடரும்
விவனுதித்த வயதன்பதே
சதியிலே வருட மொன்று தொட்டிடையில்
ஜயமுறாது பகைசஞ்சலம். (30)

(க-து) அப்படி அறிவால் முடிவு செய்து கொண்டு போர் தொடரு வான், பாவம், சந்தோஷத்துடன் இவன் ஜயமடைவனே? அடையான். இவன் கர்மத்தின்படி சந்திரனுக்கு இரண்டு பக்கங்களிலும் கிரகமில்லையே! இவன் கருமத்தின்படி நடக்கும், இவன் பிறந்தது முதல் ஐம்பதாவது வயதுக்குமேல் ஐம்பத்தோராவது வயதுக்குள் இவனுக்கு ஜயம் வரக் கூடாத போர் தொடருவான், அதனால் சஞ்சலமடைகுவான்.

சஞ்சலங்களுட னங்கு போர்களிட
    சத்துருக்கழ் சயமடையவே
வஞ்சகன் யென வடுத்து துன்பமிக
    வசைகளிட்டு வகையவர்களே
அஞ்சவா னிவனுமடியர் மிஞ்சுவர்
    அழகு கொண்ட பெயராழிகுவான்
மிஞ்சுவார் பகைவர் மீதி காண்பதில்லை
    மிக்க துன்பம் பணி திசை பினே (31)

(க-து) மனச்சஞ்சலத்துடன் தான் போரில் ஈடுபட்டு நடத்துவான், ஆனால் எதிரிகள்தான் முடிவில் ஜயமடைவார்கள், அதனால் இவன் வஞ்ச கன் என்றுதன் தேசத்தவர்களே இவனை நிந்திப்பார்கள், இவன் பயப் படும்படி தன் கீழ்ப்பட்டவர்களும் மிஞ்சுவார்கள், தன்னுடைய கீர்த்தியை யும் இழப்பான், எதிரிகள்தான் மிஞ்சிப்போவார்கள், இவன் மீதி ஒன்றும் காணப்போவதில்லை, இப்படியான அநேக துன்பங்களும் இராகு திசை பிற்பாகத்தில் உண்டாகும்.

(வேறு)

பின்னும் பணியின் திசைபதிலே
    பிசகா மாலின் றுணிடையே
சொன்னேன் சிகி யந்திரமதனுள்
    சிறப்புக் குறையச் சீரியவன்
மன்னே பகரத்தேயமதை
    மல்லுக் கிழுத்த மார்க்கமாதால்
பன்னே வாழித் தன்னடுவே
    பற்றியிருக்கும் பதியாசே. (32)

(க-து) இராகு திசை பின் பாகத்தில் புதன் புக்தியில் கேது சித்தி ரத்தில் (29-7-39 முதல் 20-9-39 வரைக்கும் கேது சித்திரம்.) இவனின் செல்வாக்கு அழியும் பொருட்டு சிறப்புகொண்டு பகரத்தாரை எதிர்க்க (பகரத்தார்...போலந்தென்னலாம்.) அதனால் சமுத்திரத்தின் நடுவேயிருக் கும் தேசத்ததிபன்.

அரசே யுலகத்தில் பெருதாய்
    வாழ்ந்து களித்தோர் வல்லரசும்
கிரசேர் முன்னித் தலையவனின்
    நேரில் நடந்த மதி திசையில்

வீர சேரிடு போர் காவலனாய்
    வீற்றிருந்த னாளதிலே
வரசேயிவனார் முன்னவனும்
    வாசை மிகுந்தும் மண் பெறவே (33)

(க - து.) உலகத்தில் பெரிய அரசுரிமைப் பெற்றவர்கள இவனை எதிர்ப்பார்கள். இந்தத் துலா லக்கினத்தில் பிறந்தவனின் சுக்கிர திசையில் இவன் ஊரை ஆண்டிருந்த அரசன் மண் ஆசை கொண்டு

18691

மண்ணைப் பெரிதாய் செய்தவனார்
    மகளைக் கொன்றோர் வகையதனால்
கண்ணும் தாங்காதோர் பகையில்
    கண்டு தொடுத்துங் கவலை பினே
விண்ணே யதிரப் போர்புரிய
    விசைந்தே முன் சொல் வல்லரசும்
எண்ணுதுருமிப் பகையதிலே
    யிரங்கிப் பலமாய்ப் போரிட்வே (34)

(க - து.) இவன் தேசத்தைப் பெரிதாய்ச் செய்ய வேண்டுமென்பதுடன் தன் தேசத்தொருவனை மற்றொரு தேசத்தார் கொலை செய்தார் என்னும் கோபத்துடன் கண் தெரியாமல் போரில் ஈடுபட்டு முன் சொன்ன வல்லரசன் அவனை எதிர்க்க இவன் மீளியாதபடி, அவர்கள் எதிர்த்துப் போர் புரிய சில நாள் அவனுமெதிர்ப்பான்.

இடவே யிந்தத் துலையவனின்
    யிருக்கும் இன்னாட் பூமிதனை
படையோடொக்கக் கார்த்தவனும்
    படியில் வீழ்ந்த ஜயமதிலா
விடமே பூமிப் பலமகல
    விசையிற் செயித்த வல்லரசும்
தடையே யில்லாதின்னாளில்
    தப்பாதின்னானொடு பகையே. (35)

(க - து.) அக்காலத்தில் இத்துலா லக்கினத்தான் தேசம் தோல்வியடைந்துவிடச் செய்த வல்லரசர்கள் தடையில்லாமல் இந்நாளில் இவனை எதிர்த்துப் போர் தொடுப்பார்கள்.

பகையே தொடருவான் தெரியே
    பகரும் பாம்பின் திசை மாலூண்
தகையாங் கேதுச் சித்திரமுன்
    தப்பாப் பகை மூன்றரசர் வகை
வகையாம் பகாத் தூரர்களே
    வந்து கலந்துப் போர்புரிய
திகையாம் பகரச் சிற்றூரை
    சிந்தை கலக்கிச் சிறு செயமே. (36)

(க - து) இப்பகை பெரிதாய் தொடர்வது இராகு திசை புதன் புத்தி கேது சித்திரம். மூன்று தேசம் சேர்ந்து இவனுடன் போர் புரியும் சிறு

தேசமான பகாத்தாரும் இவனை எதிர்த்துப் போர் புரியினும் அச் சிறு தேசத்தை இத் துலா லக்கினத்தான் சிறு முறையில் வெற்றி யடைவான்.

செயமே பெருவா னுனுலுங்
	செப்புங் கன்னிமேல் புகரும்
நயமே வருகும் நாளது பின்
	நல்கும் மிக்கோர் பகையதிலே
பயமே காணுஞ் சேதியது
	பாராய் வெள்ளிக் கன்னியுர
தயவே தப்போதும் பகையில்
	தானே வரு மாருதல் பலதே. (37)

(க - து) ஜயமடைவான் ஆனாலும் கன்னி ராசியில் சுக்கிரன் வரும் நாள் தொட்டு பெரும் போர்கள் ஆரம்பமாகும். உலகில் பயமுண்டாக்கத் தக்க அநேக ஆச்சரிய சம்பவங்கள் நடக்கும். இடையிற் சமாதான முறையில் சில ஏற்பாடுகள் நடக்கும்,

பலதுற்றாலும் பகை மிஞ்சும்
	பற்றும் மூன்றற் பகைதொட்டோன்
நலமே கொள்ளும் வதைக்காக
	நல்கா தொருவமிஞ் டுறவ
பிலமாய் கொள்ளப் பேருதவி
	பிசகா மதிலும் பெருமையுரா
கலனுண்டாகுங் கடும் பகையும்
	கலப்பர் பின் ஐவர் எதிரே. (38)

(க - து) சில சமாதான வழிகள் போல் காணப்பட்டாலும் கடும் போரே உண்டாகும். துலா லக்கினத்தான் நலமுண்டாகுமென் றெண்ணி செய்யக்கூடாத ஒருவனின் உதவி பெற்று பலமான போர் உதவிகளையும் பெறுவான். அதனால் மாத்திரம் பலனென்ன? முற்றும் நலமில்லை. பின்னும் ஐந்து தேசங்கள் எதிர்த்துப் போர் புரியும். (கலப்பார் பின் ஐவர் எதிரே. இங்கு அர்த்தம் சரியாய் தெரியவில்லை.)

எதிரி யிவற்கு நால்வர்களாம்
	இசைவார் யின்னும் இருவர்களே
பதரிப் போவான் இடை போரில்
	பாங்கே தாண்டாண்டும் பகைதான்
கதி யேதிவனுங் கடையதிலே
	காணு தொழிவான் கவலையுடன்
மதியா திவனு ரினியிதுபோல்
	மகுழ்வாய் வரமும் பகையிலையே (39)

(க - து) இத்துலா லக்கினத்தானுக்கு எதிரிகள் நால்வர் கூடிப் போர் புரிவார்கள். பின்னும் இரண்டு தேசம் இப்போரில் வந்து சேரும். பின் ஆண்டாண்டாய் போர் வோங்கும். இனி கதியில்லை யென்று அஞ்சும் வரை, அபஜயம் சூழ்ந்து வர இத்துலா லக்கினத்தான் பல கவலைகளுடன் காணமல் ஒழிந்து விடுவான். இனிமேல் இதனுடைய தேசம். இவ்விதச்

சங்கடங்கள் இல்லாது வாழும் வரைக்கும், இவனுக்கு எதிரியாக ஐவர்கள் எதிர்க்க அபஜயமடைகுவான்.

எதிர்ப்ப ரெதிரி ஐந்தெனினும்
யேற்றோர் அதில் மூன்று மறியே
பதித்தோ ரங்கினேன் பக்கம்
பரிவாய் யிருவர் சேர்ந்தழிவார்
விதித்தே விபரம் ஆறதிலே
விரிவாய்ச் சொல்வோம் மரிந்திடவே
கதித்தே சொல்லுங் காண்டமிது
கனமா முதலென் றறிகுவையே. (40)

(க - து) இவனை ஐந்து எதிரிகள் எதிர்ப்பார்கள். ஆனாலும் இதில் வல்லவர் மூவர். இவனுக் கொத்தாசையாக இருவர் சேர்ந்து போர் புரிவார்கள். அவர்களும் அழிவார்கள். இன்னும் விபரம் ஆறும் பாகத்தில் சொல்லுவோம்.

மேற்கூறிய பாட்டுகளுக்குத் தெரிந்தவரை அர்த்தம் எழுதி யிருக்கிறோம். வேறு தக்க அர்த்தங்கள் இருக்கினும் எடுத்துக் கொள்ளலாம்.

ஹிட்லர் ஜாதகம் ஆறும் பாகத்தில் விளக்கம், அகத்தியரால் எழுதப் பட்ட சுலோகங்களிலுள்ள கருத்துக்களை எழுதப்பட்டிருக்கிறது.

ஹிட்லரின் ஜென்ம லக்கினம் துலாம். லக்கினுதிபதியான சுக்கிரன் சப்தம கேந்திரமான மேஷ ராசியில் இருந்தும் அந்த மேஷாதிபதியான அங்காரகன் மூலத்திரிகோணம் பெற்று லக்கினுதிபதியுடன் சேர்ந்தும், லாபாதிபதியான (11-ம் வீட்டுக்குடையவன்) சூரியன் மேற்படி மேஷ ராசியில் உச்சம் பெற்றும் பாக்கியாதிபதியான புதனும் சேர்ந்திருக்க (பாக்கியாதிபதி 9-க் குடையவன்) பாக்கியஸ்தானமான 9-ம் இடத்தில் இராகு இருக்கவும் ராச்சிய ஸ்தானத்தில் (ராச்சியஸ்தானம்...10-ம் இடம்.) சுக பஞ்சமாதிபதியான சனி யிருந்தும் (சுக பஞ்சமாதிபதி 4, 5-க்குடையவன்) அந்த சனிக்கு சஷ்டம ஸ்தானத்தில் (சஷ்டமம் 6-ம் யிடம்.) லக்கினத்திற்கும் சஷ்டம திரியாதிபதியான (சஷ்டம திரியாதிபதி 3, 6-க்குடையவன்) குரு மூலத்திரிகோணம் பெற்றும் சனி யிருந்த பத்தாம் வீட்டுக்கு அதிபதியான சந்திரன் மூலத்திரிகோணம் பெற்ற குருவுடன் சேர்ந்தும் கேது சம்பந்தத்துடன் மறைபு ஸ்தானமான மூன்றுமிடத்தில் இருக்குங் காலத்தில் ஹிட்லரின் ஜனனம்.

ஆதலால் இந்த ஹிட்லர் உலகத்தில் ஒரு தனித்த மனிதனென்றே சொல்லவேண்டும். ஆயினும் இவருடைய ஆறும் பாவத்தைப்பற்றி கவனிப்போம்.

ஹிட்லரின் ஜன்ம லக்கினமான துலாத்திற்கு ஆறும் வீட்டிற்கு உடையவனுன குரு, மற்றும் தன் ராசியான தனுசில், மேலும் தைரிய ஸ்தானத்தில் சந்திர கேந்திரத்தில் சந்திரனுடன் பலம் பெற்று நின்றதால் இவருக்கு சத்துரு, போர், அதனுல் உண்டாகும் துக்கம், கடன், பிணி, சிறை, சாதியாரால் உண்டாகும் துன்பம், பதவியழிதல் முதலிய எல்லாக் குற்றங்களையும் இச்சாதகன் அடைவானென்பது திண்ணம்.

இக்குறைகளை எக்காலத்தில் அடைவான் எனில், இராகு திசையில். ஏன் என்றால் முன் சொல்லிய கஷ்டங்களை யெல்லாம் கட்டாயம் செய்விக்க வேண்டுமென்று ஆறுமிடத்து அதிபனான குரு, சந்திரன் கேதுவுடன் சேர்ந்து சொட்சேத்திரமான தைரிய ஸ்தானத்தில் வலுத்தவர்களின் பலத்தைத், இராகு ஏழாம் பார்வையைக் கொண்டு நற் பலங்கள் எல்லாம் வாங்கிக் கொண்டார். ஆகையால்தான் இராகு திசையில் ஹிட்லருக்கு முன் கூறிய அநேக கெடுதிகள் உண்டாகும்.

அதுவும் இராகு திசை, புதன் புக்தி, கேது அந்தரத்திலிருந்துதான் ஆரம்பிக்கும். காரணம், இராகு எந்த இராசியில் இருக்கின்றானோ அவ் வீட்டுக்கு அதிபதிகளைக் கொண்டும் அவர் ஆதிபத்தியங்களைக் கொண்டும் தான் பலன் செய்வது, வழக்கம். ஆக இராகு புதன் வீட்டில் இருக்கிறான். புதனுக்கோ பாக்கிய விரயாதிபத்தியம் உண்டு. இராகு திசை புதன் புக்தி, புதன் அந்தரம் வரை புதனின் பாக்கியாதிபத்தியத்தைக் கொண்டு பெரிய ராச்சியத்துக்கு அதிபதியாக்கியும், அந்த புதனுடன் வாக்குஸ்தானாதிபதியான அங்காரகன் மூலத்திரிகோணம் பெற்றதால் 'நாவன்சய நாடசையும்' என்னும் பழமொழிப்படி கீர்த்திகளைத் தந்தும் உலகத்தில் ஓர் தனித்த தீரனாயும் செய்வித்து இராகு திசை, புதன் புக்தி கேது அந்தரம் முதல் புதனின் விரயாதிபத்தியத்தைக் கொண்டும் ஆறும் வீட்டுக்குடையவனான குருவிடத்திலிருந்து தான் பெற்ற கொடிய ஆதிபத்தியங்களையும் செய்ய ஆரம்பித்து விடுகிறான்.

ஹிட்லருக்கு இராகு திசை முதற் பாகம் 50 வயதும் 5 மாதத்தோடு முடிவடைகிறது. அதாவது 27-7-39 உடன் முடிவடைகிறது. அதற்கு மேல் இராகு திசை பிற்பாகம், இனி இராகு திசை பிற்பாகத்திலிருந்து ஹிட்லருக்கு நடக்கப் போகும் பலன்களை கவனிப்போம்.

இராகு திசை புதன் புக்தியில் கேது அந்திரத்தில், ரிஷப இராசிக்குரிய ஒரு தேசத்தை ஹிட்லர் எதிர்க்கும்படி நேரும், (ரிஷப இராசிக்குரிய தேசங்கள்...அயர்லண்ட், பெர்ஷியர், போலண்டு) ஏன் இத்தேசத்தைப் எதிர்த்துப் போரிடுவானென்றால் ரிஷப இராசிக்கு அதிபதியான சுக்கிரன் இவருக்கு லக்கினாதிபதியாக வந்து, கெடுதியைச் செய்யும் அட்டமாதிபத்தியத்தையும் கொண்டு (அட்டமாதிபதி...8-ம் வீட்டுக்குடையவன்.) லக்கினத்திற்கு சத்துரு ஸ்தானாதிபதியான (சத்துரு ஸ்தானாதிபதி...லக்கினம் முதல் 6-ம் வீட்டுக்குடையவன்.) குரு, தைரிய ஸ்தானத்தில் வலுத்து ரிஷப இராசிக்கு அதிபதியைப் பார்த்துக் கொண்டு இருப்பதினால், (போலந்து) ரிஷப இராசியானதினாலும் ஹிட்லர் கேது அந்திரத்தில் எதிர்த்துப் போர் புரிவான்.

தைரிய ஸ்தானத்தில் குரு சந்திரன் வலுவை வாங்கிக்கொண்டு நின்ற கேது, தன்னுடைய அந்தரத்துள், பின்னும் கோசாரத்தின்படி சுக்கிரம் கன்னியர் இராசியில் வந்து நீசமான சில தினங்களுக்குள் ஒருவாறு ஜெயம் அடைந்தே தீருவான். காரணம் போலந்தின் இராசி ரிஷபம், அதற்கு அதிபதி சுக்கிரன், 14-9-39ல் சுக்கிரன் கன்னியில் வந்து பலங் குன்றியும், சுக்கிரனுக்கு சத்துருவான குரு பார்ப்பதால், ஹிட்லரின் ஜெயத்திற்கும் லாபத்திற்கும் கும்ப இராசிக்குரிய தேசமும் சேர்ந்து கொள்ளும்; (கும்ப இராசிக்குள்ள தேசம்...அபிசீனியா, ரஷ்யா; ஸ்வீடன்.)

இத்தேசங்களில் ஒன்று ஹிட்லருடன் சேர்ந்து கொள்ளும். இக்காரணம், ஹிட்லரின் ஜென்ம லக்கினமான துலாத்திற்கு ஜெயம், கீர்த்தி, தொழில், ராஜ்ய லாபம் முதலியன தருவதற்கு முக்கியமான 10-ம் மிடத்தில் கும்ப இராசிக்கு அதிபதியான சனியிருந்தும் சனி நின்ற ராச்சிய ஸ்தானாதி பதியான சந்திரன் மூன்றாமிடத்தில் சத்துரு ஸ்தானாதிபதியோடு சேர்ந்து மறைந்ததினால் தனக்குப் பல நாள் சத்துருவாயிருந்த கும்ப இராசியின் தேசத்தோனுடன் சேர்ந்து வெற்றியும் லாபத்தையும் போரில் அடைய நேரும்.

ஆனால் ஒருவர் உதவியுடன் ஹிட்லர் அடையும் லாபங்களோ ஜெயமோ நிலைக்காது. ஏனெனில், ஜெயம், ராச்சியம், லாபம், நேசம் முதலியது கொடுக்கும் பத்தாம் வீட்டுக்கு அதிபதியான சந்திரன் மூன்றாமிடத்தில் மறைந்து குரு சம்பந்தமிருந்தும் கேது சம்பந்தத்தால் பலனில்லாதொழிய வும், சந்திரனிருந்த இராசிக்கு இருபுறங்களிலும் கிரக மில்லாததினாலும், சூரியன் இருந்த இராசிக்கும் இருபுறங்களிலும் கிரகமில்லாததாலும், **ஹிட்லர்தரின் அடைந்த வெற்றிகள் முழுமையும் நிலையின்றி இழக்க நேரும். இது திண்ணம்.**

ஆயினும் கேது முதல் சூரியன் அந்திரம் வரை தக்க ஜெயம், எதிர் பாராத உதவிகள், எதிரிகளை நடுங்கச் செய்தல், இஷ்ட காரியங்களை முடித்தல், ரிஷப தேசத்தைக் கொள்ளல் (போலந்து) முன் தன் தேசங் களைச் சத்துருக்கள் பிரித்து அடைந்தது களையெல்லாம் திரும்பவும் அடைய எத்தனித்தல், சத்துருக்களை வணங்கும்படி செய்வித்தல், சில சத்துருக்களை உறவு கொள்ளல், பழகிய நேசரைப் பிரித்தெறிதல், காப்பாற்றுவேன் என்று சிறு தேசங்களுக்கு வாக்குக் கொடுத்துப் பின் பயமுறுத்தி தன் காரியங்களைச் சாதித்துக் கொள்ளல், இத்தகைய நற்பலன்களையும் தரலாம். அதாவது இராகு திசை புதன் புக்தி கேது அந்தரம் முதல் சூரிய அந்திரத் திற்குள், 27-7-39 முதல் 8-4-40 க்குள்.

ஆனால் இதில் இன்னொரு விசேஷம் ஹிட்லரை போருக்கிழுத்து வைத்தது. அது கேது அந்திரம். இக்கேதுவின் குணம் எதென்றால் கலகத்தை யுண்டுபண்ணுவது. பின் ஒன்றும் செய்வதில்லை என்பது. பிறகு பயமுறுத்திச் சமாதானம் செய்வது. தந்திரமாகவும் தன் காரியங் களைச் சாதித்துக் கொள்வது. அப்படியும் முடியாவிட்டால் பகைவராயி னும் தன்னுடன் சேர்த்துக்கொண்டு தற்சமயம் எடுத்த காரியத்தை முடித் துக் கொள்வது. பின் அதனால் எக்கெடுதிகள் வந்தாலும் சரி. இப்படிப் பட்ட சில காரியங்களை துலா லக்கினத்திற் பிறந்த ஹிட்லரின் அந்திராதி பதியான கேது செய்து காண்பிப்பான். ஆனால் கேதுவின் எண்ணம் முற் றும் பலிக்காது என்பது திண்ணம். முன்கூறியபடி புதன் புக்தி சூரிய அந்திரத்துக்குள் பல செயல்கள் எற்படினும் முடிவில் ஹிட்லரும் அவனைச் சேர்ந்தவர்களும் தோல்வியடைவது நிச்சயம்.

கேதுவின் போக்கின்படி ரிஷப இராச்சிக்குரிய போலந்தை உதவி யுடன் ஜெயித்து பயமுறுத்தலின் மீது ஒருவாறு சமாதான வழிகளில் கொண்டுவரினும் அது ஒருக்காலும் முடியாத காரியம். காரணம், சந்திர சூரியனுக்கு இரு பக்கங்களிலும் கிரகமில்லாததும், ராச்சியாதிபதியான சந்திரன் மூன்றாமிடத்தில் மறைந்ததுமேயாகும்.

தன் ஜயத்தைக் கொண்டு ஓர் எதிரியான கும்ப ராசிக்குறிய ரஷியாவின் உதவியிருப்பதுபோல் கண்டாலும் அதுவும் முற்றிலும் நிலைக்காது.

ஆக இத்துலா லக்கினத்தான், முன் கூறிய கேது அந்திரத்தில் ரிஷப தேசத்தை எதிர்த்த உடன் (ரிஷப தேசம், போலந்து) முன்னொரு காலத்தில் இத்துலாத்தோன் தேசத்தை ஜயித்த மேஷ இராசுக்குரிய தேசமும் (பிரிட்டன், பிரான்ஸ்) எதிர்க்கும். பின்னும் இம் மேஷ சிங்கத்தோர்கள் ஜயிப்பார்களா? கடைசிவரை யுத்தம் செய்வார்களா? இன்னும் இவர்களுக்கு உதவிகள் உண்டா? என்பதைக் கவனிப்போம்.

இங்கிலாந்தும் ஜெர்மனியும் இந்தக் காலத்தில் மேஷ ராசியாகவே இருக்கிறது. இராசிப் பொருத்தத்தைப் பார்த்தால் இவ்விரண்டு தேசமும் ஒற்றுமையாய்க் காணப்படுகிறது. ஆனால் பிரான்ஸ் இங்கிலாந்துடன் சேர்ந்திருப்பதால்தான் ஜெர்மனிக்கும் இங்கிலாந்துக்கும் பகை ஏற்படுகிறது. காரணம், இங்கிலாந்துக்கும் ஜெர்மனிக்கும் ராசி உருவம் ஆடு. பிரான்சுக்கு சிங்கம். இவ்விரண்டும் சத்ருத்துவமான மிருகங்கள். ஆகையால்தான் ஜெர்மனி பிரான்ஸைக் கொண்டு இங்கிலந்தையும் எதிர்க்க நேரிடுகின்றது. இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் கூட அப்பகைத்துவம் உண்டு. இருந்தும் இவ்விரண்டும் நேசமாய் இருப்பதற்கு காரணமும் உண்டு. அதைப் பின்னால் சொல்லுகிறோம். ஆக முடிவில் ஜயிப்பது பிரான்சும் பிரான்ஸைச் சேர்ந்த தேசமும்தான்—இங்கிலாந்து.

ஆனால் இதில் இன்னொன்று. சிங்க இராசிக்குரிய தேசம் பிரான்ஸ் மாத்திரமல்ல. இட்டாலியும் சிங்க இராசியைச் சேர்ந்ததுதான். அதிக உதவி யில்லாவிட்டாலும் இட்டாலி ஜெர்மனியுடன் சேருமாயின் யுத்தம் 'மதில்மேல் பூனைபோல்' ஆகும். இட்டாலி சேராமல் தனித்து நிற்கின் ரஷியா முதலிய எத்தனை தேசங்கள் சேர்ந்து எதிர்க்கினும் இங்கிலாந்தும் பிரான்சுமே முடிவில் ஜெயமடையும். இட்டாலி ஜெர்மனியுடன் சேர்ந்தால் பிரிட்டனும் பிரான்சும் தோற்கும், என்பது அர்த்தமல்ல. கிரக ராசிகளின் பலம் சமமடைகிறது.

இதில் மற்றொரு ரகசியமும் இருக்கிறது. இங்கிலாந்தை இந்நாளில் அரசாண்டு வரும் ஆறும் ஜார்ஜ் மன்னரின் ஜாதக பலம் ஹிட்லரின் சாதகத்தை விட மிகப் பலங் கொண்டிருக்கின்றது. ஹிட்லரைப் போலவே அவரும் துலாலக்கினத்தில் பிறந்தவர்தான். ஆனால் ஹிட்லரைப் போல் ராச்சியாதிபதியான சந்திரன் மறைந்து பலங்குறைய வில்லை. ஜார்ஜ் மன்னருக்கோ ராச்சியத்யையும் ஜயத்தையும் தரக்கூடிய சந்திரன் தன் ஸ்தானத்தில் கிரகாதிபதியான சூரியனுடனும் (சூரிய சந்திரர்கள் சேர்ந்திருப்பது ஒரு பெரிய யோகம்) அவ்வீட்டுக்கதிபதியான சந்திரன் இருந்த வீடு விருச்சிகம். அதற்கதிபதி செவ்வாய். செவ்வாயுடன் சேர்ந்து சந்திர மங்கள யோகத்தையும் பெற்று சந்திர சூரியர்களுக்கு ஒரு புறத்தில் கிரகங்கள் இருப்பதினாலும் லக்கினத்தில் மூலத்திரிகோணம் பெற்று சுக்கிரன் இருப்பதினாலும் இங்கிலாந்தின் மன்னருடைய ஜாதகம் ஜயத்திற்கும் செல்வாக்குக்கும் ஹிட்லரைவிட எண் மடங்கு விசேஷம் பொருந்தியதாகவே சொல்லவேண்டும்.

ஆனல் இத்தகைய விசேஷம் பொருந்திய இச்சாதகத்தார் பட்டத்துக்கு வந்த சமீப காலத்துக்குள் போர்க்கோலங் கொள்ள வேண்டிய காரணம் யாதெனில் ராச்சியஸ்தானமான பத்தா மிடத்தில் திரிதிய சஷ்டமாதிபதி (3-6க்குடையவன்) குரு உச்சம் பெற்றிருப்பது ஒரு குற்றம். அப்படி உச்சம் பெற்ற குருவை லக்கினத்தில் உச்சம் பெற்ற சனி பார்த்ததால் இந்த சங்கடங்கள் நேர்ந்திருக்கின்றன. ஆயினும் முன் கூறிய காரணத்தால் முடிவில் பிரிட்டனே ஜயிக்கும். உச்சனை உச்சன் பார்த்தால் பதவி குறையும் என்றும் சொல்லுவார்கள். ஆனல் சனி திசையோ குரு திசையோ தற்காலத்தில் நடக்குமாயின் இப்போரில் ஒருக்கால் அபஜயமடையலாம். அப்படி இல்லை. சனி திசையோ அவருடைய 20-ம் வயதோடு முடிவடைந்து விட்டது. தற்காலம் நடப்பது கேது திசை புதன் புக்தி. கேது திசை முடிவது 14-9-1939. இங்கு ஒரு விசேஷம் கவனிக்கவும். ஹிட்லர் புதன் புக்தி கேது அந்தரத்தில் போர் தொடுத்தார். பிரிட்டனின் அரசரோ கேது திசை புதன் புக்தியில் ஹிட்லரை எதிர்த்தார். **ஆதலின் இங்கிலாந்தை ஜெர்மனியர்கள் எக்காலத்திலும் ஜெயிக்க முடியாது.**

இன்னும் விபரங்களைப் பின்னல் சொல்லுவோம்.

இங்கிலாந்தின் அரசரான ஜார்ஜ் மன்னரின் ஜாதகம் பின்வருமாறு.

பிறந்த தேதி, நேரம் 14-12-1895 3·5 எ. எம்.

இராகு			குரு
	இராசி		கேது
	சூரியன், புதன் சந்திரன், செவ்வாய்	லக்கினம் சுக்கிரன் சனி	

யுத்தமா சமாதானமா என்பது உலக சாதகத்தையும் பொறுத்திருக்கிறது. மகர ராசியில் குரு நீசமான காலத்திலேயே யுத்த மரம் விதையிலிருந்து முளைத்து விட்டது. இம்மரம் புஷ்பிக்கத் தொடர்ந்தது அங்காரகன் மகரத்தில் வந்ததிலிருந்து. அங்காரகன் மகரத்தில் வந்தது 15-5-39 இம்மரம் காய்த்துப் பழுப்பது 20-2-40 தேதியிலிருந்து. காரணம் மேலே சொல்லிய தேதியில் துலா ராசியில் இராகுவும் மற்ற எட்டு கிரகங்களும் கும்பம், மீனம், மேஷம் இம்மூன்று இராசியில் அடங்குவதை கீழ்காணும் சக்கரத்தால் அறியவும்.

குரு சுக்கிரன்	சந்திரன் கேது சனி அங்காரகன்		
புதன் சூரியன்	15—2—1940		
		இராகு	

இப்படி கிரகம் அமைவது உலகத்திற்கு பெரிய கெடுதிகளை விளைவிக்கும். மேற்குறித்த காலத்தில் இப்படி கிரகம் சேருமாயின் பல அரசர்களும் போரில் ஈடுபடும்படிநேரும். உலகத்தில் அநேக தேசம் காடாய் விடும். மிகப் பஞ்சமுண்டாகும். இதன் காரணங்களையும் பின்னால் எழுதுகிறோம்.

மேல் கிரகங்களைக்குறித்த காலத்திலேயே அப்படிப்பட்ட விபரீதம் நடக்குமென்று அர்த்தமல்ல. முன் பின்னே நடந்தே தீரும். ஆகையால் ஹிட்லருக்கு நடக்கும் கேது அந்தரமானது, தந்திரமாக உதவியுடன் போலந்தைப் பிடித்துக் கொண்டு பயமுறுத்தலால் சமாதானத்தையும் செய்யலாமே என்று நினைத்திருக்கிறது. கேதுவின் எண்ணம் அப்படி முடிந்தாலும் சிலநாளுக்குப் பிறகு மற்றும் சில தேசங்களைப்பிடித்து ஹிட்லருக்குக் கொடுக்க சுக்கிர சூரிய அந்திரம் காத்துக் கொண்டிருக்கிறது. உலக ஜாதகத்திலும் 15-2-40ல் கிரகப்போர் நடக்கிறது. ஆகையால் சமாதானம் என்பதே கிடையாது. ஹிட்லரும் முடிவில் ஜெயமடையப் போவதில்லை. இது ஹிட்லரின் ஆறும் பாவத்தில் சொல்லும் முதற் கூறும். இரண்டாம் கூறில் இன்னும் இன் தொடர்வான பலன்களையும் எத்தனை காலம் நடக்குமென்பதையும் இன்னும் விபரங்களையும் பின்னால் எழுதுகிறோம்.

(தொடரும்)

லால் :பாக் நினைவு

• (கரிச்சான்)

இரண்டு வருஷங்களுக்கு முன் நான் பெங்களூர் சென்றிருந்தேன். ஒரு நாள் 'லால் பாக் என்ற பிரபலமான உல்லாஸத் தோட்டத்திற்கு, ஒரு கோஷ்டி, 'இளவட்டங்களாக'ச் சென்றோம். பகல் பூராவையும், டிபன் நேரம் உள்பட, அதற்குள்ளேயே உல்லாஸமாகக் கழிப்பது என்ற திட்டம். ஏனென்றால், உள்ளே ஒரு காபிக் கிளப் இருக்கிறது; எங்கும் 'ஹொஸ கள் ளேக-யி' என்ற வேகவைத்த புதுக்கடலையும் விற்கும்.

நாங்கள் போனபொழுது லால் 'பாக்கிலிருந்து மிருகங்களையெல்லாம் வேறு இடத்திற்கு, மைசூருக்கு, கொண்டுபோய் விட்டார்கள். எனவே மரங்களையும் செடிகளையும் கொடிகளையும் பூக்களையும் திரும்பித் திரும்பிப் பார்க்கவேண்டியிருந்தது. "ஒரு சிலருக்கு இது தமாஷ்படவில்லை. "இதெல்லாம் என்ன பார்வை?" என்று சூள் கொட்டினார்கள்.

நானும் என் நண்பன் கிருஷ்ணமூர்த்தியும் தான் கொஞ்சம் உத்சாகமாக அவற்றைப் பார்த்து அதிசயப்பட்டுக் கொண்டிருந்தோம். உண்மையிலேயே அந்தப் பூங்காவனம் ஒரு புது அழகு வனமாகத்தான் இருந்தது. உலகத்திலும் அவ்வளவு கண்களைக் கவரும் வனப்பு இருக்கிறதா என்று தோன்றும்படியாக அவ்வளவு வகைப் புஷ்பங்கள் பூத்து வரிசை வரிசையாக அழகிய சிறுமிகள் கூட்டம் போலக் காட்சியளித்தன.

இப்படியாக நாங்கள் அந்தத் தோட்டத்தைச் சுற்றிவரும் பொழுது நாங்கள் இருவரும் ஒருபுறமாகவும் மற்றவர் சற்று தூரமாகவும் இரண்டு துண்டு கோஷ்டிகளாகப் பிரிந்து விட்டோம். கிருஷ்ணமூர்த்தி உள்ளூர்; எனக்கு விசேஷங்களை யெல்லாம் சுட்டிக் காட்டிக் கொண்டே வந்தான். அந்த மிதமிஞ்சிய பூவனப்பைக் கண்டு என் உள்ளம் பொங்கிவிட்டது. மெய் மறந்து நடந்து சென்றேன்.

திடீரென்று எங்களுக்கு முன்னால் சென்ற கோஷ்டி கொல்லென்று நகைத்த சத்தம்கேட்டு நாங்கள் இருவரும் திரும்பிப் பார்த்தோம். சற்று தூரத்தில் ஒரு முந்திரி மரத்தடியில் புல் தரையில் ஒரு ஆங்கிலேயனும் ஆங்கில மாதும் உட்கார்ந்திருந்தார்கள். அவன் கையில் ஏதோவொரு புத்தகம் வைத்துக்கொண்டு அவளுக்கு வாசித்துக்காட்டிக் கொண்டிருந்திருக்கவேண்டும்.

நாங்கள் அருகில் சென்று எங்கள் நண்பர்கள் (நான்கு பேர்) ஏன் சிரித்தார்கள் என்று பார்ப்பதற்குள் பின்வரும் சம்பாஷணை நடந்து கொண்டிருந்தது.

"உங்களுக்கு ஆங்கிலம் தெரியுமா?" என்று ஆங்கிலேயன் ஆங்கிலத்தில் எங்கள் நண்பர்களைக் கேட்டான்.

"ஏன், தெரியுமென்றுதான் நினைக்கிறேன்" என்று கேலியாக பதில் சொன்னான் கோஷ்டியில் ஒருவன்.

"சரி, மரியாதை (குட்மானர்ஸ்) என்பதும் தெரியுமா?" என்று ஆங்கிலேயன் பொங்கும் கோபத்துடன் கேட்டான் சற்று எழுந்து முன் வந்து.

"ஹோ, ஹோ, அது உனக்குத்தான் சொந்த சொத்தோ?" என்று கோஷ்டியில் ஒருவன் கொக்கரிப்புடன் கேட்டான்.

"இதுதானா பெண்கள் முன் பழகும் முறை? தனியாக உட்கார்ந்திருக்கிற தனி இடத்தில் வந்து இப்படி மரியாதையின்றி—" என்று அவன் முடிப்பதற்குள் கோஷ்டியில் எல்லோரும் ஒன்று கூடிக்கத் ஆரம்பித்தார்கள். ஆங்கிலேயன் முகம் சிவந்தது.

"உல்லாசத் தோப்பு 'தனி இடமோ? மரியாதையாக தனிமையை உன் வீட்டிலல்லவா' எதிர்பார்க்கவேண்டும்?" என்று தாறுமாறாகப் பேசினார்கள்.

திடீரென்று அந்தப் பெண் எழுந்திருந்து ஆங்கிலேயன் கையைப் பிடித்துத் தூர இழுத்து என் நண்பர்களைப் பார்த்து, "மன்னிக்க வேண்டும்" என்று ஆங்கிலத்தில் சொல்லிவிட்டு கொஞ்சம் அப்புறம் போகப் புறப்பட்டாள்.

என் சகாக்கள் ஒரு முரட்டுச் சிரிப்புடன் ஆங்கிலேயன் இந்தியாவில் பண்ணும் அக்கிரமங்களைப்பற்றியும், எல்லா இடமும் தன்னுடையது என்று அவன் கொள்ளும் கர்வத்தைப் பற்றியும் பேசிக்கொண்டு தாங்கள் அவனை சரியாக மூக்குடைத்ததைப்பற்றி அகமகிழ்ந்துகொண்டு போனார்கள்.

நான் அப்படியே ஸ்தம்பித்துப் போய்விட்டேன். என் சகாக்களுக்காக நான் என் நாக்கைப் பிடுங்கிக் கொள்ளலாம் போலிருந்தது எனக்கு அப்பொழுது. அவர்களுடைய அநாகரிக நடத்தை எவ்வளவு ஆபாசமானது என்பதை நினைத்தபொழுது நான் பதறினேன்.

என்ன செய்கிறோம் என்ற நினைப்பே இல்லாமல் வேகமாகச் சென்று ஆங்கிலேயனை நெருங்கினேன்; அவன் என்னைப் பார்த்ததும் அம்மாதை விட்டுச் சற்று விலகி என்னை நோக்கி வந்தான்.

"அவர்கள் சார்பாக நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுகிறேன்" என்றேன்.

அவன் முகம் மலர்ந்தது. நான் சொன்னதைக் கேட்டு அந்தப் பெண்ணும் முன் வந்தாள். அவளுக்கும் வந்தனம் செலுத்தி மன்னிப்பை முணு முணுத்தேன்.

"பாதகமில்லை, அதனாலென்ன?" என்றார்கள். அந்தப் புஷ்பங்களிடையே அவள் முகம் ஒரு புதுப் புஷ்பம் போல மலர்ந்தது. என் மனதில் மிதமிஞ்சிய ஒரு ஆறுதல் ஏற்பட்டது.

இன்னும் அந்த நினைவு எனக்கு மறக்கவில்லை.

ஞாபகச் சின்னம்

"ரஞ்சனன்"

1

தூரத்தில் தாஜ்மஹாலின் ஸ்தூபிகள், கம்பீரமாக நிலவில் நின்று கொண்டிருந்தன. மொகலாய பாதுஷாவின் பீகமே, வெள்ளை மகமலைப் போர்த்திக் கொண்டு நிரந்தரமான சிலையாக மாறிப்போனது போல் விளங்கியது அந்த ஞாபகச் சின்னம்!

கடந்த நாட்களை நினைத்துக் கொண்டு தூணில் சாய்ந்து கொண்டிருந்தார் பாதுஷா. எல்லை கட்ட முடியாத சோக சின்னத்தின் முன்னிலையில் மலர்ந்து வாடும் கனவுகள்! மொகலாய அரசனின் ஆடம்பர வாழ்வுக்கு நடுவில், பாதுஷாவின் நெஞ்சைக் கலக்கும் குமுறல்; உலக இன்பங்களின் உச்சியில் பூத்த புஷ்பம், மும்தாஜ் பீகத்தின் நெஞ்சிரல்...

அவ்வளவும் இன்று இடம் மாற்றிப் புதைக்கப்படுகின்றன. பர்ஹாம்பூரிலிருந்து ஆக்ராவிற்கு! —பதினெட்டு வருஷங்களுக்குப் பிறகு...

ஒவ்வொரு கல்லிலும், மனிதனின் கற்பனையைத் தாண்டிய சோகம் பிரதிபலிக்கும் அந்த பளிங்குச் சித்திரத்தைப் பார்த்ததும் சக்ரவர்த்தியின் எண்ணங்கள் எல்லை கடந்து சென்றன.

2

எல்லோரும் புகழும் பாதுஷாவை, தன்னை, பீகம்பானு —மும்தாஜ் — புகழவில்லை. அவன் அவளுக்காகக் கொண்டு வந்து கொட்டிய செல்வம், அவளுடைய சிரிப்பில், விளையாட்டின் எதிரில், மங்கிப்போய்க் கிடந்தது. உலகமெல்லாம் பிற்காலத்தில் புகழப் போகும் மயிலாசனம்கூட அவளுக்குச் சாதாரணமாகப்பட்டது.

அன்பிற்கு ஈடு ஜோடி ஒன்றும் கிடையாது என்பது அவள் எண்ணம். அதனால்தான் பாதுஷாவின் ஆவலான கேள்விக்கு அவ்வாறு பதிலளித்தாள்.

அவளுடைய பதிலைக் கேட்டு அவர் பிரமித்துப் போனார். முதல் தரமாக, இதுவரையில் இல்லாததைப்போன்ற ஒரு விபரீத உணர்ச்சி அவருக்கு ஏற்பட்டது. அதன் எதிரில் வேறு எவனும் நிலைகுலைந்து போயிருப்பான் — எவனும் கூட! எதிர்ச் சொல்லில்லா ராஜரீகத்தின் தலையில் விழுந்த ஒரு தட்டு, புகை சூழ்ந்த அகங்காரத்தின் போதையிலிருந்து சுய உணர்வைக் குலுக்கி

எடுத்தது. "மும்தாஜ், என்ன?" என்றார் ஷாஜஹான்.

உலகத்தையே மோக வெள்ளத்தில் மூழ்க அடிக்கும் மும்தாஜ் மஹால் குறும்பாகச் சிரித்தாள். அந்தச் சிரிப்பின் கலகலப்பு, அரண்மனைக் கோபுரத் திருப்பங்களில் பட்டு எதிரொலித்து நிற்பதற்கு முந்தியே சிறு

குழந்தையைப் போல் ஓடி வந்து, அவள், ஷாஜஹானிடம் நின்று கொண்டு— "என்ன—கோபமா, இதற்குள்?" என்றாள், கொஞ்சும் குரலில்.

ஷாஜஹான் மௌனம் சாதித்தார். ஒருவரிடம் மட்டையடி வாங்கினது அவருக்கு அதுதான் முதல் தடவை!

மும்தாஜ் திரும்பி, அந்த சிம்மாசனம் தூக்கிக் கொண்டு வரப்பட்ட வழியைப் பார்த்தாள். அந்தப் புரத்தில் ஏகத்தின் பார்வைக்காகக் கொண்டுவரப்பட்ட சிம்மாசனத்தை வைத்து விட்டு வேலைக்காரர்கள் வெளியே போய்விட்டார்கள். அந்தரங்கத் தோழி மாத்திரம் சக்ரவர்த்தியின் வருகையை முன்னிட்டுக் கதவுக்கு வெளியே வெகு தூரத்தில் நின்று கொண்டிருப்பது ஒருக்களித்த கதவின் இடுக்கில் தெரிந்தது.

சக்ரவர்த்தி அவளைக் கோபித்துக்கொண்டதே கிடையாது. இது வரையில் அதற்குச் சந்தர்ப்பம் நேரவில்லை என்பது மாத்திரமில்லை. அது அவரால் முடியாது;

அவ்வளவுதான். அவருடைய வரண்ட வாழ்க்கைக்கு ஒரு தளதளப்பை அளித்து, மரணத்தின் எதிரலைகளுக்கிடையில் சாந்தியின் குரலைக் கொடுத்து, இன்பலாகிரியில் அவரைச் சுற்றியடித்தது அவள் தானே!

ஒருக்களித்திருந்த கதவை மூடித் தாளிட்டுக் கொண்டு மும்தாஜ், ஷாஜஹானிடம் வந்து "இந்த அரண்மனைக்குள் இது நன்றாக இருக்கிறது; இது நன்றாக இல்லை, என்று சொல்லுவதற்கு என்னைத் தவிர வேறு யாருக்கு உரிமையுண்டு?" என்றாள் கையிலிருந்த மோதிரங்களில் ஒன்றைத் திருகிக் கொண்டே.

வாடிக் கிடந்த புஷ்பத்தின் மேல் தண்ணீரைத் தெளித்தது போல், அவன் மனதில் சந்தோஷம் மலர்ந்தது. போராட்டத்தின் இறுதியில் அண்ணன் தம்பிகளின் இரத்தக் கரை படிந்து காய்ந்துபோன நெஞ்சில் ஈரத்தை உண்டாக்கின மும்தாஜ், அவருக்கு இன்ப சிகரம். அவள் சொன்னதற்கும் அடியில், அவள் சொல்ல நினைத்து, சொல்லாமற் போன விளையாட்டின் அழைப்பு அப்பொழுதுதான் அவருக்கும் தெரிந்தது.

"நன்றாக இருக்கிறது—இல்லை, என்பதை எவரும் சொல்லலாம். ஆனால் நன்றாக இருப்பதை, நன்றாக இல்லை என்று சொல்லுபவர்களுடைய கண்களில் தான் ஏதோ கோளாறு இருக்கவேண்டும்—நிச்சயமாய்" என்று சொல்லும் போதே அவளுடைய செல்லப் பேச்சின் மயக்கத்தில் கிடந்த சிரிப்பு அடக்க முடியாமல் வெளியே வந்தது.

3

மொகலாய சாம்ராஜ்யத்தின் கைதேர்ந்த சிற்பியின் மேற்பார்வையில் மயில்களைக் கொண்ட ஷாஜஹானின் அரசுக் கட்டில் செய்யப்பட்டது. தந்தை அக்பர் கொட்டி வைத்திருந்த ஐசுவரியத்தை அனுபவித்து அழித்தார் ஷாஜஹான். அந்த சிம்மாசனம்-மயிலாசனம்-செய்துமுடிப்பதற்கு ஏழு வருஷங்களாயின. ஆனால் நடு நடுவில் அது அரண்மனைக்கு வந்து போய்க்கொண்டிருந்தது, அரசன் கண்டு திருப்தியடைவதற்காக!

தங்கக் கால்களைக் கொண்ட சிம்மாசனத்தின் மேற்பரப்பைப் பன்னிரண்டு பச்சைக்கல் தூண்கள் தாங்கிக் கொண்டிருந்தன. ஒவ்வொரு தூணிலும் இரண்டு மயில்கள் உட்கார்ந்திருக்கும் பாவனையில் நவரத்தினங்களும் வாரி இறைத்து இழைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு ஜோடிக்கும் நடுவில் வைக்கப்பட்டிருந்த தங்க மரங்களின் இலைகளில் வைரங்கள் ஜ்வலித்தன—கோமேதகங்களாக அவைகள் பூத்துக் காய்த்திருந்தன!

"இது என்ன இது?" என்றாள் மும்தாஜ். "ஐயைய! நன்றாகவே இல்லையே!" என்றதில் ஆரம்பித்த தகராறு அந்த சமாசத்தில் போய் முடிந்தது. முடிந்த சமாதானத்தைக் கிண்டினாள் மும்தாஜ். "இதன்மேல் உட்காருவதற்கு பதிலாக இவ்வளவு தங்கத்தையும், ரத்னங்களையும், சாக்குகளில் மூட்டை கட்டி, அடுக்கி

அதன்மேல் உட்காரலாம்" —என்றாள்.

சக்ரவர்த்தி சிறு குழந்தையைப்போல், "இல்லே! இல்லே! அது வேண்டாம். நீ போட்டுக்கொண்டிருக்கும் நகைகளே எல்லாம் மூட்டை கட்டித் தலையில் வைத்துக்கொள்—இல்லாவிட்டால் கையில் பிடித்துக்கொண்டு வந்துவிடு. சரியாகப் போகும்" என்ருர். மும்தாஜுக்குக் கோபம்—பாசாங்குக் கோபம்.

"சரி! இது ரொம்ப அழகாக இருக்கிறது; சரிதானே இப்பொழுது? என்னேக் காட்டிலும் இந்த கட்டில் ரொம்ப அழகு" என்ருள். இது அவளுடைய சந்தோஷ நிலையின் உச்சஸ்திதியைக் குறிக்கும் பாணம்.

ஒரு நாளுமில்லாமல், திடீரென்று என்ன தோன்றியதோ என்னமோ, ஷா சொன்னர்: "மும்தாஜ், உன்னையும் வைத்து, இந்த மோகலாய சாம்ராஜ்யம் முழுவதையும் வைத்தாலும் கூட, நீதான் எனக்கு மேலானவள். இந்த அரண்மனையின் ஒளியில் நீ ஏற்றி வைத்த விளக்குதான் அதிகமாய்ப் பிரகாசிக்கிறது. நீ பர்ஹாம்பூர் போன பிறகு..."

பாதுஷாவின் குரல் கம்மியது. கலங்கிய கண்களை ஜன்னலருகில் போய் துடைத்துக்கொண்டார், பானுவிடமிருந்து அதை ஒளிக்கும் பாவனையில். மும்தாஜ் சொன்னாள்: "சக்கரவர்த்தி இது என்ன? பதினொன்று குழந்தைகளுக்கு அப்புறம்கூட, என்மீது இவ்வளவு ஆசையாக இருக்கிறதைப் பாரு! வெட்கமாக இல்லே போலிருக்கிறது" என்று தன் உணர்ச்சிகளை எப்படியோ மறைத்துக் கொண்டு.

4

கொண்டு வந்ததை சும்மா திருப்பியனுப்ப வேண்டாமென்று "இதைச் செய், அதைச் செய்" என்று சொன்னரே ஒழிய, ஷாஜஹான் உண்மையில் அப்பொழுது அந்த சிம்மாசனத்தைப்பற்றி நினைத்துக்கொண்டிருக்கவில்லை. அது கொண்டு வரப்பட்டதன் விளைவாக வந்த தகூரின் இன்ப ஸ்தானத்தைப் பற்றிக் கொண்டு ஊசலாடிக் கொண்டிருந்தது அவன் மனம்.

அதோடுகூட, எல்லே கட்ட முடியாத வேதனை, அவர் கத்தியால் பட்டத்திற்கு வந்தபோது ஓடிய ரத்தப் பெருக்கின்போது கூட ஏற்படவில்லை. மும்தாஜ் மஹாலைப் பிரியும் ஒவ்வொரு தடவையும் இதே போராட்டம்! சக்ரவர்த்தியின் ஹிருதயத்தில் கருப்புக் கரை படாத பாகம் என்று ஒன்று இருந்திருக்குமானல், அது, அவர் மும்தாஜை வைத்துப் பூஜித்த இடம்!

மறுநாள் அதிகாலேயில் அவள் புறப்படுவது என்ற தீர்மானம். மிகவும் ஜாக்கிரதையாக அவளைக் கொண்டு போய்ச் சேர்க்கவேண்டும் என்ற கவலேயால் இரவு முழுவதும் தூக்கமில்லாமல் யோசனை செய்துகொண்டு, படுத்துக் கொண்டிருந்தார் ஷா. பேசியும், சிரித்தும் கொண்டிருந்தவள், மும்தாஜ், அப்படியே தூங்கிப் போய்விட்டாள்.

திடீரென்று உளறியடித்துக் கொண்டு எழுந்திருந்தவள் ஷாஜஹான் உட்கார்ந்துகொண்டிருப்

பதைப் பார்த்ததும் திடுக்கிட்டுப் போனாள். இதுவரையிலும் — பதினைந்து வருஷங்களுக்கு மேலாக — அவர் தூங்காமல், அவள் தூங்கினதில்லை. எனவே அவர் மனக்கொந்தளிப்பை ஒருவாறு தெரிந்துகொண்ட மும்தாஜ் "இன்னும் என்ன, அந்த சிம்மாசனயோசனைதானா?" என்று கேட்டாள், அவனைச் சந்தோஷப் படுத்துவதற்காக.

"இல்லை. நகை மூட்டையைப் பற்றி யோசித்துக்கொண்டிருந்தேன்" என்றார் ஷா. இருவரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். அவள் திடுக்கிட்டுத் தூக்கத்திலிருந்து விழித்துக்கொண்ட ஞாபகம் வரவே, சக்ரவர்த்தி "என்ன, ஏதாவது கனவு கண்டாயா?" என்று கேட்டார், மும்தாஜ் மஹாலை.

சொப்பனத்தின் பயங்கரத்தை அவனிடம் சொல்ல இஷ்டமில்லாமல் அவள் "இல்லையே... என்னமோ கனவு. அதையும் கூட இப்பொழுது மறந்து விட்டேன்" என்றாள். கிட்டத்தட்ட பொழுது விடிந்துவிட்டது. தூரத்தில் விளக்குகள் அசைவதன்மூலம், பிரசுத்தின் பிரயாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் ஜரூராக நடந்து வந்தன என்பது தெரிந்தது.

5

நாட்கள் ஓட ஓட ஷா ஜஹானுக்கு மும்தாஜின் நினைவே எல்லாவற்றிற்கும் முதலில் வந்து நின்றது. பல்லக்கில் போய் ஏறப்போகும்போதுகூட, "எனக்குத்தான் அந்த மயில் கட்டில் வேண்டும்" என்று சொன்னாள்.

எவ்வளவோ அரசர்களை வென்று அடைந்த வெற்றியின் ஞாபகார்த்தமாக அவர் அதைச்செய்து கொண்டிருந்தார்.

அதற்காகவேதான் அவளுக்கும் அது வேண்டுமென்றபோது, ஷா ஜஹானுக்கு மயிர் சிலிர்த்தது. ஆம்! எல்லா அரசர்களையும் அவர் ஜெயித்திருந்தால், அவரை, அவள் பிரேமையினால் அடிமையாக்கிக் கொண்டுவிட்டாள். நியாயமாக அவளுக்குத்தான் அது போகவேண்டும். அடிமைக்கேது ஆசனம்?

அவளுடைய ஞாபகத்தில், அவளுக்காகச் செய்கிறோம் இதை என்ற நினைப்பில், மகாகுதூஹலத்தோடு அவர் பார்த்துக்கொண்டிருந்தார், நடந்த வரையில் காட்டிவிட்டுப் போகலாம் என்று கொண்டுவந்து அரசன்முன் வைக்கப்பட்டிருந்த அந்த அரசுக் கட்டிலை! மூன்று வருஷங்களாக நடக்காத வேலைகள், சக்ரவர்த்தி செய்த தடபுடலில், மும்தாஜ் போய் ஆறுமாதங்களில் நடந்தன. தங்கத்தைப் பொறுத்த வேலைகள், பீடம், கால்கள் முதலியவைகள் எல்லாம் பிரித்து, இழைத்து, சேர்க்கப்பட்டன. கல் இழைப்பு வேலைகள்தான் பாக்கி. அதுதான் அவ்வளவிலும் கஷ்டமான பாகமும் கூட.

மயில்களைத் தூண்களின் மேல் ஜோடிகளாகவைத்து, அமைக்கும் விதத்தை சொல்லிக் கொண்டிருக்கும்போது சக்ரவர்த்தியை, வஜீர் பின்னாலிருந்து ஒரு நிமிஷம் தயை செய்யும்படி கேட்டுக் கொண்டான். இந்த வேலையை

யும் விட அவசரமானது ஒன்று மில்லை என்பது சக்ரவர்த்தி யின் நினைப்பு. "இரு" என்றார்.

அதையும்விட அவசரமான வேலைதான் காத்துக்கொண்டிருந்தது என்பதன் அடையாளமாக, "இல்லை. அவசரம்" என்றான் வஜீர்—மந்திரி! "என்ன" என்று புருவத்தைச் சுளுக்கிக்கொண்டு திரும்பிப் பார்த்தார் ஷாஜஹான். பர்ஹாம்பூரி லிருந்து கடிதம் வந்திருந்தது.

புதிய ரத்தம் பாய்ந்ததுபோல் உற்சாகத்தோடு கடிதத்தைப் பார்த்த ஷாஜஹான், இடிவிழுந்ததைப்போல் திடுக்கிட்டு நின்றார். பிரசவத்திற்குப் பிறகு ஜன்னி கண்டு மும்தாஜ் அபாயகரமான ஸ்திதியிலிருப்பதாக ஆஸப்கானிடமிருந்து செய்தி வந்திருந்தது. குழந்தையைப் பற்றி அவருக்குக் கவலையில்லை. மும்தாஜ் — ? அரண்மனையின் ஜோதி —?

மறு நிமிஷத்தில் பிரயாணத்திற்கு வேண்டிய அவ்வளவும் செய்து முடிக்கப்பட வேண்டுமென்ற உத்திரவுக்கு முற்றுப் புள்ளி வைக்க, மற்றொருவன் வந்திருந்தான். ஷாஜஹானின் குரல் நடுங்கியது. தலை சுற்றியது.

"என்ன?" என்றார் சக்ரவர்த்தி.

"ராணி—காலமாய்விட்டாள்!"

6

அது வரையில்தான் ஷாஜஹானின் வாழ்க்கையில் ஒரு பிரகாசம். பிறகு ஒரே இருள்—இல்லை—கருப்புக்கறை; சரித்திரத்தின் அந்தப் பக்கத்தில் மசியைக் கொட்டி, கையால் துடைத்த மாதிரி!



நீர்மூழ்கிகள்

"விகடானந்தன்"

இருபத்தைந்து வருஷங்களாக 'எம்டன்' ஒரு தமிழ் வார்த்தையாக இருந்து வருகிறது. கிராமங்களில் இந்த வார்த்தை விசேஷமாக உபயோகிக்கப்பட்டு வருகிறது. வெகு சாமர்த்தியமாக வேலை செய்பவர்களுக்கெல்லாம், "அந்த ஆள் ஒரு எம்டென் அப்பா" என்று சொல்வது வழக்கத்தில் வந்து விட்டது.

உள்ளூர வேலைசெய்து, திடீரென அடிப்பதென்றால் அதற்கு 'எம்டன் வேலை' என்பது தான் சரியான வார்த்தை.

எம்டன் ஒரு ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல். சென்ற யுத்தத்தில் அது கிழக்கு சமுத்திரத்தில் விளையாடிற்று. நமது சென்னை ஹைகோர்ட்டு கட்டிடத்தின் மீது கூட சில வெடிகளை எறிந்து, கொஞ்சம் சேதம் செய்தது.

இந்த யுத்தத்திலும் ஜெர்மன் நீர்மூழ்கிகள் வேலை செய்கின்றன.

சேம்பர்லின் யுத்தம் தான் என்று சொல்லி வாயை மூடுவதற்குள்—1400 பிரயாணிகள் கொண்ட அதீனியா என்ற பிரிடிஷ் கப்பலை ஒரு ஜெர்மென் நீர்மூழ்கி அடித்துப் போட்டது. 14-9-39 பத்திரிகைகளில் நான்கு கப்பல்கள் தப்பியதாகவும் மூன்று கப்பல்கள் மூழ்கி நாசமானதாகவும், அறிவிக்கப்படுகிறது.

பிரிட்டிஷ் பார்லிமென்டிலும் நீர்மூழ்கிப் பிரச்னைதான் பெரிய பிரச்னையாக இருந்து வருகிறது.

வியாபாரக் கப்பல்களுக்கு 'பாடிகார்டு' ஆகப் போர் புரியும் கப்பல்களை அனுப்ப வேண்டும், என்பது அநேகரின் கட்சி. சர்க்காரும், அது தான் தங்களுடைய உத்தேசம், அவ்விதமே வெகு சீக்கிரம் செய்துவிடுவோம்,என்று உறுதி கூறியிருக்கிறார்கள்.

இப்போதைய ஜெர்மன் நீர்மூழ்கிகள், 7000 மைல் தூரம் செல்வதற்குப் போதுமான பெட்ரோலுடன் புறப்படுகின்றனவாம். அதாவது, ஜெர்மனியிலிருந்து 3000 மைல் வரையில் அவைகள் தாராளமாக வேலை செய்யலாம்.

நேற்று பிரிட்டிஷ் சர்க்கார், நடுநிலைமை வகிக்கும் நாடுகளுக்கு ஒரு எச்சரிக்கையை விடுத்திருக்கிறது. நீர்மூழ்கிகள், பெட்ரோல், உணவு முதலிய தேவைகளை சேமித்துக்கொண்டு புறப்படுவதற்கு, நடுநிலைமைப் பிரதேசங்களில், சிலஸ்தலங்களை நியமித்துக்கொள்ள ஜெர்மன் ஸர்க்கார், புறப்பட்டிருக்கிறார்கள். இதற்கு அந்த தேசங்கள் இடம் கொடுக்கக்கூடாது, என்பதுதான் அந்த எச்சரிக்கை.

இந்த எச்சரிக்கையை கவனிக்கும் போது—7000 மைல்கூட ஒரு கணக்கல்ல; தென் அமெரிக்காவிலும் மற்ற தூரமான தேசங்களிலும், ஜெர்மன் நீர்மூழ்கிகளுக்கு, தங்கவும் புறப்படவும் ஸ்தானங்கள் ஏற்பட்டுவிட்டால், உலக சமுத்திரங்களிலெல்லாம் பிரிட்டிஷ் கப்பல்களுக்கு அபாயங்கள் நிகழ்ந்துவிடும். அதிலும் நேற்று தப்பித்தது நாலு, மூழ்கினது மூன்று என்று பார்க்கும்போது — இந்த நீர்மூழ்கி தொந்தரவு பெரிதாகி விடுமோ என்று தோன்றக்கூடும்.

அப்படி நாம் பயப்படத் தேவையில்லை. கள்ளன்பெரிதோ, காவல்காரன் பெரிதோ என்ற நிலைமை கொஞ்ச காலத்திற்குத் தான் இருக்கும். வெகு சிக்கிரத்தில் பிரிட்டிஷார், நீர்மூழ்கிகளுக்கு இடமே யில்லாமல் செய்து விடுவார்கள்.

சென்ற யுத்தம் நடந்தபோதே நீர்மூழ்கிகளை நீர்மூலமாக்குவது என்பதைப்பற்றி திறமையான ஆராய்ச்சிகளைச் செய்து வைத்திருக்கிறார்கள். அந்த ஆராய்ச்சியினால் ஏற்பட்ட சில ரகஸ்யங்களை நாம் சொல்ல முடியாது. அவைகளை ரகஸ்யமாகவே வைத்திருக்கிறார்கள். ஆயினும் ஆராய்ச்சியின் ஆதி முறைகளை வெளியிட்டிருக்கிறார்கள்.

1914-ம் வருஷத்தில் யுத்தம் ஆரம்பமாயிற்று. 1915-ல் யுக்தி-ஆராய்ச்சி-போர்டு ஒன்றை பிரிட்டிஷ் சர்க்கார் ஸ்தாபித்தார்கள். அதில் பௌதிக சாஸ்திர நிபுணர் ஜே. ஜே. தாம்ஸன் ஒரு மெம்பர். அவர் சில விவரங்களைத் தனது சுய சரித்திரத்தில் வர்ணித்திருக்கிறார் :—

நீர்மூழ்கி செல்லும்போது சத்தத்தினாலேயே அதைக் கண்டுகொள்வதுதான், வெளிப்படையான வழி. சத்தம், தரையைக் காட்டிலும் ஜலத்தில், நன்றாகச் செல்கிறது. ஆகையினால், நீர்மூழ்கிக்கு உரித்தான சத்தம் நிகழ்கிறதா—என்பதைக் கண்டுபிடிப்பதற்கு ஆராய்ச்சிகளை நடத்தினார்கள்.

நீர் மூழ்கியைத் துரத்தும் கப்பல், ஒரு கருவியைக் கூடவே கொண்டு செல்லும். ஒரு குழாய்—ஒரு பக்கம் மூடப்பட்டிருக்கும். மூடப்பட்ட இடத்தில் ஒரு யந்திரம்—ஜலத்திற்குள் இந்தக் குழாயை விட்டு வைத்திருக்கப்பட்டிருக்கும். ஜலத்தில் நிகழும் சத்தங்கள் மேலே சொல்லிய யந்திரத்தை சலனப்படுத்தும். குழாயிலிருக்கும் காற்றில், ஜலத்தில் நிகழ்ந்த சப்தம்போன்ற சப்த அலைகள் ஏற்படும்—இந்த சப்தத்தை காதினாலோ அல்லது மைக்ரோபோனைக் கொண்டோ, சுலபமாகக் கண்டுகொள்ளலாம்.

ஆயினும் நீர்மூழ்கி செல்லும்போது, அது செய்யும் சப்தத்தைக் கண்டு கொள்ளும் பிரச்னையானது, மிகவும் கஷ்டமான சிக்கலான பிரச்னையாகும்.

என் கஷ்டம்? என் சிக்கல்? முதன் முதலாக நீர் மூழ்கியை வேட்டையாடும் கப்பல் தனது சப்தங்களைச் செய்துகொண்டே செல்கிறது; அதன் இஞ்சின்களுடைய சத்தம், ஜலத்தைக் கிழித்துச் செல்லும் சத்தம்போன்றது.

ஆகையினால், பக்கத்தில் யாதொரு நீர்மூழ்கியும் செல்லாமலிருந்தாலும்கூட, வேட்டைக் கப்பலுடன் செல்லும் மைக்ரோபோன், சதா சத்தம் கொடுத்துக் கொண்டே யிருக்கும்.

இந்த சங்கடத்தில், மனிதனுடைய காதின் விசேஷ சாமர்த்தியம் தான் அனுகூலத்தைத் தந்தது. இன்னும் ஓங்கிய பல சப்தங்களுடன் கலந்து வந்தாலும், ஒரு குறித்த சத்தத்தை இன்னது தான், என்று கண்டு கொள்ளும் சக்தி மனிதக் காதுகளுக்கு உண்டு. இதற்கு உதாரணம்! ஒரு இன்ஜினியரிங் தொழிற்சாலைக்குள் சென்றால், காதுக்கு என்ன அலங்கோலம்! பழகாதவர்களுக்கு காது செவிடு பட்டுவிடும். பழகியவர்கள், குரலை உயர்த்தாமலேயே, ஒருவரோடொருவர் பேசிக்கொள்வார்கள்!

ஆகையினால் ஆராய்ச்சி போர்டார் கண்டு கொண்டது என்ன? யந்திரங்களுடைய பகுத்தறிவு சக்தியை அதிகப் படுத்துவதைக் காட்டிலும்—ஆட்களையே சத்தங்களை கவனிப்பதில் பயிற்சி செய்து, பழக்கினால் அதிகப் பிரயோஜனமாக யிருக்கும் என்று கண்டு கொண்டார்கள்.

யந்திரங்கள் நல்ல பலன் தருவதைத் தடை செய்தது எது? நீர்மூழ்கி கொடுக்கும் சப்தம் ஒரு சுத்தஸ்வரம் அல்ல. ஸ்வரங்கள் பல கலந்து செய்யும் சப்தம் அது. இப்படிக் கலந்து வரும் சத்தங்கள் விஷயத்தில், எதிரொலிகள் அதிக உபயோகமாக இராது. எதிரொலியில், இந்தக் கலப்பு ஸ்வரங்களின் சுய ரூபமே காணாமல் போய் விடும்.

நீர் மூழ்கி செய்யும் சத்தம் ஒரு சங்கீத வாத்தியத்தின் நாதம் போலிருந்தால், நீர் மூழ்கியைக் கண்டு கொள்வது வெகு சுலபமாக யிருக்கும்.

யந்திரத்தைக் கொண்டோ, அல்லது பழக்கமும் பயிற்சியும் பெற்ற மானிடச் செவியைக் கொண்டோ, இது நீர் மூழ்கியின் சத்தம்தான் என்று வேட்டைக் கப்பற்காரன் கண்டு கொண்டாலும் கூட—நீர்மூழ்கியைப் பிடிப்பதற்கு அது போதாது. அந்த சத்தம் எந்த திசையிலிருந்து வருகிறது, என்பதைக் கண்டு கொள்ள வேண்டும்.

சத்தத்தின் வேகம் நிலத்தில் போவதைக் காட்டிலும் ஜலத்தில் நாலேகால் மடங்கு அதிக வேகத்துடன் செல்கிறது. சத்தம் புறப்படும் இடத்திலிருந்து செவிக்கு எப்படி வந்து சேருகிறது? சத்தம் அலைகளைக் கிளப்பி விடுகிறது. பரம்பரைபோல, அலையால் அலை ஏற்பட்டு, காதில் மோதும் அலை சத்தத்தைக் கொடுக்கிறது. ஜலத்தில் வேகம் அதிகமானதால், சத்தத்தின் அலை, நிலத்தைக் காட்டிலும், ஜலத்தில் நாலேகால் மடங்கு அதிக நீளமாக இருக்கிறது.

இந்தக் கணக்கு இப்போது எதற்கு? நீர் மூழ்கியின் சத்தம் எந்த திசையிலிருந்து வருகிறது என்பதைக் கண்டு பிடிக்க வேண்டும் அல்லவா? அதன் பொருட்டுத்தான் இந்தக் கணக்கு.

என்ன! மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் போடுகிற

முடி மாதிரி இருக்கிறதே--என்று நினைத்து விடக் கூடாது. மேலும், பௌதிக சாஸ்திரம் செய்து வரும் வேலையே இதுதான். இந்த சத்த அலைக்கு நிழல் உண்டு. நிழலை உண்டாக்கலாம். ஒரு அகலமான ஒளி செல்ல முடியாத (கண்ணாடி போல் அல்லாத) ஒரு சாமானை, அலை செல்லும் வழியில் குறுக்கே வைத்தால்—எதிர்ப்பக்கத்தில் நிழல் விழும். இந்த நிழலைக் கண்டு--குறுக்கிட்ட சாமானுக்குக் கிழக்கே நிழல் விழுந்தால், நீர் மூழ்கியின் சத்தம் மேற்கேயிருந்து, என்பதைக் கண்டு கொள்ளலாம்.

நிழல் தெளிவாக விழவேண்டுமானால், அலையின் நீளத்தைக் காட்டிலும் அநேகம் மடங்கு அதிகமான குறுக்களவைக் கொண்ட சாமானைக் குறுக்கே வைக்க வேண்டும். சத்த அலையின் நீளம் ஜலத்தில் அதிகமானதால்—பெரிய குறுக்களவுள்ள சாமானைக் கப்பலுடன் சமுத்திரத்தில் தொங்கவிட்டுக்கொண்டு போக வேண்டும்.

நமது ஸர். வி. வி. ராமனைக் கண்டு பிடித்து உலகத்திற்குக் காண்பித்த டாக்டர் ரூதர்போர்டுக்கு மேற்படி கற்பனை—ஆராய்ச்சி போர்டார்,—தான் ஜல சப்தங்களைக் கண்டுகொள்வதன் பொருட்டு ஆராய்ச்சிசெய்து கண்டு பிடித்த மார்க்கங்களைக் குறித்து தங்களுக்கு ஒரு ரிபோர்ட்டு கொடுக்கும்படி எழுதினார்கள். அவர், மைக்ரோபோன் மார்க்கம் தான் சரி, என்று எழுதினர்.

ஆதலால் விசேஷமான திட்டங்கள்போட்டு, இதைப் பரிசோதித்துப் பார்க்க வேண்டுமென்று போர்டார் தீர்மானித்தார்கள். முக்கியமாக திசையைக் கண்டு பிடிப்பதற்குத்தான் ஆராய்ச்சிகள் அதிகம் தேவையாக இருந்தன.

இந்த ஆராய்ச்சிக்கு ஒரு ஸ்பெஷல் டைரெக்டரையும் நியமித்துக் கொண்டார்கள். டோக்கள், குடிசைகள், இரண்டு அஸிஸ்டெண்டுகள், ஒரு புதிய வேலைச்சாலை, சாமர்த்தியம் கொண்ட கூலி யாட்கள்—எல்லாம் இந்த விசேஷ டைரெக்டருக்குக் கொடுக்கப்பட்டன.

1913-ம் வருஷம் மே மாதத்தில் இவர் சார்ஜ் எடுத்துக் கொண்டார். அவர் நல்ல முன்னேற்றம் அடைந்தார்.

ஆயினும் அவர் கண்டு பிடித்த யுக்திகளை ஜலத்தில் பரீட்சை செய்து பார்க்க வேண்டாமா?

1916-ஸெப்டம்பரில், ஆராய்ச்சி போர்டார் நிலைமை சரியாக இல்லை என்று ரிபோர்ட்டு செய்து விட்டார்கள். ஏன்? கடற் படையில் இரண்டு கட்சிகள் இருந்தன. லார்டு பிஷர் கட்சி ஒன்று, வின்ஸ்டன் சர்ச்சில் கட்சி ஒன்று. பிஷர் ஆதரித்த எந்த இயக்கத்தையும் திட்டத்தையும் எதிர்க்கட்சி ஸந்தேகித்தது, வெறுத்தது.

புதிய இடத்தில், பரீட்சைகள் ஒழுங்காக நடந்து, புதிய யுக்திகள் உபயோகமுள்ளவை என்று உறுதி ஏற்பட்டு, 1917-ம் வருஷத்தில் நீர்மூழ்கிகளை நன்றாக வேட்டையாடி, 1918-இல் பிரிட்டிஷார் கட்சிக்கு ஜெயம் ஏற்படுவதற்கு அஸ்திவாரமெல்லாம் போடப்பட்டது.

ஐயோ, யோசிக்காதே!

சி. ரா. சேஷாத்திரி

அனுதிகாலம் தொட்டு மனிதனும் தன் முன் எழும் பிரச்னைகளைப் பரிசீலனை பண்ணி அவைகளுக்கு ஒரு முடிவு கண்டுவிட வேண்டும் என்றுதான், தன் மூளைக்கு வேலை கொடுத்துக் கொண்டு வந்திருக்கிறான். ஆனால் இதில் அவன் வெற்றியை யடைந்தானா என்றால், அதற்கு விபரீதமாகப் படுதோல்வியைத்தான் அடைந்திருக்கிறான். தன் கூர்மையான பகுத்தறிவை உபயோகித்து விஷயங்களை அலசிப் பிழிந்து அதன் சாரத்தை தெரிந்துகொள்ள வேண்டும் என்று மனிதன் நினைக்கிறான். ஆனால் அவன் எவ்வளவு தீவிரமாக சிந்திக்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு பிரச்னைகளும் எண்ணிக்கை, வலு, வேகம் இவைகளில் அதிகமாகிக் கொண்டே போகிறது—பிளேக் பூச்சி பெருகுவதைப்போல.

தான் சிந்தித்துச் சிந்தித்து மண்டை புண்ணாகிச் சாகிறது; ஆரம்பித்தபோது எவ்வளவு இருந்ததோ, அதை நூறு கோடி மடங்கு அதிகமாக்கித் தனக்கு பின் வருபவர்களுக்கு பிதிரார்ஜித சொத்தாகக் கொடுத்து விட்டு மண்டையைப் போடுவது. என்ன! இதற்காகவா மனிதன் பிறந்தான்? இவ்வளவும் தெரிந்தும் நாம் பிரச்னைகளைப்பற்றி உதாசீனமாக இருக்கிறோமா? அது தான் இல்லை. நம்மால் இருக்க முடியாது. இதற்கு முன் யாரும் இருந்ததில்லை. இனியும் இருக்க மாட்டார்கள். கல்லில் முட்டிக் கொண்டால் மண்டைதான் உடையும். இருந்தாலும் நான் கல்லில் முட்டிக் கொள்ளத்தான் செய்கிறேன்.

ஐந்து மணி சுமார் இருக்கும். கலெக்டர் ராமச்சந்திரன் வீட்டுக்குப் போனேன். பின்பக்கத் தோட்டத்தில் மாமரத்தடியில் சாய்வு நாற்காலியில் குஷியாய் படுத்துக் கொண்டு, மேலே விளையாடிக் கொண்டிருந்த பக்ஷிகளை பார்த்துக் கொண்டிருந்தான். அவன் முன்னால் ஒரு சிறு மேஜை போடப்பட்டிருந்தது. அதன்மேல் சீமைச் சாக்கில் ஒரு பாட்டில், அதற்கு துணைக்கருவியான பூவேலை செய்த கிளாஸ், மசாலாவாக உபயோகிப்பதற்காக சில தின்பண்ட வகைகள், இவை ஆஜரா யிருந்தன. அவர் ஒரு புஸ்தகத்தை மார்பில் விரித்து வைத்திருந்தார். நான் போனவுடன் எழுந்து உட்கார்ந்து, புஸ்தகத்தை மேஜை மேல் வைத்துவிட்டு ஒரு கிளாஸை நிரப்பி என்னண்டை நீட்டிக் கொண்டே "எப்பொழுதாவது கொஞ்சம் குடித்தால் உனக்கு ஒரு ஆபத்தும் வராது" என்று உறுதி கூறினான்.

நான் அரை சிரிப்பு சிரித்துவிட்டு சும்மா இருந்தேன்.

பிறகு கொஞ்சநேரம் எதை எதையே பேசிக் கொண்டிருந்

தோம். திடீரென்று "சுந்தர் அங்கு பார்த்தாயா?" என்றதும் நான் திரும்பினேன். ஒரு பெண் சுமார் இருபது அல்லது இருபத்தோரு வயதிருக்கும்; ராமசந்திரனின் குழந்தைகளுடன் தோட்டத்தில் உலாவிக் கொண்டிருந்தாள். அவள் அடிக்கடி எங்கள் பக்கம் திரும்பிப் பார்த்துக் கொண்டே போனாள்.

"பார்த்தாயா அவளை, எப்படி? அவள் நல்ல அழகாயில்லையா!"

"நிச்சயமாய் அவள் நல்ல அழகு தான்" என்று நான் பதில்கூறினேன்.

"நன்கு படித்திருக்கிறாள். என் குழந்தைகளுக்கு டியூஷன் சொல்லிக் கொடுக்கிறேன் என்று கூறுகிறாள். அதோடுகூட ஊ...ஊ...தெரிஞ்சுதா?" என்று கேட்டுவிட்டு அவன் குலுங்கிக் குலுங்கி நகைத்தான்.

"எனக்கு ஒன்றும் புரியலையே!"

"தெரியலையா? அட முட்டாள். நாலுகாசை எறிந்தால் அப்புறம் அவள் நம்ம சொத்துத்தான் எனக்கு நிச்சயமாய் தெரியும். யார் இவளை எனக்கு சிபார்சு செய்தாரோ அவரும் சொன்னார்—"

ராமச்சந்திரன் இப்படிப் பேசுவது எனக்கு ஆச்சரியத்தை உண்டாக்கவில்லை. பல முறை இத்தகைய பேச்சுக்கள் அவன் வாயிலிருந்து வர நான் கேட்டிருக்கிறேன். ஒரு சமயம் வடநாட்டுப் பெண் ஒருவள் வந்து அரசியல் விஷயமாக ஒரு பிரசங்கம் செய்தாள். அதைக் கேட்டுவிட்டுத் திரும்பும்போது இவன் அவளுடைய நடத்தை பூர்வோத்திரம், இவைகளைப் பற்றி மிகவும் கேவலமாகப் பேசினான். ஆனால் எனக்கு நன்றாகத் தெரியும்; அந்த நாரீமணி சாவித்திரியோ, சீதையோ அல்லாவிட்டாலும், சீல ஒழுக்கமுடையவள் என்று.

நான் மறுத்துப் பேசவோ கண்டிக்கவோ இல்லை. அவன் கலெக்டர் என்ற காரணத்தால் அல்ல; ஆனால் நாகரிகத்துக்கு விரோதம் என்று. 'விலை மதிப்புள்ள ஆடைகளை அணிந்து சோபாவில் உட்கார்ந்து நாம் எவ்வளவு கேவலமாயும் பேசலாம். ஆனால் அதே வார்த்தையை, அதே கருத்தை, ஒரு ஏழை ரோட்டில் சொல்லிக் கொண்டு போனால் அவனை சுத்த அநாகரிக மடையன் என்று உலகம் கூறும். நான் நாகரிக சமூகத்தைச் சார்ந்தவனானதால் இவற்றையெல்லாம் எதிர்பேசாமல் சகித்திருந்தேன்.

"ஆனால் அவளை வாத்தியாராக அமர்த்தியாய் விட்டதா?" என்று நான் கேட்டேன்.

"இல்லை. சரிதான், தாசிகளை விட மோசமானவர்களைக் கொண்டு படிப்பு சொல்லி தரச்சொன்னால் அதைவிட வேறு என்ன வேணும்? அந்த குழந்தைகள் முன்னுக்கு வந்தாற் போலத்தான்."

அவன் அந்தப் பெண்ணை விஷத்திலும் கொடியதாக வெறுக்கிறான் என்பதை அவன் முகம் காட்டிற்று.

"சுந்தர்!" என்று ஆத்திரத்தோடு ஆரம்பித்தான். "சில வெள்ளித் துண்டுகளுக்காக தன் உடம்பை விற்கக்கூடியவள் 'உண்டு என்ற எண்ணமே என்னால் சகிக்க முடியவில்லை. அறப்பழுத்த மாங்கனியில் புழுப்போல இவள் சமூகத்துக்கு ஹானி விளைப்பவள். இப்படி உயிர் வாழ்வதைவிட சாவு எவ்வளவோ சிறந்தது. இவள் எத்தனை வாலிபர்கள் தீய மார்க்கத்தில் செல்வதற்குத் தூண்டுகோலோ?

சற்று நேரம் மௌனமாயிருந்துவிட்டு, "இருந்தாலும் அந்தப் பெண் என்னவோ ரொம்ப அழகு. என் மனைவியைப்பற்றிய பயம் இல்லாவிட்டால் நான் இவளை என்னிடம் வைத்துக்கொள்வேன்" என்று சொல்லிவிட்டு உரக்கச் சிரித்தான்.

கடை வீதி. ஆம், அது துன்பத்தின் உருவம். துயரின் பிரதிபிம்பம். குடியானவன் தன் மகளுடைய கலியாணத்தின் நெருக்கடியால் அந்த வருஷம் விளைந்த தானியம் முழுவதையும் அரைக்கால் விலைக்கு விற்கிறான். பெண் தன் நோயாளிக் கணவனை காப்பாற்றுவதற்காக வருட முழுவதும் சாப்பிடக்கூடிய நெல்லை ரூ. 15க்கு அடகு வைக்கிறாள். யாரோ ஒரு தொழிலாளி பல நாள் வேலையின்றி அவதிப்பட்டு தன் மனைவியின் கழுத்தணியை உண்வுக்காக விற்றானும்! எண்ணற்றவர்களுடைய துன்பம் 'ஓவென்று அலறும்' அந்த இடத்தில் என்னுடைய மனோவேதனையையும் மூழ்கடித்து விடுவோம் என்று அங்கு சென்றேன்.

என் என்றால், நான் அந்தப் பெண்ணைப்பற்றியே நினைத்துக் கொண்டிருந்தேன். அவள் ஏன் இந்த நிலைமைக்கு வரவேண்டும்? தயை, தியாகம், தூய்மை. இவைகளே உருவெடுத்து வந்த பெண் இவ்வளவு கேவலமான வீழ்ச்சியை எப்படி அடைந்தாள்? நர்ன் அந்தப் பெண்ணை நன்கு கவனித்தேன். அவள் முகத்தில் பால் வடிந்தது. கருணையும் தயையும் தாண்டவமாடிற்று.

சின்ன விஷயம். காலணா பொடி மட்டையை மறந்து வைத்துவிட்டு மனிதன் படும்பாடு, அப்பாடா! தேடியதற்குக் கூலி கொடுத்தால் ரூபாய் 2 தரவேண்டும். அதை அங்கு வைத்தேனா, இங்கு வைத்தேனா ஒருவேளை... அ அ... என்று அவன் படும் மன வேதனைக்கு மதிப்புப் போட்டால் குறைந்தது ரூ 2000 பிடிக்கும். அப்படியிருக்க இப் பெண்ணைப் பற்றிய எண்ணங்கள் எனக்குச் சகிக்க முடியாத வேதனையை உண்டாக்கினதென்றால் என்ன ஆச்சரியம்?

காப்பி சாப்பிட்டுவிட்டு வெளியே வந்தேன். பெண்கள் சங்க காரியதரிசி பார்வதிபாய் ஒரு தோழியுடன் வந்து கொண்டிருந்தாள். என்னைக் கண்டதும் நமஸ்கரித்துவிட்டு தன் ஸ்நேகிதியைப் பார்த்து, "இவர் இந்த ஊரில் பிரசித்த வக்கில். டென்னிஸ் விளையாடுவதில் நிபுணர். ஆகையால் ஐரோப்பிய நாடுகளுக்குக் கூட பலமுறை போயிருக்கிறார்....." என்று என்னை அறிமுகப்படுத்திவிட்டு, என்னிடம் திரும்பி "இந்த அம்மாள் பெயர் சபிதாதேவி. நம்மூர் தேசியப் பள்ளியில் உபாத்தியாயராய் இருக்கிறாள்" என்று கூறினாள். அந்த அம்மாளும் என்னை சிறிது நேரம் கூர்ந்து கவனித்துவிட்டு, "தங்கள் பெயரை நான் பலமுறை கேட்டிருக்கிறேன். இன்று உங்கள் தரிசனம் கிடைத்தது என் பாக்கியம்" எனத் தணிந்த குரலில் அழகாகக் கூறினாள்.

இதற்குள் பார்வதிபாய், ஒரு வண்டி பேசுவதற்காக வண்டிகள் தங்குமிடத்துக்குச் சென்றாள். அவள் நகர்ந்ததும் சபிதாதேவி என் கவனத்தை இழுத்து, "நான் உங்களுடன் சில விஷயங்கள் பேசவேண்டும். நாளை சாயங்காலம் உங்களைச் சந்திக்க முடியுமா?" என்றுகேட்டாள்.

* * *

நான்கு மணி யடித்தது. சபிதாதேவி என் அறையில் நுழைந்தாள். அவளுடைய குழைந்து வெளுத்த முகம், பயங்கரமான சிந்தனைகள் அவள் உள்ளத்தை வாட்டினவென்று கூறிற்று.

"உங்கள் சமயத்தை நஷ்டமாக்குவது மட்டும் அல்ல. தங்கள் மனநிம்மதியையும் குலைக்க வேண்டியிருக்கிறதே என நான் மிகவும் வருந்துகிறேன்" என்று சொல்லிக் கொண்டே உட்கார்ந்தாள். "ஆனால் வேறு வழியுமில்லை" என்று கூறிவிட்டு சிரிக்க முயன்றாள்.

ஆறுதலாக, "பரவாயில்லை என்னால் கூடுமானதை செய்ய நான் எப்பொழுதும் தயார்" என்று நான் கூறினேன்.

"எனக்கு, டியூஷன் வைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. இதற்காக பலமுறை நான் கலெக்டர் வீட்டுக்குப் போனேன். நீங்கள் வந்திருந்த அன்றும் அதே நோக்கத்தோடுதான் நான் கலெக்டர் வீட்டுக்கு வந்திருந்தேன். ஆனால் அவர் சால்ஜாப்பு சொல்லி தட்டிக் கழிக்கிறார்."

அவள் ஒரு பட்டுச் சேலை உடுத்திருந்தாள். அது கால அவதிக்கு மேல் உழைத்தாய்விட்டது. பல இடங்களில் பொத்தல்கள் காணப்பட்டன. அவள் நல்ல ரூபவதிதான், சந்தேகமில்லை. ஆனால் அவள் கண்களின் ஒளி மங்கத் தொடங்கிவிட்டது. அவள் உதடுகள் வரண்டிருந்தன. முகம் வெளுத்திருந்தது.

"நீதான் வாத்தியார் வேலை பார்க்கிறாயே, டியூஷன் வேறு எதற்கு என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் உங்களிடம் ஒளிக்காமல் சொல்லுகிறேன். என் நிலைமை ரொம்ப மோசம். எனக்கு கிழவி மாமியார் இருக்கிறாள். கலியாணமாகாத நாத்தி ஒருவள் இருக்கிறாள். கொழுந்தன் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கிறான். எனக்கு இரண்டு சிறு குழந்தைகள் இருக்கின்றன. இத்தனை பேரையும் காப்பாற்ற ரூ. 30 போதுமா என்பதை தாங்கள் நன்கு அறிவீர்கள். போதாத குறைக்கு என் கணவன் கொஞ்சம் கடன் வேறு வைத்துவிட்டுப் போயிருக்கிறார். அதையும் நான்தான் கட்டவேண்டும்."

"உங்கள் கணவன் இப்பொழுது எங்கே?" என்றேன். அவள் கண்கள் முத்துக்களைக் கக்கின. ஆகாயத்தைப் பார்த்துக்கொண்டே "அவர் உலகத்தார் காணக்கூடாத இடத்திற்குப் போய் இரண்டு வருஷங் கழிந்துவிட்டன. எங்களை விடத் தாய்நாடுதான் தனக்குப் பெரிது என்று அவர் எண்ணியதால் அவருக்கு அந்த கதி சம்பவித்தது."

நான் திடுக்கிட்டவனாய் "என்ன! என்ன" என்றேன்.

தன்னை சமாளித்துக்கொண்டு அவள் மேலே சொன்னாள். "காங்கிரஸ் ஊர்வலம் புறப்பட்டது. அவரும் கூட்டத்தில் இருந்தார். ஊர்வலம் நிறுத்தப்பட்டது. இது சட்ட விரோதமான கூட்டம் என்று சொல்லி கலெக்டர் தடியடிப் பிரயோகம் செய்யச் சொன்னார். தடியடி வருஷித்தது. என் பதி, எல்லோருக்கும் முன்னால் இருந்தார். அவரும் கீழே வீழ்த்தப்பட்டார். ஆனால் அவர் நல்ல பலசாலி; வாலிபர்கூட. அவர் ரத்தத்தில் மட்டில்லா வேகம் இருந்தது. கலெக்டர் எதிரில் நின்று அடிபட்டவர்களைப் பார்த்து சிரித்துக்கொண்டிருந்தார். அவரும் இந்தியர் தான்."

"ஆ, இந்தியனா?" என்றேன்.

"ஆம். ராமச்சந்திரனுக்கு முன்னால் அவர்தான் இருந்தார். என் கணவனுக்குக் கோபம் தாளவில்லை. அதிகார மதுவை உண்டு, தன்னையும் மறந்து தன் சகோதரர்களையே அடிக்க ஏவுவதுமல்லாமல் ஏளனம் வேறு செய்கின்றான். "தாங்கள் தின்னும் ரொட்டி எங்களுடையது தான் என்பது சர்க்கார் குலாம்களுக்குஞாபகம் இருக்கவேண்டும்!" என்று அவர் இடித்துச் சொன்னார்.

இதைக் கேட்டதும் கலெக்டர் முகத்தில் சிரிப்பு மறைந்தது. கோபத்தால் கண்கள் சிவந்துவிட்டன. இந்த மாறுதலைக் கண்டது தான் தாமதம். போலீஸ் புலிகள் என் கணவன்மீது பாய்ந்தன. அவர் உணர்வு இழந்தார். அந்தி மூர்ச்சை

ளியவேயில்லை. நான் கொள்ளை டிக்கப்பட்டேன்."

அவள் தொண்டை அடைத்துக் கொண்டது. திரும்பவும் ஆரம்பித் தாள். "ஆனாலும் நான் கலெக்டர் பேரில் குறை கூறவில்லை. அவர் தன் கடமையைச் செய்தார். என் கணவன் அப்படி சொல்லி யிருக்க வேண்டியதில்லை. ஆனால் அவரும்தான் என்ன செய்வார், பாவம், வாலிப முறுக்கு. அபரி மிதமான சக்தி அவரை உந்திற்று. அவர் அப்படி பதில் சொல்லாதிருந் தாலும் நான் அவரைக் கோழை என்றுதான் நினைப்பேன். வாஸ்த வத்தில் எல்லாம் என் துர்பாக்கியம். என்விதி. என் கணவர் அந்த சம யத்தில் அப்படிச் சொன்னதும் ஸ்வ பாவமே. கலெக்டரும் நிரபராதி தான். ஜில்லா அதிகாரி பெரிய பொறுப்புள்ள உத்தியோகஸ்தர். பின் எதற்காகத்தான் அவருக்கு அவ் வளவு சம்பளம் கொடுக்கப்படுகிறது? எதனால் சர்க்காருக்குப் பெருமை உண் டாகுமோ அதைத்தான் அவர் செய்தார். எல்லாம் என் துரதி ருஷ்டம்."

நான் அப்படியே ஸ்தம்பித்து உட்கார்ந்து விட்டேன். அவள் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் என் இருதயத்தில் எதிர் ஒலித்தது; எதிரொலித்துக் கொண்டேயிருந் தது. கண்ணிய வாழ்வு நடத்த அவளுக்கு யார் உதவிசெய்யத் தயார்? உயரிய வாழ்க்கையை அவள் நடத்த விரும்புகிறாள். ஆனால் அவள் கஷ்ட தசையைக் கண்டு அதி லிருந்து ஏதாவது லாபமடைய முடியுமா என்று தானே உலகம் எதிர்பார்க்கிறது.

இன்றுவரை அவள் நேர்மை யாகத்தான் இருந்திருக்கிறாள். ஆனால் அவள் உயிர் வாழவேண்டுமே! அவள் ஜீவித்திருந்தால் அவளைச் சேர்ந்த ஒரு சிறு உலகமும் ஜீவித்திருக்க முடியும்?

நம் பெண்கள் சாவித்திரியும் சீதையுமாய் இருக்க வேண்டுமென நாம் விரும்புகிறோம். ஆனால் அவர் கள் வாழ்ந்த காலத்தில் நம் சமூக அமைப்பு எப்படியிருந்தது? பெண் களை அவர்கள் வாழ்க்கைப் போராட் டத்தில் ஈடுபடும்படி விற்புறுத்தினர் களா? இன்று நம் பெண்மணிகள் வாழ்க்கைப் போரில் ஈடுபட்டால் மற்ற நாடுகளில் ஈடுபட்ட நாரிகள் அடையும் லாப நஷ்டத்தை அடை யத்தான் வேண்டும். அதில் வரும் தீமைகள் நமக்கு அருவருப்புண் டாக்குகிறதே யென்று நாம் சமூ கத்தை பண்டை நிலைக்கு திருத்தி யமைக்க முயலுகிறோமா?

இப்பெண், வேறு வழியின்றி தன் சரீரத்தை விற்றாலும் விற்க லாம், ஆனால் அவளை கேவலமாய் பேசினானே அந்த ராமசந்திரன், தன் ஆத்மாவையே விற்கவில்லையா? "பின் எதற்காகத்தான் அவ்வளவு சம்பளம் கொடுக்கப் படுகிறது." என்ற வார்த்தைகள் என் காதில் எதிரொலித்துக் கொண்டே இருக் கின்றன.

என்னைச் சிந்தனை வாட்டி எடுக் கிறது. என்னால் சகிக்க முடிய வில்லை. யார் சரீரத்தை விற்றார்? யார் ஆத்மாவை விற்றார்? என் விற் றார்கள்? எங்கே பார்த்தாலும் எல் லாரும் விற்றுக்கொண்டுதானே இருக்கிறார்கள். வாங்குபவன்தான் யார்?

இனி முடியாது. தலை சுழலு கிறது. பைத்தியம் பிடித்துவிடும் போல இருக்கிறது. இவைகளையெல் லாம் பற்றி யோசிக்கக்கூடாதென்று முன்னமேயே சொன்னேனே.

வருத்தமும் வளர்ச்சியும்

(டௌன்ஷென்ட கவியின் மூலத்திலிருந்து)

பலர் வந்து என்னிடம்
"என்ன செய்வோம்?" என்றார்கள்.
நான் சொன்னேன் :
" கடமையைத்தான் !" —என்று.
" பிரதிப் பிரயோஜனம் !" என்று
உதட்டைப் பிதுக்கினார்கள் அவர்கள்.
ஏன் ?

மண்ணல்லவா மாளிகையாக வேண்டும்,
மண்ணில்லாமல் மாளிகை ஏது ?
இலையுதிரில் போய்விடுகின்றன என்பதற்காக
இளவேனிலில் இலைகளே தளிர்க்க வேண்டாமா ?
பட்டுப்பூச்சியாவது கம்பளிப் பூச்சிதான்—
அது வேண்டாமென்றால் எப்படி ?

நீ வருந்துவது எதற்காக ?
வளர்ச்சிக்காகத்தான் !
வருத்தம் கொடுத்தது வளர்ச்சி—
அது முடிந்ததும்—
வருத்தமே நின்று விடுகிறது !

கு. ப. ரா.

நல்ல குடித்தனம்!

அ. கி. ஜயராமன்

பாத்திரங்கள்

மாத்ருபூதம் :	ஒரு உத்தியோகஸ்தர்.
அகிலாண்டம் :	அவர் மனைவி.
எச்சம்மாள் :	அவர் தாயார்.
சுந்து :	அவருடைய ஐந்து வயது பையன்.
மீலி :	அவருடைய இரண்டு வயது குழந்தை.

(சென்னை திருவல்லிக்கேணியில் ஒரு வீடு. காலை எட்டரை மணி. எச்சம்மாள் ஸ்நானம் செய்துவிட்டு, ஜபமாலையைக் கையில் உருட்டிக் கொண்டே ஜபம் செய்து கொண்டிருக்கிறாள். மாத்ருபூதம் மீலியை வைத்துக் கொஞ்சிக்கொண்டிருக்கிறார். சுந்து குழாயடியில் விளையாடிக் கொண்டிருக்கிறான். அகிலாண்டம் முணுமுணுத்துக்கொண்டே உள்ளே சமையல் செய்துகொண்டிருக்கிறாள்.)

எச்சம்மாள் :—(ஜபமாலையை உருட்டிக்கொண்டே) எலே! ஏய்! சுந்து, இங்கே வாடா!

சுந்து :—(திரும்பிப் பார்த்து) என்ன பாட்டி?

எச்ச :—இங்கே வாடா! தண்ணிலே நிக்காதேடா, ஜுரம் வரும். (ஜபம் செய்கிறாள்.)

(சுந்து மீண்டும் குழாயடியில் விளையாடுகிறான்.)

எச்ச :—ஏய்! சுந்து! உன்னைக் கட்டேலே வைக்க! வாடா இங்கே!

சுந்து :—(கோபத்துடன் திரும்பி) என்ன பாட்டி, எப்ப பாத்தாலும்!

எச்ச :—(சற்று கோபமாய்) வரயா? எழுந்து வரட்டுமா?

சுந்து :—(கேலியாக) வாயேன், எனக்கென்ன? வந்தா மேலே பட்டுடறேன்!

எச்ச :—பதிலுக்குப் பதில் பேசாது! வாய், துளுத்துப் போச்சு! வரலையா இன்னும்? (ஜபம் செய்கிறாள்).

சுந்து :—நான் வல்லே!

மாத்ருபூதம் :—எலே சுந்தா! வாடா இங்கே, பாட்டி சொல்றத்தைக் கேளுடா!

எச்ச :—ஆஹா! நீ கேட்டயே! அந்த மீதியைத்தான் உன் பிள்ளே கேக்கப்போருனுக்கும்.

மாத்ரு :—அம்மா, நீ சொன்னத்தை, எதை நான் கேக்கலே?

எச்ச :—ஆஹா! கேட்டே! கேட்டே!

(நீலி தவழ்ந்து எச்சம்மாளிடம் போகிருள்.)

எச்ச.—(ஜபம் செய்து கொண்டே) இந்தாடி, சட்டையைப் போட்டுண்டு எங்கிட்ட வராதே! போ! போ! உங்கப்பனண்டே போ!

(குழந்தை திரும்பி தந்தையை நோக்குகிறது)

மாத்ரு :—(அன்பாக) வாம்மா! வா! பாட்டிட்டே போகப்படாது. (சுந்துவைப் பார்த்து) எலே! சுந்து இங்கே வரயா? நான் வரட்டுமா?

சுந்து :—நான் வல்லே!

மாத்ரு :—வல்லேயா, வரயா? — ஏதாவது பூசை வேணுமா?

(சுந்து பேசாமல் அங்கேயே நிற்கிருன்.)

எச்ச:—(ஜபமாலையை உருட்டிக் கொண்டே) பாருடா! பாரு! எதாவது துளிப் பயமிருக்கா பாரேன்! கழுதையா ஆக்கி வைச்சிருக்காளே!

[மாத்ரு பூதம் முற்றத்தில் இறங்குகிறார். சந்து அவர்மேல் தண்ணீரை இறைக்கிறான். அவர் ஓங்கி அவன் முதுகில் ஒரு அடி கொடுக்கிறார். அவன் வீரென்று அழுகிறான். உள்ளே இருந்து அகிலாண்டம் வருகிறாள்.]

அகி:—ஏன்? ரெண்டு பேருமா சேர்ந்து குழந்தையைக் கொல்ரேள்?

எச்ச:—குழந்தை! நீ குழந்தை வளத்திருக்கிற சவரணைக்கு பொர்சுக்கு வேறே வந்துட்டயா?

அகி:—(சிடுசிடுப்புடன்) ஏன்? என்ன என் குழந்தைகளுக்கு? நீங்க வளத்திருக்கேளே பிள்ளை! அந்த மாதிரி இல்லையோ?

மாத்ரு:—(அகிலாண்டத்தைப் பார்த்து) இந்தாடி அவ சொன்ன பதிலுக்குப் பதில் சொல்ரயே! என்ன? எது வரவர உனக்கும் வாய் துளுத்துப் போய்ட்டாப்பிலே இருக்கு!

அகி:—என்னைத்தான் நீங்க சொல்லுவேள். நான் தானே பைத்தியக்காரி! நன்னு வந்து ஆப்பிட்டுண்டேன், உங்களண்டையும் உங்க அம்மாவண்டையும் —

எச்ச:—என்னடியம்மா ஆப்பட்டுனுட்டே நீ?

அகி:—ஆப்டுக்கறதென்ன? இந்த தரித்திரம் பிடிச்ச வீட்டுலே வந்து அழரேனே அது போறுதா?

எச்ச:—என்னடி! வாயறியாதெ வார்த்தை பேசறே! போனுப் போறுதுன்னு பேசாமெ இருந்தா, தலைமேலே ஏர்றயே? எல்லாம் அவன் கொடுக்கற இடம்னு?

அகி:—(கம்பீரமாக) அவரென்ன எனக்கு இடம் கொடுக்கறது. நான்னு உங்களுக்கு இடம் கொடுத்து விட்டேன். உங்களுக்கு வேலை செய்யரேனே அது போறுதா? பேச்சு வேறே கேக்கணுமா?

எச்ச:—என்னடி பேசிப்பிட்டா உன்னை? காளியாட்டமா! வாயைக் காட்ரே! அப்பா! நல்ல சம்பந்தம்! குறக்கும்பலா?

அகி:—இன்னொரு தரம் அந்த மாதிரிச் சொல்லாதேயுங்கோ! பெரியவாளாச்சேன்னு பொறுத்தேன்.

எச்ச:—இல்லாட்டா என்னடி பண்ணிப் பிடுவே?

அகி:—(கோபமாய்) என்ன பண்ணிப்பிடுவேனு! அந்த நாக்கை..................

எச்ச:—(திடுக்கிட்டு பிள்ளையிடம்) பாத்தியாடா? பாத்தியாடா! என்ன சொன்னு பாத்தியா? எனக்கு ஒருவா சோத்துக்கு வழி பண்ணுமே, உங்களண்டை விட்டு விட்டுப்போனுரே அந்தப் பிராமணன்..........(அழுகிறாள்)

மாத்ரு:—அம்மா! என்ன இது! அவளுக்கும் உனக்கும் என்ன? இதென்ன பெரிய தொல்லையான்னு போச்சு!

எச்ச:—பாத்தியா! பாத்தியா! இன்னும் அவளைக் கேட்டானு பாத்தியா? அவளைக் கேட்டனு அவன்! அவன்தான் அவ சொன்னபடி ஆடறானே!

மாத்ரு:—ஏண்டி அகி! நீ தான் போயேன்! என்னடி கொஞ்சம் கூட பெரியவா, சின்னவா இல்லாமே! என்ன சண்டை இது? உனக்கு புத்தி கித்தி எதானும் இருக்கா?

அகி:—எனக்குப் புத்தி இருந்தா நான் ஏன் உங்களைக் கல்யாணம் பண்ணிண்டு திண்டாடறேன்!

மாத்ரு:—சிச்சீ கழுதை! வாயை மூடு! போனுப் போறதுன்னு பாத்தா எது?............

அகி:—நீங்க இதானு சொல்லுவேள்? இன்னமும் சொல்லுவேள். விடிய நாலு நாழிக்கு எழுந்து ராத்திரி பத்து நாழி வரைக்கும் உங்களுக்கு உழைச்சதுக்குப் பலனு இது?.........உம்! உங்க மேலே என்ன தப்பு!

மாத்ரு:—யார் மேலே தப்பு! அதைத்தான் சொல்லேன்.

அகி:—அவாளைச் சொல்லணும். எனக்கு ஒரு பாழும் கிணறு ஆப்படாமே, இங்கே கொண்டுவந்து தள்ளினுளே! (அழுது கொண்டே) என்னுலே இனி ஒரு நிமிஷம் கூட இங்கே இருக்க முடியாது.

எச்ச:—உன்னை யார் அழைக்கிறுன்! உங்கப்பன்தான் அங்கே சோத்துக்குத் திண்டாடறானே தெரியாது போலிருக்கு சேதி.

அகி:—(ஆத்திரத்துடன்) எங்கப்பா ஒண்ணும் சோத்துக்குத் திண்டாடலே! நீங்கதான் என் கீழே சோத்துக் கழறேள்!

எச்ச:—(பிள்ளையைப் பார்த்து) பாத்தியாடாப்பா! போருமா? உன்னைப் பெத்ததுக்குப் பலனுடா இது? என்னுலே இனிமே ஒரு நிமிஷம்கூட இங்கே இருக்க முடியாது. நான் இருந்த இருப்பென்ன? அதெல்லாம் போயி இந்த நாயண்டேயும், பேயண்டேயும் பேச்சுக் கேக்கலாச்சே! (தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொள்கிறுள்) எனக்கு டிக்கட் வாங்கிக் கொடுத்துடு. நான் போறேன் காசிக்கு. அப்பறம் நீயாச்சு, உன் பெண்டாட்டியாச்சு. அவ காலிலே நீ விழு, உன் காலிலே அவ விழட்டும். நான் போறேன். (எழுந்து புடவையை எடுத்து மடிசஞ்சியில் வைக்கிறுள்.)

மாத்ரு:—(பரிதாபமாய்) அம்மா! இதென்ன இது? நான் சன்யாசம் வாங்கிண்டு எங்கேயாவது ஓடிப்போகட்டுமா! (மனைவியைப் பார்த்து) போயேண்டி உள்ளே!

அகி:—நான் போகல்லே! என்னுலே இந்த வீட்டுலே இனி ஒரு நிமிஷம்கூட இருக்க முடியாது. சுந்து வாடா! அடி நீலி! எங்கடி தொலைஞ்சு போனே? (நீலியைப் போய் எடுத்துக் கொள்கிறுள்.)

(எச்சம்மாள் மடிசஞ்சியுடன் வெளியே கிளம்புகிறாள்)

மாத்ரு :—அம்மா! அம்மா! என்ன இது? (அவளை வழி மறிக்கிறார்.)

எச்ச :—இந்தா மாது! என்னை வழி மறிக்காதே! நான் போரேன்! பேசாம போயி கங்கையிலே இறங்கிடுரேன்.

(அகிலாண்டம் நீலுவை இடுப்பில் எடுத்துக்கொண்டு, சுந்துவைக் கையில் பிடித்துக்கொண்டு புறப்படுகிறாள்.)

மாத்ரு :—அவ கங்கையிலே விழப்போறா! நீ எங்கே?

அகி :—என்னோடே நீங்க பேசவாண்டாம். எங்கேயானும் ஆத்துலே, குளத்துலே இதுகளையும் தள்ளி நானும் விழறேன். போரும்—உங்களோடே இருந்து குடித்தனம் பண்ணினது.

(கடிகாரத்தில் டங் டங் என்று மணி பத்தடிக்கிறது)

மாத்ரு :—அட இழவே. மணியும் பத்தாச்சே! ஆபீஸுக்குத் தொலையணுமே! இதென்ன பிராரப்தமான்னு போச்சு! (தாயைப் பார்த்து) அம்மா! தயவு பண்ணி இன்னிக்கு மாத்திரம் மன்னிச்சுக்கோயேன்!

எச்ச :—ஏண்டா, அவளைக் கேட்கத் துப்பில்லே.....

மாத்ரு :—அடி அகி! உங்களுக்குப் புண்ணியம் உண்டு. போங்களேன் உள்ளே!

அகி :—முடியாது!

மாத்ரு :—(தாயைப் பார்த்து) அம்மா நீயானும் போயேன் உள்ளே!

எச்சு :—ஊஹூம், இனிமேலா?

மாத்ரு :—எப்படியாவது தொலைஞ்சுபோங்கோ நல்ல பெண்டாட்டி, நல்ல குடித்தனம் நல்ல வாழ்வு—சன்யாசியா இருக்கிறது எவ்வளவோ தேவலையே! ஒழியட்டும் சனிகள். நான் தொலையரேன் ஆபீஸுக்கு. (சட்டையை எடுத்துக்கொண்டு கிளம்புகிறார்).

அகி :—சோத்தைக் கொட்டிண்டு போறதானே!

மாத்ரு :—ஒரு இழவும் வாண்டாம். (போகிறார்)

அகி :—(உள்ளே போய்க்கொண்டே) பீடைகளா, வாங்கோ சோறு போட்டுத் தொலைக்கரேன்.

எச்சு :—டிக்கட் வாங்கிக் குடுடான்னு பேசாமெ போயிட்டானே! (மடிசஞ்சியுடன் உள்ளே போகிறாள்.)

அழகு மயக்கம்

நாம் ருசி பார்க்காத சந்தோஷமோ, துக்கமோ ஒன்றும், நம் இனத்தின் அநுபவத்திற்குள் இருப்பதாகத் தெரியவில்லை. ஆயினும் அழகு, நல்லது, இரண்டிலும் நமக்கு உள்ள நம்பிக்கை ஒருபோதும் நம்மை விட்டுப் போனதே இல்லை. வியாதிக்கு அது மருந்தாகவும், ஏழ்மையிலும் செல்வமாகவும், நல்ல தேக திடத்திலும் வெற்றியிலும் நமக்கு மகிழ்ச்சி அதிகம் ஊட்டினதுமாக இருக்கிறது.

* * *

அழகுக்கு இருக்கும் மோஹன சக்திதான் எவ்வளவு! மனிதனுடைய உணர்ச்சிகளையும், மனதுகளையும் வேறு எது இவ்வளவு பலமாக தூண்டில் போட்டு இழுத்து விடுகிறது? வீரர்களை அநேகம் தடவைகள் தங்கள் தீவிரப் போக்கை மாற்றச் செய்கிறது. உரம் வாய்ந்த புஜங்கள் பல சமயம் தங்கள் ஆணவத்தைக் கூட மறந்து விடுகின்றன.

* * *

வாழ்க்கையின் எல்லா ஸ்தானங்களிலும் மனித ஹிருதயம் அழகுக்குத்தான் எங்குகிறது. கடவுள் உண்டாக்கும் அழகுப் பொருள்கள் யாவும், எல்லோருக்கும் அவர் சமமாகக் கொடுக்கும் வெகுமதி.

என், எழைகளிலும் கூட அழகுணர்ச்சியை அதிகம் அநுபவிக்கத் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அது உபயோகிக்கப் படாமலே துருப் பிடித்து அழிந்து போகிறது. அவர்கள் கவனம் வேறொரு இடத்தில் பலமாக உபயோகப்பட வேண்டி இருக்கிறது.

* * *

மதுவை விட மிகவும் மோசமான போதைப் பொருள் அழகு. அழகாக இருப்பதையும், அழகை ரசிப்பவனையும் இரண்டு பேர்களையும் அது மயக்கத்தில் ஆழ்த்தி விடுகிறது.

* * *

வசீகரம் அத்தனையும் அணிந்து கொண்டு; அந்த அழகு உருவத்தோடு அவள் தோன்றினாள். நல்ல உடல் வீச்சு அவளுக்கு. அவள் கூந்தல் சிறைப்படாமல் சுதந்திரமாக துளைந்து கொண்

டிருந்தது. ஒன்றிற்கு ஒன்று பொருத்தம் காட்டும் வகையில் அவள் சதை அமைப்புகள்.

அவள் முகத்திலே காதல் கோயில் கொண்டு இருந்தது. இன்பம் தரும், மிருதுவான, இனிய வசீகரம் ததும்பி நின்றது. அவள் கண்கள் சாந்த ஒளி வீசிக் கொண்டிருந்தன; சிப்பிகள், உலோக பாறைகள் இவைகளி லிருந்து ஆக்கின பொருள்கள் அவளை அலங்கரித்தன.

இப்படி அழகின் வசீகரத்தை அடுக்கிக் கொண்டே போகலாம்.

* * *

ஆஹா! வாழ்க்கை, இயற்கை இவைகளின் ஒவ்வொரு நாம பிலுமே இவ்வளவு அழகு வெளி யிட்டுக் காண்பிக்கிறதே! இவற்றி லேயே இவ்வளவானுல் இந்த அழ கின் பிறப்பிடம்தான் எவ்வளவு அழகாக இருக்குமோ?

* * *

வெறும், உதடு, கண் இவை களில் ஒன்றைப் பார்த்து மட்டும் நாம் அழகு என்று அழைப்ப தில்லை. அத்தனை அம்சங்களையும் சேர்த்து, அதன் முழுப் பலனை யும் தான் அழகு என்கிறோம்.

* * *

அழகு ஒரு அபாயகரமான ஆபரணம். காதல் என்ற அம்சம் இல்லாமல், அன்பைத் தூண்டி விடக்கூடிய சமுகமான, ஒரு திருப்தி தரக்கூடிய உருவம் அழகு உருவத்தைவிட ரொம்பத் தேவலை.

அழகைப் போல, தன் செல் வாக்கை அன்பு இழக்கிறதில்லை.

பூரணமாக கணவனோடு ஒத்துப் போகக்கூடிய ஒரு தூய குணமுள்ளவள், முப்பது வருஷ முடிவில், ஆரம்பத்தில்விட அப் போதுதான் கணவனை வசீகரித்து விடுகிறாள்.

நெருப்புக்கு காதலை ஒப்பிடு வதில், ஒரு விஷயத்தில் ரொம்ப பொருத்தமாக இருக்கிறது. எவ் வளவுக்கு எவ்வளவு மும்முரமாக அவை எரிகின்றனவோ, அவ்வள வுக்கு, சீக்கிரம் அணைந்து விடு கின்றன.

* * *

ஐஸைப் போன்றது அழகு. நம் காலடி அதைக் காட்டிக்கொடுத்து விடுகிறது. யார்தான் இந்த வழவழப்பான தளத்தில் உறுதி யாக காலடிபோட்டுப் போக முடி யும்? ஆனால் அந்த தளத்தைப் பார்த்துவிட்டு நாம் வேகமாக நடந்து போகிறோம். அப்போது அதன் அபாயங்கள் அங்கே நமக்குத் தென்படுகின்றன. நாம் அவைகளை உதறிவிட முடிகிற தில்லை.

* * *

பெண்மை அழகு என்பது தான் என்ன? ஒரு தெய்வீக வெளி. அதனிடையே மனதின் சகல மிருது குணங்களும் பிரகாசிக்கின்றன. உடல் வசீகா மடைவானேன்? ஆத்மா உள்ளே இருந்து பிரகாசிக்கிறது. ஆகை யால்தான் ஆண்கள் ஒரு முகத் திற்கு கைதியாகி விடுகிறார்கள். ஏன் என்று அவர்களுக்கே தெரி யாது. சில வடிவங்கள் பிரகாச மாக இருந்த போதிலும், எந்த தனித்த வசீகரத்தினால், மனிதன் அவைகளைத் தாங்க முடிகிறதில்லை என்ற காரணம், அவர்களுக்கே தெரியாது.

முகத் தோற்றங்களின் அசைவுகளிலேதான் அழகின் தன்மை இருக்கிறது. சுமுகமான உணர்ச்சி வசப்பட்ட ஒரு முகத் தோற்றம், அதற்கு பழக்கப் பட்டுப்போன ஒரு தனியான, சிறந்த அசைவு அழகை ஏற்படுத்தி விடுகிறது. அந்த சிறந்த உணர்ச்சியால் ஏற்பட்ட இந்த அசைவு அழகு, ஒரு குண விசேஷத்தை அந்த முகத்தில் சித்திரித்து விடுகிறது.

* * *

அழகுப் பொருள் நிரந்தர மகிழ்ச்சிக் குறியது.

* * *

தூய்மை எவ்வளவு தூரம் அழகை உயர்த்தி விடுகிறது?

* * *

அன்போடு குடி இருக்கிறது அழகு.

* * *

ஒரு சித்திரம் வெளியிட்டுக் காட்ட முடியாத அம்சம்தான் அழகின் உயர் நிலை.

* * *

எப்போதும் பிரியமாக இருக்கும் மனைவி ஒருபோதும் கிழவியாகவே மாட்டாள். தாய், மனைவி இருவரின் பிரியமும் அநேக வசீகர அம்சங்களை உண்டாக்கும்; அல்லது வைத்துக்கொள்ளும். எப்போது? அதோடு, தாயின் கோபமோ மனைவியின் மண வாழ்க்கைத் தகராறோ சேராமல் இருந்தால்!

* * *

அழகே வந்து வழக்காடும் போது, எல்லா வாசாலகர்களும் அப்படியே ஊமையாகிவிடுகிறார்கள்.

'அல்பாயுஸ் கொடுங்கோன்மை' என்று அழகைப்பற்றி, சாக்ரடீஸ் சொல்லி இருக்கிறான்.

'இது இயற்கையின் சுதந்திரமல்லவா' என்பது பிளேடோ என்ற ஞானி கூறியது.

'உலகத்திலேயே சகல சிபார்சுக் கடிதங்களையும்விட சிறந்தது அழகு' என்றான் அரிஸ்டாடில்.

ஹோமர் சொன்னது, 'இயற்கையின் சிறந்த சீதனம்' என்பது.

கடவுள் கொடுத்த தனம்' என்று ஓவிட் சொல்லி இருக்கிறான்.

* * *

உயிருக்கே ஆபத்தான வெகுமதி அழகு!

* * *

பெண்ணை மன்னித்து விடலாம்—அவள் முகத்தைத் தவிர!

* * *

அழகும், துக்கமும் எப்போதும் கை கோர்த்துக்கொண்டு போகும்.

* * *

எங்கும் வியாபகமாகி இருப்பது அழகு. வசந்தத்தின் கணக்கற்ற புஷ்பங்களுக்கு அது இதழ் விரிக்கிறது. மரக்கிளைகள் நடுவிலே, புல் நுனியிலே அது அலையாடுகிறது. பூமி, கடல் ஆழங்களிலே அது வீசி ஓடுகிறது. வைரமணிகளிலே, பிரகாசமாகப் பளீரிடுகிறது. இந்தச் சிறு பொருள்கள் மட்டுமில்லை. கடல், மலை, மேகம், வானம், நக்ஷத்திரங்கள், உதய, அஸ்தமன சூரியன்கள் எல்லாம் அழகோடுதான் வழிகின்றன.

கலைஞான வரலாறு

(முன் கதைச் சுருக்கம்.)

[கருப்பூர் என்னும் கிராமத்தில் சிவஞான தேசிகன் என்னும் பிராமணனுக்கு சுவாமிநாதன் என்ற ஒரு மகன். சகல சாஸ்திரங்களிலும் தேர்ந்தோங்கிய அம்மறைமகன், பத்தொன்பதாம் வயதில் ஞான மேலீட்டினால், தாய் தந்தையர் செய்வித்த மண ஏற்பாடுகளை வெறுத்து, பெற்றோர் அறியாமல் முனிவற்கிடமான வனத்தையடைந்து, அங்கொரு முனிவரையடுத்து, ஞான உபதேசம் செய்து அருளும்படி அவரை வேண்டினன். முதலில் முனிவர் அவனைத் தடுத்து இல்லறத்தினின்றும் நற்கதி அடைவதற்கு மார்க்கமுண்டு என பல உரைத்தும், துறவறத்தையே அம்மறைமகன் வேண்ட, முனிவரும் ஞானம் உதயமாகும் சில உபதேசங்கள் செய்து தனது இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்றார். மகன் வரவைக் காணாத தாய் தந்தையர்கள், தவித்துத் துயரில் ஆழ்ந்தனர்.

எனினும் ஒருவாறு தேறி, தங்கள் இல்லத்தை விடுத்து, மகனைத் தேடி, வனவழி சென்றனர். வனவழியில் நெடுந்தூரத்தில், ஆசிரமம் ஒன்று அவர்களுக்குத் தென்படவே, அங்கு சென்றனர். அந்த ஆசிரமத்தில் எழுந்தருளியிருந்த முனிபுங்கவர், வந்தடைந்த தம்பதிகளின் மனதைத் தேற்றுவதற்காக, முனிவர் பெருமானுன அகஸ்திய மாமுனி உபதேசம் செய்த பார்வதிதேவியின் தவ வரலாற்றை அவர்களுக்குச் சொல்லுகின்றார்.

தவத்திலிருந்த மலைமன்னன் முன் உமாதேவி மூன்று வயது குழந்தையாக உற்பவிக்கின்றாள். அதைக் கண்டு மலைமன்னன் மகிழ்ச்சி கொண்டு குழந்தையை எடுத்துக்கொண்டு வீடு போய் செல்வமாய் வளர்க்கிறான். ஐந்தாம் வயதில் பார்வதி என்று பெயர் வைத்தான். பதிமூன்று வயதான பொழுது பார்வதி பரமேசுவரனைக் குறித்துத் தவம் செய்ய வேண்டுமென்று தந்தையை வேண்டினள். தந்தையும் அதற்கிணங்கி அவளை மலைச்சாரலில் தவம் புரிந்த வசிஷ்ட முனிவரிடம் கூட்டிச் செல்லுகிறார். வசிஷ்டர் பார்வதிக்கு தவ முறையைச் சொல்ல அவள் அதன்படியே தவம் செய்கின்றாள். தவத்தின் நடுவே சிவபெருமான் ஒரு கிழவன் வேடம் தரித்து வந்து பார்வதியை சோதனை செய்கிறார். பரமசிவனைத் தூற்றுகிறார். பார்வதி கோபங்கொண்டு கிழவனை வெளியே போகச் சொல்லுகிறாள். கிழவேடந்தரித்த சிவபெருமான் ரிஷபாரூடராக, பார்வதிக்கு, காட்சி அளித்து, தேவியை மணம் முடித்துக்கொள்ளுவதாக வாக்கு கொடுத்து, திருமணம் செய்துகொள்ளுகிறார். பார்வதி தவம் வெற்றியுடன் முடிந்ததும் ஜயவதியை முனிவர், ஆசிரமத்தில் விட்டுச்

சென்றனள். அவள் ஆசிரமத்தில் தனியாக பிரிவாற்றாமை கொண்டு தவித்துக் கொண்டிருந்தாள் என்ற கதையை முனிவர் தம்பதிகளுக்குச் சொன்னார்.

இப்படியிருக்க, சுவாமிநாதன் முனிவர் சொன்னபடி சாதனைகளைச் செய்து கொண்டிருந்தான். தவ வலிமை அதிகரிக்கவே தனியாசிரமம் ஏற்படுத்த உத்தேசித்தான். அப்பொழுது உமா என்ற பெண் அங்கு வந்து தான் சுவாமிநாதனுக்காகத் தீர்மானிக்கப்பட்ட மணப்பெண் என்றும் ஆனால் தான் அவனை மணப்பதற்காக வரவில்லை என்றும், தவசியைத் தேடி தவம் புரியவந்த இடத்தில் வினைப்பயனாக அவனைச் சந்தித்ததாகவும் சொன்னாள்.]

சுவாமிநாதனுக்கு முன் மணம் செய்விப்பதற்கு நிச்சயித்த உமாவானவள், சுவாமிநாதனும் முனிவரும் இருக்கும் வனத்தை யடுத்து அவர்களைச் சந்தித்து, நிச்சயித்த தன்னை மணம் செய்து கொள்ளாமல் விடுத்து வந்த சுவாமிநாதனைக் குறித்துப் பேசிய சிலவற்றை சொன்னேமல்லவா? அவள் அப்படித் திறமையுடன் பேசிய வார்த்தைகளை முனிவர் கேட்டு மிகுந்த சந்தோஷமடைந்து உமாவைப் பார்த்துச் சொல்கிறார்.

"உமா! உன் கல்வித் திறமைக்கும், கற்பென்பது இன்னதென்று அறிந்து அதைக் காக்கும் பொருட்டு நீ கொண்டுள்ள தீரத்திற்கும் மெச்சினேன். அம்மா! பொறுமையோடிரு. எதற்கும் அஞ்சாதே! வா, இப்படி உட்காரு."

அதற்கிணங்கிய உமாவும், முனிவர் குறிப்பிட்ட இடத்தில் உட்கார்ந்தனள். பிறகு முனிவர் சுவாமிநாதனை நோக்கிச் சொல்லுகிறார்.

"சுவாமிநாதா! இதோ! என்னைப் பார், என் கவலைப்படுகிறாய்? நான் இதுவரை சொல்லிவந்த ஞானோபதேசம் யாவையும் மறைய சிறிது நேரத்தில் காளமேகங்கள் கூடிப் பொழிவதுபோல் திறமையுடன் பேசிய இப் புண்யவதியை மணந்துகொண்டு இல்லறம் நடத்தும் பாக்கியத்தை நீ இழந்துவந்தது எனக்கும் ஆச்சரியமாகவே இருக்கின்றது. தக்க மனையாளுடன் கூடி இல்லறம் நடத்துவோர் சர்வ சுக, யோக போக பாக்கியங்களையும் அனுபவித்து முடிவில் மோட்ச சாம்ராஜ்யத்தையும் அடைவார்கள். துறவறத்திலோ ஒரே பாக்கியத்தைத்தான் அடைய முடியும். அதிலும் சதா காலமும் சர்வ ஜாக்கிரதையோடு மனம் எழா வண்ணம் இருந்து துறவரத்தைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும். ஏதோ ஒன்றில் மறந்தாற்போல் சிறிதளவு ஆசையைத் தரும் மனம் எழும்படி இடம் விட்ட மாத்திரத்தில் முன் அநேக தவம் செய்திருக்கினும் மறைந்தொழியும். இல்லறத்திற்கோ இத்தகைய கடினமான கட்டு திட்டங்கள் கிடையாது.

"அநேகமாய் உமா சொன்னதுபோல், பிழைப்பதற்கு வழியற்ற சிலர், முனிவர் போன்ற வேஷங்களைத் தரித்து, ஊர்ப்பக்கமுள்ள ஓர் வனத்திலோ ஆலயங்களிலோ மடங்களிலோ மான் தோல் முதலிய ஆசனங்களில் உட்கார்ந்து கொண்டு, 'குழந்தைகளா! ஜனங்களா! முதலில் நான் யார் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்! பொருளைப் பெரிதாய் நினைக்காதீர்கள்! நாம் சாகும்பொழுது ஒன்றும் கூட வரப்போவதில்லை! உங்களுக்குள்ள பாக்கியங்களை யெல்லாம் தர்மத்திற்குச் செலவு செய்யுங்கள்! பெரிய ஆத்மஞானமடைந்த தபோதனர்களுக்கு ஓத்தாசை செய்யுங்கள்! ஞானக் கண்ணால் பார்த்தால் எல்லாம் மாயைதான்! ஒன்றுமில்லை. மனைவி மக்களை நம்பாதீர்கள். அதுதான் உங்களுக்கு எமன். உடனே இல்லறத்தைவிட்டு துறவரத்தையடைய முயலுங்கள். நான் உங்களிடத்திலிருந்து பொருளை அடைய விரும்பவில்லை. இந்த நாய்க்கு பொருள் எதற்கு? என்னையடுத்து சிஷ்யர்களாய் இருப்பவர்களுக்கு அநேக நன்மைகளைச் செய்வதற்கென்றே இங்கு வந்துளேன். தவப்பலத்தால் ரசமணி முடிக்கும் சித்தை யறிந்தவன் நான். என்னை சாமான்யனென்று நினைக்காதீர்கள்.

ரசமணி முடித்தால் என்ன ஆகும், என்று நினைப்பீர்கள். இது தான் ககன மாத்திரை. இம்மணியை ஒருவன் முடித்துக் கொள்வானாயின் எட்டிக்காயையும் கரும்புபோல் தின்னலாம். தரையில் நடப்பதுபோல் ஜலத்திலும் நடக்கலாம். பல ராஜ்யத்தை வசியம் செய்து ஆளலாம். மதம் பொருந்திய யானை முதல் கொடிய மிருகங்களையும் தழுவி விளையாடலாம். மணலையும் கயிறுபோல் திரிக்கலாம். மணலை வேகச் செய்து அன்னமாயும் புசிக்கலாம். ககனமார்க்கத்திற் சென்று சகல அண்டங்களையும் பார்க்கலாம். யார் கண்ணிலும் அகப்படாமல் உலகத்தில் இருக்கலாம். பெரிய அரசர்களையும் அடிமையாக்கிக் கொள்ளலாம். இந்த சரீரத்திலிருந்து ஜீவனை மற்றொரு சரீரத்தில் புகச் செய்தும் விளையாடலாம். இரும்பு முதலிய லோகங்களை 108 யாத்துக்குக் குறையாமல் தங்கமாகவும் செய்யலாம். கடவுளுக்குச் சமானமாயும் வாழலாம்.'

"சுவாமிநாதா, இப்படிப்பட்ட பல வார்த்தைகளைச் சொல்லி பலரை ஏமாற்றுவோர்கள் கடைசியாக முன் சொல்லியதில் ஒன்று மாத்திரம் செய்யலாம். அதாவது யார் கண்ணிலும் அகப்படாமல் உலகத்தில் இருக்கலாம். இதுதான் அவர்கள் கடைசியாகச் செய்வது.

"குழந்தாய்! பின்னும் அக் கபட சன்யாசிகள் பல வஞ்சகமான வார்த்தைகளால் இல்லறத்தார்களில் சிலரை மயக்கி அவர்கள் உதவியால் ஓர் உன்னதமான ஆசிரமத்தை அமைத்துக்கொண்டு, அவ்வாசிரமத்தின் சுற்றுப் புரங்களில் தென்னை, மா, கமுகு முதலிய அழகிய

மரங்களையும் செடி கொடிகளையும் அமைத்துக்கொண்டு 'எனக்குப் பொருள் ஏன்?' என்று சொல்லிக்கொண்டே, 'நான் இருக்குமிடத்தில் எப்பொழுதும் அன்னதானம் நடக்கவேண்டும். வேண்டுமானால் அதற்கு மாத்திரம் உதவி செய்யுங்கள்' என்று சொல்ல அப்படியே சிலர் ஏமாந்து சாமியாருக்கு உணவுக்கு வேண்டிய பல சாமான்களை யும் முனிவர் ஆசிரமத்தில் வந்து குவியும்படி செய்ய முனிவரும் அன்னதானம் செய்வதுபோல் மற்றும் பிழைக்க வழியற்று மனைவி மக்களை விட்டு கபட வேஷம் போட்டுக்கொண்டு திரியும் பலருக்கும் அன்னமிட்டு, முனிவரும் சுகமாய் ருசி தரத்தக்க பதார்த்த வகை களுடன் உண்டு களிப்பார்.

"அதுவுமில்லாமல் இல்லறத்தில் ஏமாந்த பேர்வழிகள் ரிஷீசுவரருக்கு இரண்டு வேளையும் பால் தரக்கூடிய பசுக்களையும் தானமாக முனிவருக்கு கொண்டுபோய்க் கொடுப்பார்கள். அப்பசுக் களுக்கு வேண்டிய உணவுங்கூட மற்றும் சிலர் கொடுக்க பின்னும் சாமியாரின் அந்தரங்க சிஷ்யரும் சில உறவினரும் அங்கிருந்து கொண்டு பக்குவமாய் சில மக்களிடமிருந்து சகல சுகங்களுக்கு வேண்டிய ஒவ்வொரு வஸ்துக்களையும் தாங்கிக்கொள்வார்கள். முனிவர் மாத்திரம் இதெல்லாம் கேட்கமாட்டார்."

"அப்படிப் பலர் கொண்டுவந்து குவிக்கும் வஸ்துக்களை எல்லாம் ரிஷீச்வரர் பார்க்கும் பொழுதெல்லாம், 'இது எதற்கு? எனக்கு வேண்டாம், எனக்குப் பெரும் தொல்லையாய்ப் போய்விட்டது. இதற்குத்தான் சொந்த மனுஷர்களையோ, சிஷ்யர்களையோ நெருக்க மாய் சேர்க்கக் கூடாது. ஆசிரமத்தில் இருப்பவர்கள் ஏதேனும் உங்களைக் கேட்டார்களோ? என்றும் கேட்பார்.

"அதற்குக் காணிக்கை கொடுப்பவர்கள், 'இல்லை சுவாமி! பாபம்! அவர்கள் ஏன் கேட்கிறார்கள். அடியேன் மனப்பூர்வமாக தங்களுக்கு இதை கொடுக்க வந்திருக்கிறேன். தடை செய்யாமல் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பார்கள்.'

"சுவாமியாரும் வெறுத்தவர் போல், மெள்ள நழுவி தனது ஆசனத்தில் உட்கார்ந்து கொள்வார். இவர் உட்காரும் ஆசனத்திற் கும் சில பிரபுக்கள் இலவம் பஞ்சுகளடைத்த பட்டு வஸ்திரத்தால் செய்த அல்லது நல்ல துணிகளால் ஆக்கி சாய்வதற்கும், உட்கார்வதற்கும், படுப்பதற்கும் தலையணை முதலிய மெத்தைகளையும் தைத்துக் கொடுப்பார்கள். முனிவர், சாமியார், ரிஷி, சன்யாசி இதுகளில் ஏதோ பெயர் வைத்துக்கொண்டு மயக்கும் இத்துறவாத் தார்கள் சுகமாய் அப்படிப்பட்ட ஆசனங்களில் இருந்துகொண்டு சொல் லும் வேதாந்தங்களுக்கோ அளவேயில்லை.

"சுவாமிநாதா, இல்லத்தை வெறுத்து முற்றும் துறந்த முனிவர்களாய் இருப்பார்களாயின் அப்படிப்பட்ட சுகங்கள் எதற்கு? ஆனால் இப்படிப்பட்ட ஆசாமிகளுக்குத்தான் சாதக பாவத்தில் சன்யாச யோகமென்று சொல்வது.

"உண்மையான சன்யாசியாயின், அவர்கட்கு யோகம் எதற்கு? துறவறத்தில் தக்க ஞானம் உள்ளவனாயின் இல்லறத்தார்கள் வசிக்கும் இடங்களிலோ அநேகமாய் ஜனங்கள் நடமாட்டமுள்ள ஆலயம், மடம், முதலிய இடங்களிலோ வசிக்க ஒருபோதும் பிரியப்படமாட்டான். இல்லறத்தார்களின் பழக்க வழக்கங்களையும் வெறுத்து கொடிய மிருகங்கள் சஞ்சரிக்கத் தக்க இவ்வனத்தைப் போன்ற இடங்களில் நிர்மலமாய் தனித்து இருப்பார்கள். அப்படிப் பட்டவர்களுக்கு அறுசுவை கூடிய உணவு எதற்கு? காற்றில் வரும், சருகுகளே தக்க உணவாகுமல்லவா?

"முன் சொல்லிய கபட சன்யாசிகளில் சிலர் சொல்லுவார்கள். 'நான் இன்னும் சருகுண்டு வனங்களிலிருந்து தவஞ் செய்வதற்கான பெரிய படிக்கு வரவில்லை யென்று' முன் கூறிய சகல சுகத்தையும் அடைய ஆசை வைத்திருக்கும் வரை அப்பெரிய பதவி அவர் களுக்கு எப்படிக் கிடைக்கும்? ஒருக்காலும் முடியாது. மனத் திலுள்ள அழுக்கை அறுத்தெரியாத மவுன ஞான யோகிகள் தனித்து ஓர் ஆசிரமம் அமைத்துக் கொண்டு ஆளும் அம்புகளுட னும் எத்தனை காலந்தான் இருந்தும் பலன் என்ன? முடிவில் அவர்கள் இரண்டிற்கும் நடுவில் எதிலும் கெட்டவர்களாகி இதிலும் தாழ்ந்த ஜனங்கள் எடுத்துத் தவிக்க வேண்டும்.

"குழந்தாய்! இல்லறத்திற்கு வேண்டும் சகல வல்லபமுள்ள இப்புண்யவதியை மணம் செய்து மகிழ்வுடன் வாழாது நீ ஓடிவந்த தைப் பார்க்கின் முன் உமா சொன்னது போல் ஒன்றுக்கும் உதவாத கபட முனிவரிடத்தில்தான் உபதேசம் பெற்றுப் போலும்.

"சுவாமிநாதா, இதில் இன்னொரு மார்க்கமும் சொல்லுகிறேன் கேள், இல்லறத்தார்களுடன் பழகிக்கொண்டே ஆத்ம ஞானத் துடன் துறவறச் செயல்களையும் கையாண்டு பெருங்கீர்த்திகளையும் அடைந்து மறுமையில் மோட்சத்தையும் பெறலாம். அது எப்படி யென்றால் :—

"இல்லறத்தார்கள் வசிக்கும் இடத்திலேயே தனித்த ஒரு ஆசிரமத்தை அமைத்துக் கொண்டு நமது மனைவி, மக்கள், பூமி, பொருள் என்று அதிக பற்றில்லாமல், பலருக்கும் உதவியாகக்கூடிய பெரிய காரியங்களைச் செய்து உடுப்பதற்கு வேண்டிய சிறு ஆடை

யும், சரீரம் கெடாமல் இருப்பதற்கு வேண்டிய சிறு உணவுகளையும் காலத்தின்படி உண்டு பூசித்தும் காலந்தவறாதபடி மவுன யோகத்திலிருந்து சத்தியமும், சமத்துவமும், சாந்தமுந்தான் உலகத்தில் முக்கியமானதென்று தெரிந்து அதைக் கைக்கொண்டு, சாந்தம் சமத்துவம், சத்தியம் என்னும் பெருமை பொருந்தியவாளைக் கொண்டு அரசன் முதலிய எத்தகையோனாயினும் சத்தியத்திற்கு மாறுதலாய் நடந்து தேசத்திற்குக் கெடுதி செய்வானாயின் தைரியத்துடன் முன்கூறிய வாளாயுதத்தைக் கொண்டு எதிர்த்துச் ஜெயமுண்டாக்கி, தான் அடைந்த ஜெயத்திலுள்ள பொருள்களை எளியவர்களுக்கும் தியாகம் செய்யவேண்டும்.

"கர்மாக்களால் மயங்கி அடிமைப்பட்டுக் கிடக்கும் தேசமக்களுக்கெல்லாம் புத்துயிரளித்து அறிவை விருத்தியடையச் செய்து ரோஷத்துடன் ஒவ்வொருவனின் சோம்பலையும் நீக்கி, பேதமில்லாமல் தினந் தினமும் குறித்த காலம் வரை உழைத்து கர்மங்களால் உள்ள அடிமைத் தனத்தை நீக்கி ஆறுதலுடன் வாழும் மார்க்கங்களை விடா முயற்சியுடன் உபதேசித்து வருவதுடன் தனது ஆசிரமத்திலோ அல்லது இல்லத்திலோ தன்னுடனிருந்து சிஷ்யனாயிருக்க ஒருவன் ஆசைப்படினும் அவனையும் சேர்த்து சோம்பலில்லாமல் இருக்கச் செய்து பலருக்கு உதவியான பல தொழில்களைத் தினமும் செய்யும் படியும் கட்டளையிட்டு தாழ்ந்தவர்கள் வேறு, நாம் வேறு, என்னும் நினைவு அவர்களுக்கு அறவே யில்லாமற் செய்து கேவலமானதொழில் அது பலருக்கு உதவியாயிருக்கின் தன்னைச் சேர்ந்த அச் சிஷ்யர்களைக்கொண்டு செய்யும்படிச் சொல்லியும் இதில் நாணுவானாயின் அத்தகையோனை விலக்கியும் இத்தகைய பலருக்கும் உதவியாக தியாகங்களைச் செய்பவன் இல்லற துறவரத்தாரிலும் மேலான சித்தனாம்.

"ஆதலின் சுவாமிநாதா! நீ மகா உன்னத குணங்களுள்ள இந்த உமாவை மணம் செய்து கொண்டு துறவரத்தில் ஆசையிருக்கினும் இல்லற துறவரத்திலும் மேலான முன் கூறிய வகைகளில் ஈடுபட்டு உன் வாழ்நாளை அழகாக்கிக் கொள்வாயாக."

இப்படிச் சொன்ன முனிவரின் வார்த்தைகளை பொறுமையுடன் கேட்டு வந்த உமா, முனிவரை நோக்கி "சுவாமி! நான் சொல்லிய வார்த்தைகளையும் தாங்கள் சொல்லிவந்த பொன் போன்ற சொற்களையும் கேட்டு வந்த உங்கள் சிஷ்யருக்கு மிகுந்த களைப்புற்றதுபோல் தோன்றுகிறது. ஏனெனில், பாவம்! பாருங்கள்! உடலெல்லாம் வேர்த்து விழுகிறது. நான் போய்க் கொஞ்சம் தீர்த்தமாவது கொண்டுவந்து கொடுக்கட்டுமா?" என்றனள்.

அதற்கு முனிவர் "குழந்தாய்! நீ, எதிலும் திறமையுள்ளவ ளென்று நினைத்தேன். நீ சொல்லும் வார்த்தைகளில் சில விளையாட்

டுத்தனமாக வார்த்தைகளும் வெந்த புண்ணில் கோல் இடுவதுபோல் இருக்கிறது. அத்தகைய வார்த்தைகளை இனி ஆய்ந்தோய்ந்து பேசு. கவலைப்படாதே! தீர்த்தம் கொண்டுவந்து சுவாமிநாதனுக்குக் கொடு" என்றனர்.

உடனே உமாவும் எழுந்து தீர்த்தம் கொண்டு வருவதற்குச் சென்றாள். உமாவின் நடையையும் முகக்குறிப்பையும் பார்க்கின் முனிவர் சொல்லிய அவ்வார்த்தைகள் தன்னைச் சுட்டது போலவும், தான் பேசியதில் தவறான் வார்த்தைகள் எது என்று யோசித்து என்ன பிசகு செய்தோம், என்று பயந்து, பின் என்ன நடக்கும் என்ற கவலையுடன் பெண் புத்தி பின் புத்தி என்று சிலர் சொல்லுவதை நிரூபித்து விட்டோமோ என்றும் இன்னும் சில சிந்தனையோடு நடப்பவள்போல் தோன்றியது.

இது இப்படியிருக்க, மற்றொரு முனிவர் ஜயவதியைப்பற்றி சொல்லிவந்தாரல்லவா? அதைப்பற்றிச்சில சொல்லுவோம். "சிவஞான தேசிகரே, ஜயவதி இரவில் ஓர் பாறையில் உட்கார்ந்து சந்திரனையும் நட்சத்திரங்களையும் குறித்து பல வருத்தங்களையும் தனக்குத்தானே சொல்லிக் கொண்டாளல்லவா? அப்படியே மறு தினமும் இரவில் முன் சென்ற காலத்தின்படி பாறைக்குச் சென்று உட்கார்ந்து சிந்திக்கத் தொடங்கினாள். திடீரென தான் எதிர் பார்க்காத ஆடவனைக் கண்டாள். யார் என்று கேட்பதற்கு வாயெடுத்தாள். அதற்குள் இன்னானெனத் தெரிந்து கொண்டாள் போலும். தான் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்தும் எழுந்திருப்பதற்கு முயற்சித்தாள். முடியவில்லை. இவள் நிலையை கண்ட அப்புருஷனும் கையை அமர்த்தினான்.

(தொடரும்.)

இந்தியன் பாங்க் லிமிடெட்

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ், நார்த் பீச் ரோட், மதராஸ்.

தென்னிந்தியா வெங்கும் கிளை ஆபீசுகள்

அதிகார மூலதனம்	60,00,000—0—0
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	47,92,800—0—0
செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 100 ஷேர்களில் ரூ. 50 வீதம் செலுத்தப்பட்ட 20,000 ஷேர்கள்	10,00,000—0—0
ரூ. 100 ஷேர்களில் 10 வீதம் செலுத்தப்பட்ட 27,928 ஷேர்கள்	2,79,280—0—0
ரிஸர்வ் பண்டும், இன்னும் மற்ற பண்டுகளும்	18,60,147—0—0

செக்ரடரி: N. கோபால அய்யர்

உப்பும்—புளிப்பும்

போன்மலை: வி. பாலாம்பாள்

கவி சுப்ரமண்ய பாரதி சென்னையில் சுதேச மித்திரன் ஆபீசில் வேலை பார்த்து வரும்பொழுது அவரும் அவருடைய நண்பர் ஸ்ரீ ஜி. இராமானுஜலு நாயுடுவும் அடிக்கடி கடற்கரைக்கு போவது வழக்கமாம். அங்கு ஒரு நாள் கொடிமுந்திரிப் பழம் வாங்கினார்களாம். அதன் புளிப்பு பல்லைக் கொட்டுவது போலிருந்ததாம். பழம் விற்றவன் போய்விட்டான். பழத்தில் ரஸமிருப்பதை இருவரும் அருந்தவேண்டுமென்று ஆவலுற்றனர். ஆனால் அதிலிருந்த புளிப்பு கிட்டத்தில் அணுகவிடவில்லை.

இந்த சந்தர்ப்பத்தில், கடற்கரையோரத்திற்கு பாரதியார் சென்று கடலின் உப்பு நீரை ஒரு சிறிது எடுத்து அந்தப்புளிப் பழத்துடன் சேர்த்து விழுங்கி நண்பர் நாயுடுவையும் அவ்வண்ணமே செய்து பார்க்கத்தூண்டினராம். பழத்தை உண்ணவும் அதன் சாரத்தை உட்கொள்ளவும் பிறகு சாத்தியமாயிற்று.

அப்பொழுது பாரதியார் "நம் சமுதாய வாழ்க்கைப் பழங்களில், புளிப்பு கலந்திருக்கலாம். பழத்தையே விட்டெறிந்து விட்டு அதன் சாரத்தையும் அனுபவியாமல், வாளாவிருப்பது பலருக்குத் தோன்றும் ஜீவனற்ற சுலபமான வழி. நம் நாட்டிலேயே கிடைக்கும் தேசபக்தி என்பது போன்ற உப்பு நிறைந்த கடல் வெள்ளத்துடன், புளிப்புள்ள வாழ்க்கையைக் கலந்து அதன் புளிப்பை மாற்றி, ரஸத்தை அனுபவிப்பதே உசிதம்" என்றாராம்.

பாரதியாரும் அவர் போன்றவரும், தாமும் வாழ்பவர், பிறர் வாழ்க்கையின் புளிப்பையும் மாற்றுபவர், பிறரையும்வாழச் செய்பவர்.

பாரதியார் பெயர் நீடூழி வாழ்க !

பாடரூஸ்கி

(வே, ம.)

மகாத்மா காந்திக்கு போலிஷ் மாஜி பிரஸிடென்டான ஒரு கிழ

வர், இந்தியாவின் அனுதாபத்தை வேண்டித் தந்தி கொடுத்திருந்தார். மகாத்மாவும் பதில் அனுதாபத் தந்தி ஒன்று கொடுத்தார்.

அந்தப் போலந்து கிழவர் யார்? இக்னேஷ் ஜான் பாடரூஸ்கி என்பவர்தான்.

அவருடைய சரித்திரம் என்ன?

அவர் சங்கீத சூரன், விடுதலை வீரன்.

ஒரு போலீஷ் குடியானவனுடைய மகன். அப்போது 100 வருஷங்களாக ருஷியாவின் அடிமையாக இருந்த போலிஷ் பிரதேசத்தில் பிறந்தார். ருஷியா இழைத்த கொடுமைகளைக் குறித்து, இவர் ஆட்சேபணை செய்தார்; ஜபம் செய்வது போல் முணு முணுத்தார். ஸைபீரியாவிற்கு இவரை நாடு கடத்தினர்கள். பின்பு, 1877-ல் (இவருக்கு வயது 17) 'ஓடிப்போ' என்று கல்தா கொடுத்தார்கள்.

சங்கீத சுற்றுப் பிரயாணத்தைத் துவக்கினர். அப்போது இவர் யாரிடத்திலும் சிட்சை பெற்றிருக்க வில்லை. சங்கீத சாஸ்திரத்திற்கு, கற்பனை சாமர்த்தியம் ஈடாக மாட்டாது. சங்கீத உணர்ச்சி—பிரபுபோல் கச்சேரி செய்வதற்கு — பதில்ாக மாட்டாது.

ஒரு கவிஞர் சொல்வது போல "பாடத் திறமை படைத்தவன் பாடுவான். திறமை யற்றவன் சொல்லிக்கொடுப்பான்."

சிட்சை யில்லாமல், பாடரூஸ்கி, ஐந்து வருஷங்கள் பாடித் திரிந்தும் பயன்படவில்லை. ஆசையெல்லாம் மண்ணாய்ப் போய் விட்டது.

பல்லைக் கடித்துக் கொண்டு, சிட்சை என்ற தூக்கத்தில் தனது திமிர் கொண்ட கழுத்தை இரண்டு வருஷம் மாட்டிக்கொண்டார். சிட்சையில்லையென்ற

குறையும் நிவர்த்தியாகி விட்டது.

பின்பு, வெகு விரைவாக, பியானோ வாசிப்பதில் நிகரற்றவர் என்ற பிரசித்தி அடைந்து விட்டார். அவருடைய தோற்றம் ராஜாங்கமானது. உயர்ந்த வேறு உலகத்திய ரூபம். கவிக்கு உரித்தான கண்கள். நடை, நொடி, பாவனை எல்லாம் மகத்தான அந்தஸ்த்தைப் படைத்திருந்தன. பியானோ வாத்தியம் வாசிப்பதில் உலகத்திலேயே நிகரற்றவர் என்று உலகம் முழுதுமே ஒத்துக் கொண்டு விட்டது.

இவர் கச்சேரி நடக்க வேண்டிய மண்டபத்திற்குள் நுழைவதற்கு முன்னமேயே, மண்டபம் நிறைந்து விடும். இவர் நுழைந்ததும், பைத்தியம், ஆவேசம் பிடித்தது போல், கரகோஷத்துடன் ஜனங்கள் இவரை வரவேற்பார்கள்.

இவர் ஸ்தானத்தில் போய் அமர்ந்ததும், மூச்சையே அடக்கிக்கொண்டு விடுவார்கள். நிசப்தம் அரசு புரியும். உலகமே நின்று கேட்கும். காலம் தேசம் வர்த்தமானம், எல்லாம் மறைந்து விடும். அந்த சங்கீதப் பிரளயத்தில் லயிக்க வேண்டியதுதான். அது ஒன்றுதான் வாஸ்தவ உலகம், என்ற உணர்ச்சியில் மூழ்கிக் கிடப்பார்கள். பாவசத்தில் ஸ்திரீ வர்க்கம் உடல் நடுக்கம் கொண்டு விடும்.

1914ம் வருஷத்தில் இவர் நிலைமை என்ன? 25 வருஷங்களாக—இந்தவிதமாக — சங்கீத சிகரத்தில்—கான மந்திரங்களின் பூஜாமூர்த்தியாகவும் கான மண்டபங்களின் சிம்மமாகவும் விளங்கி நின்றார்.

1914-ம் வருஷத்தில், மகா யுத்தம் ஆரம்பமாயிற்று. நேச தேசங்கள் ஜயித்தால்தான் போலந்துக்கு சுயராஜ்யம் என்று பாடகர் கண்டு கொண்டார். 150 வருஷங்களாக நீடித்து வந்த அடிமைத்தனத்திலிருந்து விமோசன காலம் கிட்டிவிட்டதென்பதை உணர்ந்தார்.

பியானோவை ஒதுக்கி வைத்தார். தேசாபிமானத்தை ஆலிங்கனம் செய்து கொண்டார். புரட்சிகரமாக மாறினார்.

ஜ்வாலைபோல் நடமாடினார். உணர்ச்சியற்ற போலிஷ்காரருக்கு ஜ்வலித்திடும் தேசாபிமானத்தை ஊட்டினார். கந்தையாய்ப்போன போலந்திலிருந்து வெளியே, அயல் நாடுகளில் வசித்து வந்த லட்சக் கணக்கான போலிஷ்காரரை இயக்கத்தில் சேர்த்தார். தீரப்போலந்தின் உக்கிரத் தலைவராக விளங்கினார். அமெரிக்க சேனையில் இரண்டு லட்சத்தி இருபதினாயிரம் போலிஷ்காரரைச் சேர்த்தார். பிரான்சு தேசத்தில் முப்பதினாயிரம் போலிஷ்காரரை சேனையில் சேர்த்தார்.

அமெரிக்க பிரெஸிடென்டு வில்ஸனுடன் நெருங்கிய சம்பந்தம் வைத்துக்கொண்டார். ஆகையினால்—தான்—யுத்தம் முடிந்தபோது-பிரெஸிடென்டு வில்ஸன் நியமித்த 14 'பாயிண்டு'களில், 13-ஆவது பாயிண்டு பின் வருமாறு அமைக்கப்பட்டிருந்தது:—"ஒரு சுதந்திர போலிஷ் நாடு அமைக்கப்படவேண்டும். நிச்சய

மாக போலிஷ் ஜனங்கள்தான் வசித்து வருகிறார்கள் என்ற பிரதேசங்களெல்லாம் இந்தப் போலிஷ் நாட்டில் சேர்க்கப்பட வேண்டும். சமுத்திரத்திற்கு தாராளமான, பத்திரமான வசதி இந்த நாட்டிற்குச் செய்து கொடுக்கப்பட வேண்டும். இந்த நாட்டினுடைய அரசியல் சுதந்திரமும், பொருளாதார சுதந்திரமும் துண்டுபடாமல், இந்த விஸ் தீர்மானத்தின் பாதுகாப்பும், சகல தேசங்களுடைய ஒப்பந்தப்படி காப்பாற்றப்பட வேண்டும்" என்று ஏற்பட்டது.

போலந்தை யுத்தத்தில் ஜெர்மானியர் இரும்புப் பிடிபோல் பிடித்துக் கொண்டிருந்தார்கள். ஜெர்மன் கவர்னர் ஜெனரல் பேஸலர் என்பவர், ஜெர்மன் சார்பில் போர் புரியும்படி 30,000 போலீஷ் துருப்புகளைக் கட்டளையிட்டார். அவர்களுக்கு சுதந்திர தாகம் பிடித்து விட்டது; அடிமையின் மோகம் தொலைந்து விட்டது. அவர்கள் மறுத்தார்கள். அந்த 30,000 பேர்களையும் அந்த ஜெர்மன் பேஸலர் சுட்டுக் கொன்று விட்டான்!

இப்படியெல்லாம் நிகழ்ந்தது; கடைசியில் யுத்தம் ஓய்ந்தது. ஜெர்மனி சரண் புகுந்தது.

ஒரு காட்சி! விஸ்லோ நதி தீரம். வார்ஸா நகரம். பிரஸித்தி பெற்ற வான சாஸ்திரி காபேர்னிகஸினுடைய சிலையின் மீது சூரியன் ஜ்வலித்திடும் கிரணங்களை வாரி எரிகிறான். தெருக்கள் ஜனமயம். விடுதலை வீரருடைய வருகையை எதிர்பார்த்து நிற்கிறார்கள் எல்லோரும். கலையை பலி கொடுத்த கலை வீரன், தனது வாழ்க்கையையே மாற்றியவன், தனது செல்வம் முழுவதையும் தியாகம் செய்தவன் — வல்லரசுகளுடன் பாரிஸ் நகரத்தில் போராடி தனது நாட்டிற்குச் சுதந்திரத்தைப் பிடித்துக் கொண்டு வருபவன் வரப் போகிறான்! இவர்களுடைய தேசம், பிரஸித்தி பெற்ற நன்னாடு, 150 வருஷம் அடிமையாக உழன்ற நாடு — பல பலிகளைக் கொடுத்த நாடு — கட்டுக் கடங்காத ஆனந்தத்தில் தாண்டவமாடிற்று.

ஒரு கம்பீரமான உருவம் கதவண்டை வந்தது. "பாடரூஸ்கிக்கு ஜே!" என்ற நாதம் வானைப் பிளந்தது. உத்ஸாகப் பைத்தியமே அந்தப் பெரும் திரளைப் பிடித்துக் கொண்டது. ஆண்கள் தொப்பிகளை ஆகாயத்தில் எறிந்தார்கள். ஸ்திரீகள் முன்னால் பாய்ந்து சென்றார்கள். மண்டியிட்டு விடுதலை வீரனுடைய ஆடையின் நுனியை முத்த மிடுவதற்கு அப்படிப் பாய்ந்து சென்றார்கள். ஏன்? தேவாம்ருதம் போன்ற சுதந்திரத்தைப் போலந்து அடைந்து விட்டது!

அந்தப்போலந்தை இன்றைக்கு ஜெர்மனி, மீண்டும் கவ்விக் கொண்டிருக்கிறது!

சரித்திரம்

போலந்து தேசம்

கேள்வி:—போலந்து எவ்வளவு பெரிது?

பதில்:—ஐரோப்பாவில் ஆறுவது பெரிய தேசமாக விளங்குகிறது. 151,000 சதுர மைல் விஸ்தீரணம் வாய்ந்திருக்கிறது. இங்கிலாந்தைப் போல ஒன்றரை மடங்கு அளவு கொண்டது.

கே:—அதன் அக்கம் பக்க தேசங்கள் எவை?

ப:—ஜெர்மனிக்கும் ரஷ்யாவுக்கும் நடுவில் இருக்கிறது. அதன் கிழக்கே ஜெர்மன் எல்லைப் புறம்; மேற்கே ரஷ்ய எல்லைப் புறம். இதன் அகலப்போக்கு 550 மைல்.

அதற்கு வடக்கே பால்டிக் பிரதேசங்களான லாட்வியா, எஸ்டோனியா, நார்வே, ஸ்வீடன், லிதுவேனியா, டென்மார்க் முதலிய தேசங்களும், பால்டிக் கடலும் இருக்கின்றன.

அதற்கு தெற்கே, ஹங்கேரி, ஸ்லோவேகியா, ருமேனியா முதலிய தேசங்கள் இருக்கின்றன. அங்கிருந்து ஐரோப்பாவின் பல இடங்களுக்கு நாலு புறமும் போகலாம்.

கே:—அது மலைப் பிரதேசமா? சமவெளியா?

ப:—அதன் தெற்குப் பிரதேசத்தில் கார்பேதியன் மலைகள் இருப்பதைத் தவிர, அநேகமாக அந்த தேசத்தை விசாலமான சமவெளிப் பிரதேசமாகத்தான் சொல்லவேண்டும். விசாலமான வயல் நிலங்கள் உண்டு. பெரிய பெரிய வனாந்திரங்கள் இருக்கின்றன. பல ஏரிகளும் உண்டு.

கே:—அதன் ஜனத்தொகை?

ப:—மூன்றரைக் கோடி. இதில் 70 சத விகிதம் போலந்தினர்கள். 10 சத விகிதம் யூதர்கள். தவிர மொத்தம் 7½ லக்ஷம் ஜெர்மனியர்கள் இருக்கிறார்கள். இந்த ஜெர்மானியர் தொகை மொத்த ஜன விகிதத்தில் 2 சத விகிதம்தான்.

கே:—பிரபலமடைந்த போலந்தினர்கள் யார் யார்?

ப:—வான சாஸ்திரி கோபர்னிகஸ், ரேடியம் ராணி மேரி கியூரி; பாடகன் பாடரவ்ஸ்கி; வீரன் பில்ஸுடுஸ்கி, சைத்ரீகன் மாடேஜ்கோ இன்னும் பலர்.

கே:—போலந்துக்கு வெளியே இருக்கும் போலந்தினர் எவ்வளவு?

ப:—15 லக்ஷம் ஜெர்மனியில்; அமெரிக்காவில் 45 லக்ஷம்; 5 லக்ஷம் பிரான்சில்; லிதுவேனியாவில் 2 லக்ஷம்.

கே:—போலந்துக்கு கடற்கரை உண்டா?

ப:—ஆஹா! அதுதான் இப்போது ஏற்பட்டிருக்கும் தொல்லைகள் அத்தனைக்கும் காரணம். பாறைகள் நிறைந்த அவர்களது

85 மைல் தூரம் உள்ள தங்கள் கடற்கரையை உலகத்தின் ஜன்னல் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

கே :—ஜெர்மானியர் இதைப், பற்றிச் சொல்வது என்ன ?

ப :—வேர்செயில்ஸ் உடன்படிக்கைப் பிரகாரம் ஜெர்மன் பிரதேசத்திலிருந்து ஒரு துண்டை வெட்டி எடுத்து போலந்துக்கு ஒரு கடற்கரையாகக் கொடுத்திருக்கிறார்கள். இந்தப் பிரதேசத்திற்குத்தான் 'போலிஷ் காரிடார்' என்று பெயர், என்கிறார்கள்.

கே :—கடற்கரையை போலந்தினர் எப்படி உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ப :—பால்டிக் கடலிலேயே பெரிய துறைமுகமான குடினியா துறைமுகம் கட்டி இருக்கிறார்கள். 1838-ல் நல்ல வியாபாரப் போக்குவரத்து நடந்தது.

கே :—குடினியா இருக்கும் போது, டான்சிக் ஜெர்மனிக்குப் போவதை ஏன் அவர்கள் ஆக்ஷேபிக்க வேண்டும் ?

ப :—ஏனென்றால் டான்சிக்கிலிருந்து ஒரே நாள் இரவில் குடினியா இருந்த இடம் தெரியாமலே தகர்த்து எரிந்து விடலாம்.

கே :—போலந்தின் ராணுவ பலம் என்ன ?

ப :— நிரந்தரப் படை நான்கு லக்ஷம். வெகுவாக அதைப் பத்து லக்ஷத்துக்குப் பெரிசுபடுத்திவிடலாம். ராணுவப் பயிற்சி பெற்ற 30 லக்ஷம் போர்வீரர்கள் தயாரில் இருக்கிறார்கள். மொத்தம் 60 லக்ஷம் படை திரட்டி விட முடியும். நவீன தோரணையில் படை அமைக்கப்பட்டிருக்கிறது. நவீன யந்திர சாதனங்கள் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன.

கே :—போலந்தின் விமானப் படை ?

ப :—எதிரியைத் தாக்கும் 3000 விமானங்கள் அடங்கின படை என மதிப்பிடப்படுகிறது.

கே :—போலந்தின் தற்போதைய தலைவர் யார் ?

ப :—மோஸிஸ்கி.

கே :—கர்னல் பெக் யார் ?

ப :—அந்நிய நாட்டிலாகா மந்திரி.

கே :—படைத் தளபதி ?

ப :—மார்ஷல் ஸ்மிக்லி ரிட்ஜ்.

கே :—அதன் சரித்திரம் எப்படி ?

ப :—பத்தாம் நூற்றாண்டில் ஐரோப்பிய தேசமாகத் தோன்றி 14-ம் நூற்றாண்டில் பிரபலமானது. அடிக்கடி போலந்து ஐரோப்பாவின் யுத்தகளமானது. 1772 முதல் 1795க்குள் ரஷ்யா, புருஷ்யா, ஆஸ்டிரியா இவைகளிடையே பங்கிடப்பட்டு தனித் தேசமாக இல்லாமல் மறைந்தது.

பில்சுடிஸ்கி தான் இப்போதைய போலந்தை ஏற்படுத்தினவர். 1908-ல் திட்டம் போட்டார் அதற்கு. சென்ற யுத்தத்தில் ஜெர்மனி போலந்தைப் பிடித்தது. 1918-ல் பில்சுடிஸ்கி தலைமையில் தன் சுதந்திரத்தை அடைந்தது போலந்து.

நட்சத்திர பலா பலன்கள்

---

(1) அஸ்வனி-மகம்-மூலம்

23-9-39 பகல் 3-41 முதல்
24-9-39 மாலை 6-35 வரை.

இக்காலம் நிலையான தனங்களைச் சேர் செய்து வைக்க எத்தனிக்கின் மிக நன்மை யுண்டாகும், தனக்கு வேண்டிய எச்சுகங்களையும் அடைய எத்தனிக்கின் ஜெயந்தரும், வாகனங்களைச் சேர் செய்வதோ அல்லது வாங்குவதாயினும் விற்பதாயினும் நன்மை தரும், குடும்ப சம்பந்தமாக எக்காரியம் தொடரினும் வெற்றியுண்டாகும் பொதுவில் சுகமாய் இக்காலம் நடக்கும்.

24-9-39 மாலை 6-35 முதல்
25-9-39 இரவு 9-34 வரை.

இந்நாளில் தொழில் நலமே நடக்கும், ஏதோ ஒரு காரியத்தைக் கொண்டு கவலையும் உண்டாகிப் பின் நீங்கும். இஷ்டர் அல்லது மேலோரால் மனக்கவலை அல்லது அலைச்சல், முக்கிய காரியங்களை முடித்துக் கொள்ள எத்தனிக்கின் நினைத்த அளவுக்கு நன்மையுண்டாகாது. புத்திரர் வகையால் சிறு கவலையும் உற்றகலும்.

25-9-39 இரவு 9-34 முதல்
26-9-39 இரவு 12-31 வரை.

எளிதில் முடியக்கூடாத எக்காரியங்களையும் இத்தினத்தில் தொடரின் வெற்றியுண்டாகும், பிறருதவியைக் கொண்டு காரியங்களைச் சாதித்துக் கொள்வதற்கு இந்நாள் தகுதியானது, எப்பொழுதும் உள்ள தொழில் சந்தோஷமாய் நடக்கும், முதலீடு லாபம் பெற எத்தனிக்கினும் பலன் தரும், பொதுவில் இந்நாள் எக்குறையும் இல்லாமல் நடக்கும்.

26-9-39 இரவு 12-31 முதல்
27-9-39 இரவு 3-17 வரை.

இந்நாளில் பழமையான தொழிலிலும் சில சங்கடம், அந்நியர் காரியங்களால் அலைச்சல், மனமயக்கம், வீணான மனஸ்தாபமும் உண்டாகலாம். இத்தினத்தில் முக்கியமான காரியங்களை செய்யாதிருத்தல் நலம். பிரயாணங்கள் வரின் ஜாக்கிரதையாய் நடந்து கொள்ள வேண்டும். முக்கியமான நேசரையோ அல்லது மேலதிகாரிகளையோ காணாதிருத்தல் நலம், அப்படிக் காண நேரினும் பதமாய் நடந்து கொள்ளல் வேண்டும். எதிலும் கோபமில்லாது சாந்தமாய் நடத்தல் நலமாம்.

27-9-39 இரவு 3-17 முதல்
28-9-39 இரவு 5-50 வரை.

இத்தினம் மிகவும் உத்தமமானது, இஷ்டகாரிய ஜெயம், தொழில் வெற்றிகரமாய் நடக்கும், தேக சௌக்கியம், நூதன பொருள்களைப் பெற

முயலின் நன்மையாம், சிக்கிய தனத்தைப் பெற எத்தனிக்கினும் கைகூடும், தன் காரியங்களை முடித்துக்கொள்ள ஒரு தகுதியான நாளாகும்.

28-9-39 இரவு 5-50 முதல்
30-9-39 காலை 8-4 வரை.

இந்நாளில் தொழில் சௌக்கியமாய் நடக்கும், முக்கியமான நேசர்களின் பேட்டி; காரிய ஜெயம், எக்காரியம் தொடரினும் மன உற்சாகத்துடன் பலன் தரும், குடும்ப மகிழ்ச்சி, இடையில் சிறு கவலையுரினும் உடனுக்குடன் நீங்கி நன்மையே உண்டாகும்.

30-9-39 காலை 8-4 முதல்
1-9-39 காலை 9-57 வரை.

இத்தினத்தில் தொழில் சமமாய் நடக்கும், ஆனால் வீண் சிந்தனை, புதிதாக ஒரு காரியத்தை முடிக்கப் பிரயத்தனப் படின் பலிக்காது, பயனில்லாத காரியங்களில் சந்தோஷம், அந்நியருக்காக அலைச்சலுமுண்டாகும்.

(2) பரணி-பூரம்-பூராடம்

23-9-39 பகல் 3-41 முதல்
24-9-39 மாலை 6-35 வரை.

பொதுவில் இத்தினத்தில் எக்காரியங்களிலும் சர்வ ஜாக்கிரதையாய் நடந்து கொள்ள வேண்டும். பிரயாணங்களில் நிதானமாய் நடந்து கொள்ள வேண்டும், தன் காரியத்தை முடித்துக் கொள்ள முக்கியமானவர்களைக் காணின் விக்கினமுண்டாகும், கோப முண்டாக்கத்தக்க எக்காரியம் நடக்கினும் பொறுமையோடு நடந்து கொள்ளல் வேண்டும், நூதன லாபம் பெறத்தக்க காரியத்தை இந்நாளில் நிறுத்தி வைப்பதே நலமாம்.

24-9-39 மாலை 6-35 முதல்
25-9-39 இரவு 9-34 வரை.

இக்காலம் நிலையான தனங்களைச் சீர்செய்து வைக்க எத்தனிக்கின் ஜெயந்தரும், தனக்கு வேண்டிய எச்சுகங்களையும் அடைய எத்தனிக்கின் ஜெயந்தரும், வாகனங்களை சீர் செய்வதோ அல்லது வாங்குவதாயினும் விற்பதாயினும் நன்மை தரும், குடும்ப சம்பந்தமாக எக்காரியம் தொடரினும் வெற்றியுண்டாகும், பொதுவில் சுகமாய் இக்காலம் நடக்கும்.

25-9-39 இரவு 9-34 முதல்
26-9-39 இரவு 12-31 வரை.

இக்நாளில் தொழில் நலமே நடக்கும், ஏதோ காரியத்தைக் கொண்டு கவலையும் உண்டாகிப் பின் நீங்கும். இஷ்டர் அல்லது மேலோரால் கவலை, அல்லது அலைச்சல், முக்கிய காரியங்களை முடித்துக்கொள்ள எத்தனிக்கின் நினைத்த அளவுக்கு நன்மையுண்டாகாது. புத்திரர் வகையால் சிறு கவலையும் உற்றசலும்.

26-9-39 இரவு 12-31 முதல்
27-9-39 இரவு 3-17 வரை.

எளிதில் முடியக்கூடாத எக்காரியங்களையும் இத்தினத்தில் தொடரினும் வெற்றி யுண்டாகும், பிறருதவியைக் கொண்டு காரியங்களைச் சாதித்

துக் கொள்வதற்கு இந்நாள் தகுதியானது. எப்பொழுதும் உள்ள தொழில் சாதாரணமாய் நடக்கும், அனுமத்து லாபம் பெற எத்தனிக்கினும் பலன் தரும், பொதுவில் இந்நாள் எக்குறையுமில்லாமல் சந்தோஷமாய் நடக்கும்.

27-9-39 இரவு 3-17 முதல்
28-9-39 இரவு 5-50 வரை.

இந்நாளில் பழமையான தொழிலிலும் சில சங்கடம், அந்நியர் காரியங்களால் அலைச்சல், மனமயக்கம், வீணான மனஸ்தாபமும் உண்டாகலாம், இத்தினத்தில் முக்கியமான காரியங்களைச் செய்யாதிருத்தல் நலம். பிரயாணங்கள் வரின் ஜாக்கிரதையாய் நடந்து கொள்ளல் வேண்டும், முக்கியமான நேசரையோ அல்லது மேலதிகாரிகளையோ காணுதிருத்தல் நலம். அப்படிக் காண நேரினும் பதமாய் நடந்து கொள்ளல் வேண்டும், எதிலும் கோபமில்லாது சாந்தமாய் நடத்தல் நலமாம்.

28-9-39 இரவு 5-50 முதல்
30-9-39 காலை 8-4 வரை.

இத்தினம் மிகவும் உத்தமமானது. இஷ்டகாரிய ஜெயம், தொழில் வெற்றிகரமாய் நடக்கும், தேக சௌக்கியம், நூதன பொருள்களைப் பெற முயலின் நன்மையாம், சிக்கிய தனத்தைப் பெற எத்தனிக்கினும் கைகூடும், தன் காரியங்களை முடித்துக் கொள்ள ஒரு தகுதியான நாளாம்.

30-9-39 காலை 8-4 முதல்
1-10-39 காலை 9-57 வரை.

இந்நாளில் தொழில் சௌக்கியமாய் நடக்கும், ஆனல் வீண் சிந்தனை புதிதாக ஒரு காரியத்தை முடிக்கப் பிரயத்தினம் செய்யின் பலிக்காது பயனில்லாத காரியங்களில் சந்தோஷம், அந்நியருக்காக அலைச்சலுமுண்டாகும்.

(3) கார்த்திகை-உத்திரம்-உத்திராடம்.

23-9-39 பகல் 3-41 முதல்
24-9-39 மாலை 6-35 வரை.

இந்நாளில் தொழில் முறைப்படி நடக்கும். பிறர் கையிற் சிக்கிய பொருளை வாங்க எத்தனிக்கின் பலன் தரும், தன் கைப்பொருளைப் பிறர் கையிற் கொடுத்து லாபம் பெற எத்தனிக்கினும் தக்க நலமுண்டாகும், எதிர்பாராத சந்தோஷங்களும் உண்டாகும். பொதுவில் இத்தினம் சமப் பலன் தரும்.

24-9-39 மாலை 6-35 முதல்
25-9-39 இரவு 9-34 வரை.

பொதுவில் இத்தினத்தில் எக்காரியங்களிலும் சர்வ ஜாக்கிரதையாய் நடந்து கொள்ளவேண்டும், பிரயாணங்களில் நிதானமாய் நடந்து கொள்ளல் வேண்டும். தன் காரியத்தை முடித்துக்கொள்ள முக்கியமானவர்களைக் காணின் விக்கினமுண்டாகும், கோபமுண்டாக்கத் தக்க எக்காரியம் நடக்கினும் பொறுமையோடு நடந்து கொள்ளல் வேண்டும், நூதன லாபம் பெறத்தக்க காரியத்தை இந்நாளில் நிறுத்தி வைப்பதே நலமாம்.

25-9-39 இரவு 9-34 முதல்
26-9-39 இரவு 12-31 வரை.

இக்காலம் நிலையான தனங்களைச் சீர் செய்து வைக்க எத்தனிக்கின் நன்மை யுண்டாம், தனக்கு வேண்டிய எச் சுகங்களையும் அடைய எத்தனிக்கின் ஜெயந்தரும், வாகனங்களை சீர் செய்வதோ அல்லது வாங்குவதாயினும் விற்பதாயினும் நன்மை தரும், குடும்ப சம்பந்தமாக எக்காரியம் தொடரினும் வெற்றியுண்டாகும், பொதுவில் சுகமாய் இக்காலம் நடக்கும்.

26-9-39 இரவு 12-31 முதல்
27-9-39 இரவு 3-17 வரை.

இந்நாளில் தொழில் நலமே நடக்கும், ஏதோ காரியத்தைக் கொண்டு மனக்கவலையு முண்டாகி பின் நீங்கும், இஷ்டர் அல்லது மேலோரால் மனக்கவலை அல்லது அலைச்சல், முக்கிய காரியங்களைக் குறித்து எத்தனிக்கின் நினைத்த அளவுக்கு நன்மையுண்டாகாது, புத்திரர் வகையால் சிறு கவலையும் உற்றகலும்.

27-9-39 இரவு 3-17 முதல்
28-9-39 இரவு 5-50 வரை.

இந்நாளில் எளிதில் முடியக்கூடாத எக்காரியங்களைத் தொடரினும் வெற்றி தரும், பிறருதவியைக் கொண்டு காரியங்களைச் சாதித்துக் கொள்வதற்கு இந்நாள் தகுதியானது, எப்பொழுதும் உள்ள தொழில் சாதாரணமாய் நடக்கும், அனுமதி லாபம் பெற எத்தனிக்கினும் பலன் தரும், பொதுவில் இந்நாள் எக்குறையுமில்லாமல் சந்தோஷமாய் நடக்கும்.

28-9-39 இரவு 5-50 முதல்
30-9-39 காலை 8-4 வரை.

இந்நாளில் பழமையான தொழிலிலும் சில சங்கடம், அன்னியர் காரியங்களால் அலைச்சல், மனமயக்கம், வீணான மனத்தாபமும் உண்டாகலாம், இத்தினத்தில் முக்கியமான காரியங்களைச் செய்யாதிருத்தல் நலம், பிரயாணங்கள் வரின் ஜாக்கிரதையாய் நடந்து கொள்ளல் வேண்டும், முக்கியமான நேசரையோ அல்லது மேலதிகாரிகளையோ காணுதிருத்தல் நலம், அப்படிக் காண நேரினும் பதமாய் நடந்து கொள்ளல் வேண்டும், எதிலும் கோபமில்லாது சாந்தமாய் நடத்தல் நலமாம்.

30-9-39 காலை 8-4 முதல்
1-10-39 காலை 9-57 வரை.

இத்தினம் மிகவும் உத்தமமானது, இஷ்ட காரியம் ஜெயம், தொழில் வெற்றிகரமாய் நடக்கும், தேகசௌக்கியம், தூதனைப் பொருள்களைப் பெற முயலின் நன்மையாம், சிக்கிய தனத்தைப் பெற எத்தனிக்கினும் கை கூடும், தன் காரியங்களை முடித்துக்கொள்ள ஒரு தகுதியான நாளாம்.

(4) ரோகணி-அஸ்தம்-திருவோணம்.

23-9-39 பகல் 3-41 முதல்
24-9-39 மாலை 6-35 வரை.

இத்தினத்தில் தொழில் சமமாய் நடக்கும், ஆனல் வீண் சிந்தனை, புதிதாக ஒரு காரியத்தை முடிக்கப் பிரயத்தனப்படின் பலிக்

காது, பயனில்லாத காரியங்களில் சந்தோஷம், அன்னியருக்காக அலேச்சல்.

24-9-39 மாலை 6-35 முதல்
25-9-39 இரவு 9-34 வரை.

இந்நாளில் தொழில் முறைப்படி நடக்கும், பிறர் கையிற் சிக்கிய பொருளை வாங்க எத்தனிக்கின் பலன் தரும், தன் கைப் பொருளைப் பிறர் கையிற் கொடுத்து லாபம் பெற எத்தனிக்கினும் தக்க நலமுண்டாம், எதிர் பாராத சந்தோஷங்களும் உண்டாகும், பொதுவில் இத்தினம் சமப் பலன் தரும்.

25-9-39 இரவு 9-34 முதல்
26-9-39 இரவு 12-31 வரை.

பொதுவில் இத்தினத்தில் எக்காரியங்களிலும் சர்வ ஜாக்கிரதையாய் நடந்து கொள்ளவேண்டும், பிரயாணங்களில் நிதானமாய் நடந்து கொள் ளல் வேண்டும், தன் காரியத்தை முடித்துக் கொள்ள முக்கியமானவர்களைக் காணின் விக்கின முண்டாகும், கோபம் உண்டாக்கத் தக்க எக் காரியம் நடக்கினும் பொறுமையோடு நடந்து கொள்ளல் வேண்டும், நூதன லாபம் பெறத்தக்க காரியத்தை இந்நாளில் நிறுத்தி வைப்பதே நலமாம்.

26-9-39 இரவு 12-31 முதல்
27-9-39 இரவு 3-17 வரை.

இக்காலம் நிலையான தனங்களைச் சேர் செய்து வைக்க எத்தனிக்கின் நன்மையுண்டாம், தனக்கு வேண்டிய எச் சுகங்களையும் பெற எத்தனிக்கின் ஜெயந்தரும், வாகனங்களை சேர் செய்வதோ அல்லது வாங்குவதாயினும் விற்ப தாயினும் நன்மை தரும், குடும்ப சம்பந்தமாக எக்காரியம் தொடரினும் வெற்றியுண்டாகும், பொதுவில் சுகமாய் இக்காலம் நடக்கும்.

27-9-39 இரவு 3-17 முதல்
28-9-39 இரவு 5-50 வரை.

இந்நாளில் தொழில் நலமே நடக்கும், ஏதோ காரியத்தைக் கொண்டு மனக்கவலையு முண்டாகிப் பின் நீங்கும், இஷ்டர் அல்லது மேலோரால் மனக்கவலை அல்லது அலேச்சல், முக்கிய காரியங்களைக் குறித்து எத்தனிக் கின் நினைத்த அளவுக்குப் பலன் தாராது, புத்திரர் வகையால் சிறு கவலையு முற்றகலும்.

28-9-39 இரவு 5-50 முதல்
30-9-39 காலை 8-4 வரை.

இந்நாளில் எளிதில் முடியக்கூடாத எக்காரியங்களை தொடரின் வெற்றிதரும், பிறருதவியைக் கொண்டு காரியங்களைச் சாதித்துக் கொள்வ தற்கு இந்நாள் தகுதியானது. எப்பொழுதும் உள்ள தொழில் சாதாரண மாய் நடக்கும், அனுமத்து லாபம் பெற எத்தனிக்கினும் பலன் தரும், பொதுவில் இந்நாள் எக்குறையுமில்லாமல் சந்தோஷமாய் நடக்கும்.

30-9-39 காலை 8-4 முதல்
1-10-39 காலை 9-57 வரை.

இந்நாளில் பழமையான தொழிலில் சில சங்கடம், அன்னியர் காரியங் களால் அலேச்சல், மனமயக்கம், வீணான மனஸ்தாபமும் உண்டாகலாம், இத்

தினத்தில் முக்கியமான காரியங்களைச் செய்யாதிருத்தல் நலம், பிரயாணங்கள் வரின் ஜாக்கிரதையாய் நடந்து கொள்ளல் வேண்டும், முக்கியமான நேசரையோ அல்லது மேலதிகாரிகளையோ காணுதிருத்தல் நலம், அப்படிக் காண நேரினும் பதமாய் நடந்து கொள்ள வேண்டும், எதிலும் கோபமில்லாது சாந்தமாய் நடத்தல் நலமாம்.

(5) மிருகசீரிடம்-சித்திரை-அவிட்டம்.

23-9-39 பகல் 3-41 முதல்
24-9-39 மாலை 6-35 வரை.

இந்நாள் சௌக்கியமாய்த் தொழில் நடக்கும், முக்கியமான நேசரின் பேட்டி காணின் காரியம் ஜெயம், எக்காரியம் தொடரினும் மன உற்சாகத்துடன் பலன் தரும், குடும்ப மகிழ்ச்சி, இடையில் சிறு கவலையுரினும் உடனுக்குடன் நீங்கி நன்மையே உண்டாகும்.

24-9-39 மாலை 6-35 முதல்
25-9-39 இரவு 9-34 வரை.

இத்தினத்தில் தொழில் சமமாய் நடக்கும், ஆனல் வீண் சிந்தனை, புதிதாக ஒரு காரியத்தை முடிக்கப் பிரயத்தனப்படின் பலிக்காது, பயனில்லாத காரியங்களில் சந்தோஷம், அன்னியருக்காக அலைச்சல்.

25-9-39 இரவு 9-34 முதல்
26-9-39 இரவு 12-31 வரை.

இந்நாளில் தொழில் முறைப்படி நடக்கும், பிறர் கையிற் சிக்கிய பொருளை வாங்க எத்தனிக்கின் பலன் தரும், தன் கைப் பொருளைப் பிறர் கையிற் கொடுத்து லாபம் பெற எத்தனிக்கினும் தக்க நலமுண்டாகும், எதிர்பாராத சந்தோஷங்களும் உண்டாகும், பொதுவில் இத்தினம் சமப் பலன் தரும்.

26-9-39 இரவு 12-31 முதல்
27-9-39 இரவு 3-17 வரை.

பொதுவில் இத்தினத்தில் எக்காரியங்களிலும் சர்வ ஜாக்கிரதையாய் நடந்து கொள்ள வேண்டும், பிரயாணங்களில் நிதானமாய் நடந்து கொள்ள வேண்டும், தன் காரியத்தை முடித்துக்கொள்ள முக்கியமானவர்களைக் காணின் விக்கினமுண்டாகும், கோபம் உண்டாக்கத் தக்க எக்காரியம் நடக்கினும் பொறுமையோடு நடந்து கொள்ள வேண்டும், நூதன லாபம் பெறத்தக்க காரியத்தை இந்நாளில் நிறுத்தி வைப்பதே நலம்,

27-9-39 இரவு 3-17 முதல்
28-9-39 இரவு 5-50 வரை.

இக்காலம் நிலையான தனங்களைச் சேர் செய்து வைக்க எத்தனிக்கின் நன்மையுண்டாகும், தனக்கு வேண்டிய சௌகரியங்களையும் பெற எத்தனிக்கின் ஜெயந்தரும், வாகனங்களைச் சேர் செய்வதோ அல்லது வாங்குவதாயினும் விற்பதாயினும் நன்மை தரும், குடும்ப சம்பந்தமாக எக்காரியம் தொடரினும் வெற்றியுண்டாகும், பொதுவில் சுகமாய் இக்காலம் நடக்கும்.

28-9-39 இரவு 5-50 முதல்
30-9-39 காலை 8-4 வரை.

இந்நாளில் தொழில் நலமாய் நடக்கும், ஏதோ காரியத்தைக்கொண்டு மனக்கவலையுமுண்டாகிப் பின் நீங்கும். இஷ்டர் அல்லது மேலோரால் மனக் கவலை, அல்லது அலைச்சல், முக்கிய காரியங்களைக் குறித்து எத்தனிக்கின் நினைத்த அளவுக்குப் பலன் தராது, புத்திரர் வகையால் சிறு கவலையு முற் றகலும்.

30-9-39 காலை 8-4 முதல்
1-10-39 காலை 9-57 வரை.

இந்நாளில் எளிதில் முடியாத எக்காரியங்களைத் தொடரினும் வெற்றி தரும், பிறருதவியைக் கொண்டு காரியங்களைச் சாதித்துக் கொள்வதற்கு இந்நாள் தகுதியானது, எப்பொழுதும் உள்ள தொழில் சாதாரணமாய் நடக்கும், அனுமத்து லாபம் பெற எத்தனிக்கினும் பலன் தரும், பொதுவில் இந்நாள் எக்குறையுமில்லாமல் சந்தோஷமாய் நடக்கும்.

(6) திருவாதிரை-சுவாதி-சதயம்.

23-9-39 பகல் 3-41 முதல்
24-9-39 மாலை 6-36 வரை.

இத்தினம் மிகவும் உத்தமமானது; இஷ்ட காரிய ஜெயம், தொழில் வெற்றிகரமாய் நடக்கும், தேக சுகம், நூதன பொருள்களைப் பெற முயலின் நன்மையாம், சிக்கிய தனத்தைப் பின்னும் பெற எத்தனிக்கின் கை கூடும், தன் காரியங்களைக் குறித்து முடித்துக்கொள்ள இது தகுதியான நாளாம்.

24-9-39 மாலை 6-35 முதல்
25-9-39 இரவு 9-34 வரை.

இந்நாள் சௌகியமாய்த் தொழில் நடக்கும், முக்கியமான நேசரைக் பேட்டி காணின் காரிய ஜெயமுண்டாகும், எச்காரியம் தொடரினும் மன உற்சாகத்துடன் பலன் தரும், குடும்ப மகிழ்ச்சி, இடையில் சிறு கவலையுறி னும் உடனுக்குடன் நீங்கி நன்மையே உண்டாகும்.

25-9-39 இரவு 9-34 முதல்
26-9-39 இரவு 12-31 வரை.

இத்தினத்தில் தொழில் சமமாய் நடக்கும், ஆனால் வீண் சிந்தனை, புதிதாக ஒரு காரியத்தை முடிக்கப் பிரயத்தனம் செய்யின் பலிக்காது, பயனில்லாத காரியங்களில் சந்தோஷம், அன்னியருக்காக அலைச்சல்.

26-9-39 இரவு 12-31 முதல்
27-6-39 இரவு 3-17 வரை.

இந்நாளில் தொழில் முறைப்படி நடக்கும், பிறர் கையிற் சிக்கிய பொருளை வாங்க எத்தனிக்கின் பலன் தரும், தன் கைப் பொருளைப் பிறர் கையிற் கொடுத்து லாபம் பெற எத்தனிக்கினும் தக்க நலமுண்டாகும், எதிர்பாராத சந்தோஷங்களும் உண்டாகும், பொதுவில் இத்தினம் சமப் பலன் தரும்.

27-9-39 இரவு 3-17 முதல்
28-9-39 இரவு 5-50 வரை.

பொதுவில் இத்தினத்தில் எக்காரியங்களிலும் சர்வ ஜாக்கிரதையாய் நடந்து கொள்ள வேண்டும்; பிராயாணங்களில் நிதானமாய் நடந்து கொள்ள வேண்டும், தன் காரியத்தை முடித்துக்கொள்ள முக்கியமானவர்களைக் காணின் விக்கின முண்டாகும், கோபம் உண்டாக்கத்தக்க எக்காரியம் நடக்கினும் பொறுமையோடு நடந்து கொள்ளல் வேண்டும், நூதன லாபம் பெறத் தக்க காரியத்தை நிறுத்தி வைப்பதே நலம்.

28-9-39 இரவு 5-50 முதல்
30-9-39 காலை 8-4 வரை.

இக்காலம் நிலையான தனங்களைச் சீர் செய்து வைக்க எத்தனிக்கின் நன்மையுண்டாகும், தனக்கு வேண்டிய எச்சுகங்களையும் பெற எத்தனிக்கின் ஜெயந்தரும், வாகனங்களைச் சீர் செய்வதோ அல்லது வாங்குவதாயினும் விற்பதாயினும் நன்மை தரும், குடும்ப சம்பந்தமாக எக்காரியம் தொடரினும் வெற்றியுண்டாகும், பொதுவில் சுகமாய் இக்காலம் நடக்கும்.

30-9-39 காலை 8-4 முதல்
1-10-39 காலை 9-57 வரை.

இந்நாளில் தொழில் நலமாய் நடக்கும், ஏதோ காரியத்தைக்கொண்டு மனக்கவலையுமுண்டாகிப் பின் நீங்கும், இஷ்டர் அல்லது மேலோரால் மனக்கவலை, அல்லது அலைச்சல், முக்கிய காரியங்களைக் குறித்து எத்தனிக்கின் நினைத்த அளவுக்குப் பலன் தராது, புத்திரர் வகையால் சிறு கவலையு முற்றகலும்.

(7) புனர்ப்பூசம்-விசாகம்-பூரட்டாதி.

23-9-39 பகல் 3-41 முதல்
24-9-39 மாலை 6-35 வரை.

இந்நாளில் பழமையான தொழிலிலும் சில சங்கடம், அன்னியர்காரியங்களுக்காக அலைச்சல், மனமயக்கம், வீணை மனத்தாபமும் உண்டாகும், இத்தினத்தில் முக்கியமான காரியங்களை செய்யாதிருத்தல் நலம், பிரயாணங்கள் வரின் ஜாக்கிரதையாய் நடந்து கொள்வது நலம், முக்கியமான நேசரையோ மேல் அதிகாரிகளையோ காணாதிருத்தல் நலம், அப்படிக் காணநேரினும் பதமாய் நடந்து கொள்ளவேண்டும், எதினும் கோபத்தை அடக்கிக் கொள்வது நலம்.

24-9-39 மாலை 6-35 முதல்
25-9-39 இரவு 9-34 வரை.

இத்தினம் மிகவும் உத்தமமானது, இஷ்ட காரிய ஜெயம், தொழில் வெற்றிகரமாய் நடக்கும், தேக சுகம், நூதன பொருள்களைப் பெற முயலின் நன்மையாம், சிக்கிய தனத்தைப் பின்னும் பெற முயலின் நன்மையாம் தன் காரியங்களை முடித்துக் கொள்ள இது தகுதியான நாளாம்.

25-9-39 இரவு 9-34 முதல்
26-9-39 இரவு 12-31 வரை.

இந்நாள் சௌக்கியமாய்த் தொழில் நடக்கும், முக்கியமான நேசரின் பேட்டி காணின் காரிய ஜெயமுண்டாகும், எக்காரியந் தொடரினும் மன

உற்சாகத்துடன் பலன் தரும், குடும்ப மகிழ்ச்சி, இடையில் சிறு கவலையுறினும் உடனுக்குடன் நீங்கி நன்மையே உண்டாகும்.

26-9-39 இரவு 12-31 முதல்
27-9-39 இரவு 3-17 வரை.

இத்தினத்தில் தொழில் சமமாய் நடக்கும், ஆனால் வீண் சிந்தனை, புதிதாக ஒரு காரியத்தை முடிக்க பிரயத்தினம் செய்யின் பலிக்காது, பயனில்லாத காரியங்களில் சந்தோஷம், அன்னியருக்காக அலைச்சல்.

27-9-39 இரவு 3-17 முதல்
28-9-39 இரவு 5-50 வரை.

இந்நாளில் தொழில் முறைப்படி நடக்கும், பிறர் கையிற் சிக்கிய பொருளை வாங்க எத்தனிக்கின் பலன் தரும், தன் கைப் பொருளை பிறர் கையிற் கொடுத்து லாபம் பெற ஏத்தனிக்கினும் தக்க நலமுண்டாகும், எதிர் பாராத சந்தோஷங்களும் உண்டாகும், பொதுவில் இத்தினம் சமப் பலன் தரும்.

28-9-39 இரவு 5-50 முதல்
30-9-39 காலை 8-4 வரை.

பொதுவில் இத்தினத்தில் எக்காரியங்களிலும் சர்வ சாக்கிரதையாய் நடந்து கொள்ளவேண்டும், பிரயாணங்களில் நிதானமாய் நடந்து கொள்ள வேண்டும், தன் காரியத்தை முடித்துக் கொள்ள முக்கியமானவர்களைக் காணின் விக்கினமுண்டாகும், கோபம் உண்டாக்கத்தக்க எக்காரியம் நடக்கினும் பொறுமையோடு நடந்து கொள்ளல் வேண்டும், நூதன லாபம் பெறத் தக்க காரியத்தை நிறுத்தி வைப்பதே நலம்.

30-9-39 காலை 8-4 முதல்
1-20-39 காலை 9-57 வரை.

இக்காலம் நிலையான தனங்களைச் சீர் செய்து வைக்க எத்தனிக்கின் நன்மையுண்டாகும், தனக்கு வேண்டிய எச்சுகங்களையும் பெற எத்தனிக்கின் ஜெயந்தரும், வாகனங்களைச் சீர் செய்வதோ அல்லது வாங்குவதாயினும் விற்பதாயினும் நன்மை தரும், குடும்ப சம்பந்தமான எக்காரியம் தொடரினும் வெற்றியுண்டாகும், பொதுவில் சுகமாய் இக்காலம் நடக்கும்.

(8) பூசம்-அனுஷம்-உத்திரட்டாதி.

23-9-39 பகல் 3-41 முதல்
24-9-39 மாலை 6-35 வரை.

எளிதில் முடியக்கூடாத எக்காரியங்களையும் இத்தினத்தில் தொடரின் வெற்றியுண்டாகும், பிறருதவியைக் கொண்டு காரியங்களைச் சாதித்துக் கொள்வதற்கு இந்நாள் தகுதியானது, எப்பொழுதும் உள்ள தொழில் சந்தோஷமாய் நடக்கும், அனுமத்து லாபம் பெற எத்தனிக்கினும் பலன் தரும், பொதுவில் இந்நாள் எக்குறைமில்லாமல் நடக்கும்.

24-9-39 மாலை 6-35 முதல்
25-8-39 இரவு 9-34 வரை.

இந்நாளில் பழமையான தொழிலிலும் சிலசங்கடம், அன்னியர் காரியங்களுக்காக அலைச்சல், மனமயக்கம், வீணான மனஸ்தாபமும் உண்டாகும்.

இத்தினத்தில் முக்கியமான காரியங்களை செய்யாதிருத்தல் நலம் பிரயாணங்கள்வரின் ஜாக்கிரதையாய் நடந்து கொள்வது நலம், முக்கியமான நேசரையோ மேல் அதிகாரிகளையோ காணுதிருத்தல் நலம், அப்படிக் காண நேரினும் பக்குவமாய் நடந்து கொள்ளல் வேண்டும். எதிலும் கோபத்தை அடக்கிக் கொள்வது நலம்.

25-9-39 இரவு 9-34 முதல்
26-9-39 இரவு 12-31 வரை.

இத்தினம் மிகவும் உத்தமமானது, இஷ்டகாரிய ஜெயம். தொழிலில் வெற்றி, உற்சாகம் தேக சுகம், நூதன பொருள்களைப் பெற முயலின் நன்மையாம், சிக்கிய தனத்தைப் பின்னும் பெற எத்தனிக்கின் ஜெயந் தரும், தன் காரியங்களை முடித்துக் கொள்ள இது தகுதியான நாளாம்.

26-9-39 இரவு 12-31 முதல்
26-9-36 இரவு 3-17 வரை.

இந்நாளில் தொழில் சௌக்கியமாய் நடக்கும், முக்கியமான நேசரின் பேட்டி காணின் காரிய ஜெயமுண்டாகும், எக்காரியந் தொடரினும் மன உற்சாகத்துடன் பலன் தரும், குடும்ப மகிழ்ச்சி, இடையில் சிறு கலகங்களுறினும் உடனுக்குடன் நீங்கி நன்மையே உண்டாகும்.

27-9-59 இரவு 3-17 முதல்
28-9-39 இரவு 5-56 வரை.

இத்தினத்தில் தொழில் சமமாய் நடக்கும், ஆனல் வீண் சிந்தனை, புதிதாக ஒரு காரியத்தை முடிக்கப் பிரயத்தினம் செய்யின் பலிக்காது, பயனில்லாத காரியங்களில் சந்தோஷம், அந்நியருக்காக அலைச்சல்.

28-9-39 இரவு 5-50 முதல்
30-9-39 காலை 8-4 வரை.

இந்நாளில் தொழில் முறைப்படி நடக்கும், பிறர் கையிற் சிக்கிப் பொருளை வாங்க எத்தனிக்கின் பலன் தரும். தன் கைப் பொருளை பிறர் கையிற் கொடுத்து லாபம் பெற எத்தனிக்கினும் தக்க நலமுண்டாகும். எதிர்பாராத சந்தோஷங்களும் உண்டாகும், பொதுவில் இத்தினம் சம பலன் தரும்.

30-9-39 காலை 8-4 முதல்
1-9-39 காலை 9-57 வரை.

பொதுவில் இத்தினத்தில் எக்காரியங்களிலும் சர்வ ஜாக்கிரதையாய் நடந்து கொள்ள வேண்டும், பிரயாணங்களில் நிதானமாய் நடந்து கொள்ள வேண்டும், தன் காரியத்தை முடித்துக் கொள்ள முக்கியமானவர்களைக் காணின் விக்கின முண்டாகும், கோபம் உண்டாக்கத் தக்க எக்காரியம் நடக்கினும் பொறுமையோடு நடந்து கொள்ளல் வேண்டும், நூதன லாபம் பெறத்தக்க காரியத்தை நிறுத்தி வைப்பதே நலம்.

(9) ஆயில்யம்-கேட்டை-ரேவதி.

23-9-39 பகல் 3-41 முதல்
24-9-39 மாலை 6-35 வரை.

இந்நாளில் தொழில் நலமே நடக்கும், ஏதோ ஒரு காரியத்தைக் கொண்டு கவலையுமுண்டாகி பின் நீங்கும், இஷ்டர் அல்லது மேலோரால்

மனக்கவலை அல்லது அலைச்சல், முக்கிய காரியங்களை முடித்துக் கொள்ள எத்தனிக்கின் வினைத்த அளவுக்குப் பலன் தராது, புத்திர வகையால் சிறு சஞ்சலமும் உற்றகலும்.

24-9-39 மாலை 6-35 முதல்
25-9-39 இரவு 9-34 வரை.

எளிதில் முடியக்கூடாத எக்காரியங்களையும் இத்தினத்தில் தொடரின் வெற்றியுண்டாகும், பிறருதவியைக் கொண்டு காரியங்களைச் சாதித்துக் கொள்வதற்கு இந்நாள் தகுதியானது, எப்பொழுதும் உள்ள தொழிலில் உற்சாகம், அனுமத்து லாபம் பெற எத்தனிக்கினும் பலன் தரும், பொதுவில் இந்நாள் எக்குறையுமில்லாமல் நடக்கும்.

25-9-39 இரவு 9-34 முதல்
26-9-39 இரவு 12-31 வரை.

இந்நாளில் பழமையான தொழிலிலும் சில சங்கடம், அந்நியர் காரியங்களுக்காக அலைச்சல், மனமயக்கம் வீணான மனத்தாபமும் உண்டாகும், இத்தினத்தில் முக்கியமான காரியங்களைச் செய்யாதிருத்தல் நலம், முக்கியமான நேசரையோ மேலதிகாரிகளையோ காணாதிருத்தல் நலம், அப்படிக் காணநேரினும் பக்குவமாய் நடந்து கொள்ளல் வேண்டும், பிரயாணங்கள் வரின் ஜாக்கிரதையாய் நடந்து கொள்வது நலம், எதிலும் கோபத்தை அடக்கிக் கொள்வது நலம்.

26-9-39 இரவு 12-31 முதல்
27-9-39 இரவு 3-17 வரை.

இத்தினம் மிகவும் உத்தமமானது, இஷ்ட காரிய ஜெயம், தொழிலில் வெற்றி, உற்சாகம், தேக சௌக்கியம், நூதன பொருள்களைப் பெற முயலின் நன்மையாம், சிக்கிய தனத்தைப் பின்னும் பெற எத்தனிக்கின் ஜெயந்தரும், தன் காரியங்களை முடித்துக்கொள்ள இது தகுதியானநாளாம்.

27-9-39 இரவு 3-17 முதல்
28-9-39 இரவு 5-50 வரை.

இந்நாளில் தொழில் சௌக்கியமாய் நடக்கும், முக்கியமான நேசரின் பேட்டி காணின் காரிய ஜெயமுண்டாகும்; எக்காரியந் தொடரினும் மன உற்சாகத்துடன் பலன் தரும், குடும்ப மகிழ்ச்சி, இடையில் சிறு கவலை புகினும் உடனுக்குடன் நீங்கி நன்மையே யுண்டாகும்.

28-9-39 இரவு 5-50 முதல்
30-9-39 காலை 8-4 வரை.

இத்தினத்தில் தொழில் சமமாய் நடக்கும், ஆனால் வீண் சிந்தனை, புதிதாக ஒரு காரியத்தை முடிக்கப் பிரயத்தினம் செய்யின் பலிக்காது. பயனில்லாத காரியங்களில் சந்தோஷம், அந்நியருக்காக அலைச்சல்.

30-9-39 காலை 8-4 முதல்
1-10-39 காலை 9-57 வரை.

இந்நாளில் தொழில் முறைப்படி நடக்கும், பிறர் கையிற் சிக்கிய பொருளை வாங்க எத்தனிக்கின் பலன் தரும், தன் கைப்பொருளைப் பிறர் கையிற் கொடுத்து லாபம் பெற எத்தனிக்கினும் தக்க நலமுண்டாகும், எதிர் பாராத சந்தோஷங்களும் உண்டாகும், பொதுவில் இத்தினம் சம பலன் தரும்.

சில்லரைச் செலவுகள்

(மணி)

(ராமசாமி ஈஸிசேரில் சாய்ந்து கொண்டு கவலையோடு உட்கார்ந்திருக்கிறார். கீழே தேர்தல் சத்தம். கூர்ந்து கவனிக்கிறார்.)

குரல் :—ஸ்ரீ பரமானந்தர் ஒருவர் தான் நிச்சயமாக நமக்கு உழைக்கக் கூடியவர்! பரமானந்தருக்கே ஓட்டுக் கொடுங்கள்—ஜனநாயகத்திற்கு ஜே!

ராமசாமி :—ஊம்...பரமானந்தத்திக்கு ஓட்டுக் கொடுங்கள்...(கேலி பாக) ஓட்டை கூரையிலிருந்து பிரித்து எடுத்துக் கொடுங்கள், பரமானந்தர் கையில்! (அந்தக் குரலை புரளி செய்கிறார்) ஜனநாயகத்திற்கு ஜே! கத்தரிக்காய்க்கு ஜே!

கு :—(மறுபடியும்) ஜனநாயகத்திற்கு ஜே!

ரா :—இதைப்போன்ற ஒரு கேடுகெட்ட வார்த்தை இனிமேல் வரவே வராது. அந்த வார்த்தைக்கு மாத்திரம் வெட்கம், மானம் ஏதானும் இருந்தால் தூக்குப் போட்டுக்கொண்டு இத்தனை நாள் செத்துப் போயிருக்கும்...எங்கே இந்த மனுஷன் வருகிறேன் என்று சொல்லி விட்டுப் போனவரை இன்னும் காணோம்—டேய், முத்து.

முத்து :—சார்!

ரா :—குமாரசாமி வந்தாரோ?

மு :—இல்லியே.

ரா :—தொலைந்து போகட்டும். எல்லாருக்கும் இன்னிக்கித்தான் வேலை, தலையைப் பிய்த்துக் கொண்டு போகும்...சுத்த மட இழவுகள்......

(குமாரசாமி வந்த சப்தம் கேட்டு இறைச்சலை நிறுத்துகிறார். அவரோடு இன்னும் யாரோ வந்திருக்கிறார்கள்.)

கு :—யாருக்கு அர்ச்சனை நடக்கிறது—(திரும்பிப்பார்த்து)...ஓஹோ, முத்துவுக்கா?

மு :—இல்லையே. நீங்கள் வரல்லேன்னு......

ரா :—(அடக்குவதற்காக அவனை) சீ சீ! வாயை மூடு, கழுதை! என்ன வரவர வாய் ஜாஸ்தியாகப் போயிட்டாப்போலே இருக்கே! (வந்தவர்களிடம்) ஆமாண்ணு! காலமே முதல் இவனோடு போராட முடியல்லே. அதுதான் சொல்லிக் கொண்டிருந்தேன்...

கு :—குழந்தைகளே எப்பவும் அப்படித்தான். அவாளுக்கு என்ன தெரியும்?—அதிருக்கட்டும் ஸாரைப் பழக்க மில்லையே உங்களுக்கு?

ரா :—இல்லியே—எங்கேயோ பார்த்த ஞாபகம். ஒருவேளை கும்பகோணத்து மகாமகத்தின் போது...

கு :—இல்லை. இல்லை. நீங்க அவரைப் பார்த்திருக்க முடியாது. அவர் பம்பாயிலே இருந்து இப்பத்தான் வந்திருக்கார்!

ரா :—ஆ! ஒஹோ?... ஒரு வேளை பேப்பர்களிலே ஏதாவது போட்டோ, கீட்டோ பார்த்திருப்பேனோ என்னமோ,...

கு :—அது சரி! அப்படி இருக்கும்! இவர் பம்பாயிலே பெரிய ஒரு... மாபெரும் தலைவர்! துணி வெளுக்கும் தொழிலாளிகளின் கட்சித் தலைவர்!



ரா : ஒஹோ!

கு :—'மன்மதநாத் சனியன்'னு பேரு!

ரா :—(புரியாமல்) எது?

கு :—மன்மதநாத் சனியன்!

ரா :—ஒஹோ!

கு :—(ஸ்ரீ சனியனைப் பார்த்து) உங்களுக்கு ராமசாமியைத் தெரியாதே......

ம :—நைஜான் தா...

ரா :—(பயந்து) டேயப்பா! என்ன சொல்ரார்?

கு :—'நைன்னு இல்லேன்னு அர்த்தம். உங்களைத் தெரியல்லேன்னு சொல்ரார் போல இருக்கு.

ரா :—அட! அந்த பாஷை உங்களுக்கும் புரியாதா...?

கு :—புரியாமல் என்ன?

ரா :—பின்னெ, ஆளைத்தான் தெரியாதுன்னு சொல்றாரு, இல்லே... அவருடைய கையிலே பணம் கிணம் இல்லே, ஒண்ணு அரை கடன் கேட்கிறாரா...

ம :—அரேரேரே! பணம், பணம், என்னய்யா பணம்? நம்பள்கி பணம்—தா தா...வேண்டாம்!

ரா :—உஸ்! சொல்ரது புரியல்லேய்யா—தமிழ்லே சொல்லுமே.

கு :—அடேடே. நான்தான் சொல்ரேனே' எலக்ஷன்லே நம்ப கட்சிக்கு பேசரத்திற்கு ஆள் முதல் நம்பர் ஆள்...

ரா :—இவரா?

கு :—ஆம்! எப்படிப் பேசுவார் தெரியுமோ? நெருப்பைக் கக்குவார்! பம்பாயிலே இவர் பெயரைச் சொன்னால் போதும்...

ரா :—அப்படியா!

கு :—(காற்றுள்ள போதே) நிச்சயமாக. நீங்கள் பேபர்களில் எல்லாம் பார்த்தது கிடையாது போலிருக்கிறது (மன்மதனை (நோக்கி)இவர் தான் தோழர் ராமசாமி | இந்தத்தடவை எலக்ஷனுக்கு நிற்கிறார்...... நாளைக் காலையில் எலக்ஷன்......

ம :...நாளிக்கியா!

கு:—பின்னே என்ன? நான்தான் சொன்னேனே! இன்னிக்கி ராத்திரி பூரா.........

ரா:—தூங்கவே கூடாது; தெரியுமா குமாரசாமிப் பிள்ளை!

ம:—ப்சு! எஸ்! எஸ்!

ரா :—இப்ப முதல் காரியம், என்ன செய்யவேண்டும் தெரியுமோ, இல்லியோ......

கு :—உஸ்! உங்களுக்கு ஒண்ணும் தெரியாது. பேசாமல் இருங்கள் எல்லாம் நாங்கள் பேசி ஒரு முடிவு கட்டியாய் விட்டது!

ரா :—என்ன?

கு :—அதெல்லாம் உமக்கென்னத்துக்கு? எல்லாவற்றிற்கும் ஒரு கை காவலாக ஒரு இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாயை.........

ரா :—(வாயைத் திறந்து) ஆ! என்ன? (பாதி மூர்ச்சை)...எவ்வளவு?

கு :—அட! இது என்ன பெரிய விஷயமா? அப்படிக் கொடுத்தாலும் எல்லாவற்றையுமா வாரி இறைத்துவிடப்போகிறார்கள்.

ரா :—ஆமய்யா! இதோடே நான் ஓட்டாண்டியாக இந்த ஊரை விட்டு ஓடிப்போகும்படி—ஏற்பாடு செய்து விடாதீர்கள்.........

கு :—மன்மத நாத் இருக்கும்போது, நமக்கு ஏது தோல்வி...? இரவு எல்லாம் தூங்கவே கூடாது—தெரியுமா? மிஸ்டர் மன்மதநாத் உங்களுக்கும்தான் சொல்லுகிறேன். ஒரு காரை எடுத்துக்கொண்டு, பிரசாரம் செய்து கொண்டே......

(சந்திரசேகரன் வருகிறார்)

ரா :—வாணும், வாணும்...சந்துரு......

ச:—லக்ஷன் நாளைக்குப் போலே இருக்கு. பார்த்துக்கோங்கோ... என்ன, இந்தக் கோவில்களிலெல்லாம் விளக்குகள் போடச் சொல்லி......

ரா:—எனக்குஎலக்ஷனுகட்டும்...நிச்சயம் அந்தக் கோவிலுக்கு விளக்குகள் போடச்செல்லி...

ச :—அப்படி யெல்லாம் பயப்பட வேண்டிய அவசியமே இல்லை... ஆண்டவன் இருக்கார்.

ரா :—அது மாத்திரமில்லே—நம்கையிலே இருக்காரத்தைப் பண்ணிப் பார்த்து விட்டால், பிறகு இருக்கு தலை எழுத்து...இதோ ஸ்ரீ மன்மதன். இவர் பம்பாயில் பிரபல தலைவர், நமக்கு பிரசாரத்திற்காக இங்கே வந்திருக்கார்.—

ம :—எஸ்.

ரா :—என்ன சந்துரு! இந்தப்பக்கம், அத்தி பூத்தாற்போல,......

ச :—ஒண்ணுமில்லை. நம்ம டிவிஷன்லே ஒரு நூற்று இருபத்தி ஏழுபேர்....

ரா :—உம்....

ச :—ஏழாவது டிவிஷன்லெ ஒரு முன்னூற்று சொச்சம்...அதோடு கூட, அந்த நாதமுனிப் பக்கம் இருக்கிறவர்களிலே ஒரு இருநூற்று ஐம்பது....

ரா :—இருங்கோ, இருங்கோ, கொஞ்சம்......

ச :—ஐயம்பேட்டை பிற்போக்குக் கட்சியிலே ஒரு நூற்று ஏழு....

ரா :—இவ்வளவும் எனக்கா?

ச :—பின்னெ! ஏற்பாடு பண்ணி ஆனப்பறம் தானே வந்திருக்கேன்—ஆனா....

ரா :—என்ன நடுவிலே சந்தேகம் வந்து விட்டது?

ச :—ஒரு இருநூற்று ஐம்பது ரூபாய் செலவாகும் என் டிவிஷன்லே...

ரா :—அடேயப்பா....

ச :—ஓட்டுக்கள் அவ்வளவும் நம்ம பக்கம். ஆனா விஷயம் இன்னொன்று பாக்கி இருக்கிறது.

ரா :—என்ன?

ச :—இந்தப் பணத்தை எங்கிட்ட இப்போக் குடுங்கோ. நாளைக்குக் காலமே, விடிந்த உடனே ஒரு ஊர்கோலம், மேளதாளத்தோடே, உங்களை வைத்து! நான் கத்திக்கொண்டே வருகிறேன் ‘ராமசாமிக்கு ஜே!’ என்று!

ரா :—அடே யப்பா! அப்படி யொண்ணும் வாண்டாமையா!

ச :—உங்களுக்குத் தெரியவே தெரியாது விஷயம். அப்பொழுது தான் விஷயம் நடக்கும்! என்ன மிஸ்டர்......மிஸ்டர்—மன்மதன்?

ம :—எஸ்.

ச :—சிவ, சிவ! இந்த எழவு 'எஸ்' ஸைத் தவிர வேறு ஒன்று சொல்லுமே!

(மன்மதன் உள்பட எல்லோரும் சிரிக்கிறார்கள்.)

கு :—மன்மதன் இருக்கிறபோது நமக்கு ஏது விசாரம். பேச்சா பேசுவார். நெருப்பை யல்லவா கக்குவார்!

ச :—அப்ப, இதோ இன்னும் கால்மணியிலே வரேன்......டயமில்லே, வீண் பொழுது போக்க! பணத்தை ரெடியாக வைத்து கொள்ளுங்கோ. நீங்க எலக்‌ஷனைப்பற்றி கவலையே படவேண்டியதில்லே.

(போகிறான்.)

கு :—அப்போ, நாங்களும் வரலாமா? பணத்தைக் குடுத்தா, வேலையை ஆரம்பிக்க சௌகர்யமாக இருக்கும்.

ரா :—பாங்கிலே இருந்து......

கு :—அப்போ மன்மதனுக்கு ஒரு ஆயிரத்து ஐந்நூறு ரூபாயைக் குடுத்துடுங்கோ இப்போ. எலக்‌ஷன் சிலவுகளை சில்லரையாகக் கொடுத்துக்கொண்டால் போச்சு—(எழுந்திருந்தவர் உட்கார்ந்துகொண்டு) இதெல்லாம் ஒருவருடைய சௌகர்யத்தை இன்னொருவர் பார்த்துக்கொண்டு போக வேண்டும்......

ர :—(உள்ளே போய் பணத்தை எடுத்துக்கொண்டு வருகிறார்) இந்தாங்கோ. என்னமோ, உங்களை எல்லாம் நம்பித்தான் இதிலே இறங்கினேன்......

(நாதமுனி வருகிறார்)

அடேடே! நாதமுனியா? வரணும், வரணும். இப்போதான் சந்துரு சொன்னார்...

ந :—ஆம்! இப்பொழுது ஒரு நானூறு வோட்டுக்கள் வேறே சேர்ந்திருக்கு. இப்ப சட்டென்று ஒரு இருநூற்றைம்பது ரூபாய் இருந்தால் அவ்வளவும் நிச்சயம்......

ர :—பணமா! ஏது, அவ்வளவுக்கு எட்டாதுபோலிருக்கே!

ந :—அப்போ, சரி! அர்ஜண்டாக நான் போகணும். ஆனா நானூறு ஓட்டுன்னா கிள்ளுக்கீரை இல்லே. எலக்‌ஷனே ஜெயிச்சுப் போகும்!—(போக யத்தனிக்கிறான்).

ரா :—அடேடே, கொஞ்சம் இருங்கள், ஸார்....

(குமாரசாமி, மன்மதன்) :—அப்ப, நாங்கள் நேரத்தை இங்கே வீணாக்கப்படாது. போயிட்டு....

ரா :—சரி, செய்யுங்கோ!

(அவர்கள் போகிறார்கள்)

இதிலேயே எனக்கு மூவாயிரத்துக்குமேலே ஆயிடுத்து.

நா :—எல்லோரையும் அர்ஜண்டா அங்கேயே வசசிட்டு வந்திருக்கேன், பணம் இருந்தால் உடனே கொடுங்கள்; அவ்வளவு வோட்டுகளும் நமக்குத்தான்....

ரா :—நான் வரலாமோ, அங்கே!

நா :—எது, அவநம்பிக்கைப் படுகிறீர் போலிருக்கு! அங்கே பரமானந்தர் நின்று கொண்டிருக்கிறா. நான் ஜாடை, சமிக்ஞைகளால் ஓட்டர்களை சரிப்படுத்தி இருக்கிற சமயத்திலே, நீங்கள் வந்தால், அப்புறம் நமக்கேது ஓட்டு?

ரா :—ஐயையோ!

நா :—பின்னெ! குடுக்கறதுன்னு, உடனே பணம் குடுங்கோ! நாழியாச்சு. இதுக்குள்ளேயே, பரமானந்தர் என்ன பண்ணி இருக்கிறரோ அவர்களை!

ரா ;—இந்தாங்கோ—என்னமோ உங்களையே நம்பித்தான்....

நா :—ஒரு பயமுமில்லெ! எலக்ஷன் ஆனதும் அந்தக் கோவிலிலே இருக்கிற விளக்கு ஒன்றையும்...

ரா :—இரண்டாகப் பண்ணி—

நா :—ஆம், அந்தக் கோவிலிலே நீங்க வந்தப்புறம் விளக்கே எறியப்படாது! என்கட்சி ஆட்களிடம் அப்படியே சொல்லணும்—நான் போகட்டுமா....

(அவசரமாகப் போகிறன்.)

ரா :—சரி! அப்பா! இனிமேல் ஏழேழு ஜன்மங்கள் எடுத்தாலும், ஒரு எலக்ஷனுக்கும் நிற்கும் துரதிஷ்டத்தை மாத்திரம் எனக்குக் கொடுக்காதே, பகவானே!

(வாசவில் சத்தம் 'சார் மிஸ்டர் ராமசாமி')

ரா :—(வெளியில் கேட்காத குரலில்) ஐயையோ, இது என்ன கஷ்டமோ? டேய், முத்து—டேய்!

மு :—ஏன் அப்பா?

ரா :—அப்பா இல்லென்னு சொல்லிடு. போ. போ. ஓடு. (முத்து வாசவில் போகிறன்.)

(அப்பா இல்லை என்று சொல்லும் சத்தம் கேட்கிறது. ராமசாமிக்குப் போன உயிர் திரும்பி வர.)

உஸ்—அப்பாடா!

திரை உலகம்

தமிழ்

ஆனந்தா பிலிம்ஸ் என்று புதுக்கம்பெனி ஒன்று ஆரம்பமாகி இருக்கிறது. இவர்களுடைய படத்திற்கு சாந்தி என்று பெயர். இதில் அபலையில் நடித்த நடிகர்கள் நடிப்பார்கள். பிராக்ஜோதி ஸ்டுடியோ காமராமென் ஸ்ரீ ம[illegible] காட் இதை டைரக்ட் செய்வார்.

* * *

ஸ்ரீ. கே. பி. கேசவனும், எம். கே. ராதாவும் ஒரே படத்தில் நடிக்கப் போகின்றனர். படத்தின் பெயர். சூதாடி ஹனுமான் பிக்சர்ஸ், புவனேஸ்வரி பிக்சர்ஸ் இருவரும் சேர்ந்து தயாரிக்கும் படம் இது. படத்தின் வசனம் ஸினேரியோ எல்லாம் தயாராகி விட்டன.

* * *

ஸ்ரீ. ராஜாசாண்டோ ஹிந்தியில் நடித்த,மதலபிதுனியா, என்ற படத்தைத் தமிழில் எடுப்பதாக இருந்த அபிப்ராயத்தை விட்டு, குல்தீபக் என்ற படத்தை எடுக்கிறார்கள்.

* * *

மதுரை சாரதா பிலிம் கம்பெனியார் கோவை பிரிமியர் சினிடோனில் சதி-சுகன்யா என்ற படத்தை எடுக்கப்போகிறார்கள். இதில் ரம்பையின் காதலில் வெற்றி பெற்ற ஸ்ரீமதி. கே. வி. எல். வசந்தா நடிப்பார். ஸ்ரீ. சுந்தரராவ் நாட்கர்னி டைரக்ட் செய்வார்.

* * *

நாட்டிய கலைஞர் விஜயம்

உலகப்பிரசித்தி பெற்ற, இந்திய நாட்டிய நிபுணரான ஸ்ரீ. உதய் சங்கர் தன் கோஷ்டியுடன் இந்தியாவின் முக்கிய நகரங்களுக்கெல்லாம் விஜயம் செய்யப்போகிறார். முக்கியமாக அவர் ஸ்தாபித்திருக்கும் நாட்ய-கலாநிலயத்திற்கு நிதி சேர்ப்பதற்காகத்தான் இந்த சுற்றுப் பிரயாணம்.

* * *

தெலுங்கு

ஒய். வி. ராவும், காஞ்சனமாலாவும் நடித்து வரும் மள்ளி-பெள்ளி அடுத்த மாதம் முடிவடைந்து விடும். அடுத்தபடியாக ஒய். வி. ராவ் ஒரு தமிழ் படத்தில் நடிப்பார்.

* * *

அரோரா பிலிம்ஸார், தங்களுடைய படமான ஸ்ரீ சங்கர பகவத் பாதாள் படம் எடுத்து முடித்துக்கொண்டு நடிகர்களுடன் திரும்பிவிட்டனர். சீக்கிரம் முக்ய நகரங்களில் திரை இடப்படும். இதில் வி. என். சுந்தரம், மாஸ்டர் ராஜகோபாலன், மிஸ். பவானி முதலியவர்கள் நடிக்கின்றனர்.

ஹிந்தி

மினர்வா மூவிடோன் படமான புகாரை வெளிநாடுகளுக்கு அனுபப் ஏற்பாடு நடைபெற்று வருகிறது. இது ஜஹாங்கீரைப் பற்றிய சரித்திர சம்பந்தமான படம். இதில் பிரபல நடிகரான, ஸ்ரீ சந்திரமோஹன், ஷோராப் மோடி, மிஸ் குர்ஷித் முதலிய வாகள் நடித்துள்ளனர்.

* * *

நியூ தியேடர்ஸ்ஸாரின், ரஜத் ஜயந்தி என்ற படம், ஆங்கில ஹாஸ்ய நாவலாசிரியரான பி:\ஜி. வொட்ஹவஸ் என்பவருடைய ஒரு கதையைத் தழுவியதாகும். இதில் ஸைகால், ஜமுனா முதலியவர்கள் நடிக்கின்றனர். இதை ஸ்ரீ பருவா டைரக்ட் செய்கிறார்.

* * *

பாம்பாட்டிக்குப் பிறகு தேவகி போஸ் ஒரு படத்தை எடுப்பார். இதற்காக கதை பொறுக்கிக் கொண்டிருக்கிறார். அனேகமாக ஸ்ரீ சுதர்சன் எழுதிய கதை ஒன்றை படம் எடுக்கலாம் என்று தெரிகிறது.

* * *

டைரக்டர் நிதின்போஸ் தனது அடுத்த படத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து விட்டார். படத்தின் பெயர் அறிவிக்கப் படவில்லை. இதில் ஸைகால், லீலா தேசாய், நவாப் மூவரும் முக்கிய நடிகர்களாக இருப்பார்கள்.

* * *

ஸாதாமா பிக்சர்ஸ்ஸாரின் அடுத்த படத்திற்கு டைரக்டர் சர்வோத்தம் பாதாமி சினேரியோ எழுதி முடித்து விட்டார். கதை சரத் சந்திர சாட்டர்ஜீயின் கதை ஒன்றைத் தழுவியது. இதில் மோதி, சபிதா, இருவரும் நடிப்பார்கள்.

* * *

டைரக்டர் சாந்தாராம், எட்வின் ஆர்னல்ட் எழுதிய(லைட் ஆப் ஏஷியா) ஆசியாவின் ஜோதி, என்ற புத்தரின் சரித்திரத்தை, ஆங்கிலம், ஹிந்தி, மராத்தி, தமிழ், நாலுபாஷைகளில் எடுக்கப் போகிறார். இதற்காக நடிகர் வேட்டை ஆரம்பமாகியிருக்கிறது.

* * *

பம்பாய் டாக்கீஸாரின் நவஜீவனில் பிரசித்தி பெற்ற ஹன்ஸா வாட்கர், ராம்சுக்கல் இருவருக்கும் ஏற்றாற்போல் மற்றொரு கதையை ஸ்ரீ சரதிந்து பானர்ஜி எழுதி வருகிறார். சீக்கிரம் படம் எடுக்கும் வேலை ஆரம்பமாகும்.

* * *

ஸாகர் பிலிம் கம்பெனியார் புதிதாக நாலு படங்களை தயாரிக்கப் போகிறார்கள். இதற்கு டைரக்டர்கள், வீரேந்திர தேசாய், மஹபூப், மஹேந்திர டாகூர் கௌதம், நடிகர்கள், பிரேம் அதீப், சுரேந்திரா, யாகூப், அருண், சோபனாசம்ரத், பிப்போ மாயாபானர்ஜி, அனுராதா முதலியவர்கள்

* * *

எதிர் பாராதது, கோபால கிருஷ்ணா முதலிய படங்களில் நடித்த சிறுவனை, பரசுராம், இறந்துவிட்டான் என்பது வெறும் புரளி. அவன் சுகமாக இருக்கிறான், சீக்கிரம் ஒரு படத்தில் தோன்றுவான்.